Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 | திருவள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 16 சனிக்கிழமை (30.03.2014) பக்கங்கள் 20 | ஓசை - 180

## விசாரணைக்கான வசதியை ஏற்படுத்தமாட்டாது அரசு

### அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும் சர்வதேச சக்திகள் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிட ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாதென அரசாங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மனித உரிமைகள் விவகாரம் குறித்த ஜனாதிபதியின் பிரதிநிதியும், அமைச்சருமான மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளதாவது,

ஜெனிவாத் தீர்மானத்தை எப்போதுமே நாம் ஏற்கவில்லை. அதற்கு (19) ஆம் பக்கம் பார்க்க...

## விசாரணைக்கான ஒத்துழைப்பை இலங்கை அரசாங்கம் வழங்கும்

### நம்பிக்கை கொள்ளும் நவி.பிள்ளை



(ஜெனிவா)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைய விசாரணை மேற்கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்பை எதிர்பார்த்துள்ளதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையை எதிர்கொள்வதற்கான அரசியற் பலம் இலங்கையில் இருப்பதாக அல் ஜசீரா தொலைக் காட்சிக்கு வழங்கிய (19) ஆம் பக்கம் பார்க்க...

# இலங்கைத் தமிழர் நலன் சார்ந்தே ஜெனிவா தீர்மானத்தில் நடுநிலை



## விளக்கமளிக்கிறது இந்தியா

இலங்கைத் தமிழர்களின் நலன் காக்கவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்சிலில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் மீது நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் இந்தியா நடுநிலைமை வகித்ததாக இந்திய வெளியுற வுத்துறை அமைச்சகம் அளித்த விளக்கத்தில் தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியுறவுத்துறைச் செயலர் சுஜாதா சிங், தெரிவித்துள்ளதாவது,

இலங்கைத் தமிழர் நலன் மற்றும் முன்னேற்றம் காப்பதில் இந்திய அரசு எப்போதும் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் 2009 இல் முடிவுக்கு வந்தது, ஒருங்கிணைந்த இலங்கையில் அனைவரின் அரசியல் உரிமைகளையும் பாதுகாக்கும் வாய்ப்பினை அளித்துள்ளது.

இலங்கைத் தமிழர் உட்பட அனைத்து சமூகத்தவர்களின் நலன் மற்றும் உரிமைகளைக் காப்பதே, இந்திய அரசின் (19) ஆம் பக்கம் பார்க்க...

## நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த ஜெனிவா தீர்மானம் வழிவகுக்கும்

### வெள்ளை மாளிகை அறிக்கை

எல்லா இலங்கையர்களுக்கும் நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த, அர்த்தமுள்ள நடவடிக்கையை எடுக்கும்படி, இலங்கை அரசாங்கத்தைக் கோரும், இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவிப்பது தொடர்பான, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை அமெரிக்கா வரவேற்கிறது என வெள்ளை மாளிகையில், அதிபர் ஒபாமாவின் நேரடிக் கண்காணிப்பில் செயற்படும் தேசிய பாதுகாப்புச் சபையின் பேச்சாளர் கைற்லின் ஹேடன் வெளியிட்டுள்ள அறிக்கையில், தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

போரின் போது, இருதரப்பினராலும் இழைக்கப்பட்ட மோசமான மனிதஉரிமை மீறல்கள், துஷ்பிரயோகங்கள், குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்கவும், தொடர்ந்து மோசமடைந்து செல்லும் இலங் (19) ஆம் பக்கம் பார்க்க...

### பொதுச்சுகாதார பரிசோதகர் இடமாற்றம்

## முதல்வர், சுகாதார அமைச்சரின் தீர்மானத்திற்கு ஆளுநர் ஒத்திசைவு

வடமாகாண சுகாதார அமைச்சரும், உள்ளூராட்சி அமைச்சருமான முதலமைச்சரும் இணைந்து பொதுச் சுகாதார பரிசோதகர் தொடர்பில் எடுக்கும் தீர்மானத்திற்கு ஆளுநர் தனது ஒத்திசைவைத் தெரிவித்துள்ளதாக ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன் தெரிவித்தார்.

நேற்று வடமாகாண ஆளுநரின் செயலாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 14 ஆம் திகதி அரச மருத்துவ சங்கத்தினூடாக முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களது பணிகள் தொடர்பாக ஒரு தீர்மானம் சுகாதார (19) ஆம் பக்கம் பார்க்க...

## புத்திசாதுரியமான மக்கள் நாட்டை காட்டிக் கொடுக்கார்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை வாழ் மக்கள் மிகவும் புத்திசாதுரியமானவர்கள். எனவே அவர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டைக் காட்டிக் கொடுக்கமாட்டார்களென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மெதமுலுன டீ.ஏ.ராஜபக்ஷ வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்தில் தனது வாக்கினைப் பதிவு செய்த பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் ஜனநாயகம் தொடர்பில் பூரண தெளிவு நாட்டு மக்களுக்கு உள்ளதால் இந்தத் (19) ஆம் பக்கம் பார்க்க...

## மாகாண சபைத் தேர்தல் அறுபது வீத வாக்களிப்பு

### வன்முறைகள் பெருமளவில் குறைவு

நேற்று நடந்து முடிந்த மேல் மற்றும் தென் மாகாணசபைத் தேர்தலில் 55 முதல் 60 சதவீத வாக்குகளே அளிக்கப்பட்டுள்ளன.

வடமாகாணசபை தேர்தலுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது இது பாரிய வீழ்ச்சிப் போக்கானதென தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நடந்த வாக்களிப்பின் அடிப்படையில் அம்பாந்தோட்டையில் (19) ஆம் பக்கம் பார்க்க...

## தீர்மானத்தை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும் இலங்கை




### கூறுகிறது பிரிட்டன்

ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென பிரித்தானியா தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கை தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள கடுமையான தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது என பிரித்தானிய சிரேஸ்ட அமைச்சர் பார்னோஸ் வார்ஸீ தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் காணாமற் போனவர்கள் மற்றும் கடத்தப்பட்டவர்கள் தொடர்பில் எவ்வித தகவல்களும் இன்றி, அவர்களது உறவினர்கள் பெரும் அவலத்தை எதிர்நோக்கி வருகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே, நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் இந்த தீர்மானத்தை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென தெரிவித்துள்ளார்.

11



நிறைகுறைப்புக் கலை


18



உள்ளே

தரம் 5 புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள்

# சிறுமி துஷ்பிரயோகம் மேலும் ஒருவர் கைது



(யாழ்ப்பாணம்)

கொட்டடியில் இடம்பெற்ற சிறுமி மீதான துஷ்பிரயோகம் தொடர்பில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

கரு சிதைவடைந்த நிலையில யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 17 வயதுச் சிறுமியை துஷ்பிரயோகம் மேற்கொண்டதாக சந்தேகிக்கப்படும் 19 வயது நபர் ஒருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்தார்.

பின்னர் சிறுமி அளித்த வாக்குமூலத்தின் படி சிறுமியின் சகோதரியின் கணவர் ஒருவரும் (33 வயது) நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுமி தற்போது காப்பகத்தில தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ)

## புத்தாண்டிற்கு முன் நிரந்தர நியமனம்

# முல்லை சுகாதாரத் தொண்டர்கள்

# ஜனாதிபதியிடம் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் நீண்ட காலமாக தற்காலிக சுகாதார தொண்டர்களாக பணி புரிவோர், எதிர்வரும் தமிழ்-சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் தமக்கு நிரந்தர நியமனத்தை பெற்றுக்கொடுக்குமாறு கோரி ஜனாதிபதி மஹிந்த ராஜக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"இடப்பெயர்வுக்கு முன்பிருந்தே முல்லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுகாதாரத் தொண்டர்களாக பணிபுரிந்து வருகிறோம். கடந்த வருடம் 6ஆம் மாதம் எம்மோடு பணியாற்றிய பலருக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

எந்த தகமைகளும் இன்றி இருப்பவர்களுக்கு அந்த நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது. நாம் சுகாதார தொண்டர்களாக தொடர்ச்சியாக கடமையாற்றிக் கொண்டிருக்கும்போது வேறு தொழில்களில் ஈடுபட்டவர்கள் இந்நியமனத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

மாத்தளன், பொக்கணை, முள்ளிவாய்க்கால் பகுதிகளில் கோர யுத்தத்தின் மத்தியிலும் தொண்டர்களாகப் பணிபுரிந்த எமக்கு நியமனம் வழங்கப்படாமல், பாரபட்சமாக நாம் விடுபட்டது பெரும் வேதனைக்குரிய விடயமாகும்.

இலங்கையிலுள்ள மாவட்டங்களில் முழுமையாக யுத்தத்தால் பாதிக்கப்படும் அபிவிருத்தி பொருளாதாரம் என பல விடயங்களிலும் பின்தங்கி காணப்படுவது எமது முல்லைத்தீவு மாவட்டமே என்பது தாங்கள் அறிந்த விடயமே.

இந்நிலையில் நாம் தற்போது எடுக்கும் சம்பளம் 6000 ரூபாவை விட மேலதிகமாக செலவழித்து தான் இந்த தொண்டர் பணியை மேற்கொள்கிறோம்.

தற்போது பொருட்களின் விலையேற்றம், பிள்ளைகளின் கல்விச் செலவு என பாரிய பொருளாதார நெருக்கடியான நிலைமையை எதிர்நோக்கியுள்ளோம்.

அண்மையில் எட்டுப் பேருக்கு நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது. இச்செயல் எம்மை உளவியல் ரீதியாக பாதித்துள்ளது.

யாருக்கும் நியமனம் வழங்குவதை எதிர்க்கவில்லை. காலம் காலமாக பல இன்னல்களுடன் நியமனத்தை எதிர்பார்த்து காத்திருந்த எம்மை புறந்தள்ளிவிட்டது எமக்கு கவலை தரும் விடயமாகவுள்ளது.

அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி தமக்கு சார்ந்தவர்களுக்கே நியமனம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நியாய மற்ற பக்கச்சார்பான நிரந்தர நியமனத்தை உடனடியாக நிறுத்தி, நீண்ட காலமாக (10-15வருடங்கள்) மருத்துவ சேவையில் தொண்டர்களாக பணியாற்றி வரும் எம்மை முன்னுரிமைப்படுத்த வேண்டிய தேவை மனிதாபிமான முறையில் எமக்கே உள்ளது.

இவ்வளவு காலமாக தொண்டர்களாக நாம் வேறு வேலைகள் எதுவும் செய்யவில்லை. இதற்குப் பிறகு எந்த வேலையும் தேடமுடியாது. வயது கடந்தவர்கள் என ஒதுக்கப்படும் நிலையில் உள்ளோம்.

எனவே இந்நிலையினை கருத்திற்கொண்டு எமக்கு எதிர் வரும் தமிழ் சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் நியாயமான தீர்வினை பெற்றுத்தர ஆவன செய்யுமாறு தங்களை மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நியாயமான தீர்வினைப் பெற்றுக்கொடுக்காவிட்டால் அறவழியில் சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொள்ள உத்தேசித்துள்ளோம் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என்.வேதனாநாயகத்தின் ஊடாக, ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின் பிரதிகளை வடமாகாண முதலமைச்சர், வடமாகாண ஆளுநர், அமைச்சர் ரிஷாத் பதியுதீன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண சுகாதார அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

## பாதுகாப்புச் சபையின் வருடாந்த பொதுக் கூட்டம்

மன்னார் மாவட்ட சித்த ஆயுர்வேத வைத்தியர்களினது பாதுகாப்புச் சபையின் 15 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் பெற்றா வீதியில அமைந்துள்ள சித்த ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் தலைமை அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வைத்திய கலாநிதி எஸ்.செல்வமகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த பொதுக் கூட்டத்தில் யாழ்.மாவட்டத்தில் இருந்தும் மற்றும் பிற மாவட்டங்களில் இருந்தும் நூற்றுக்கு மேற்பட்ட சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் கலந்துகொள்ளவுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (5)

# சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்

சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் சண்முகம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்கின்றார்.

எதிர்வரும் 4 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளும் வெளிவிவகார அமைச்சர் வடமாகாண ஆளுநரை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

யாழ்பொதுநூல்நிலையத்திற்கு பல இலட்சம் ரூபா பெறுமதியான நூல்கள், கணனிகள் இளையோருக்கான கற்றல் பிரிவையும ஆரம்பித்து வைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது (இ)


## சிறு விளம்பரம்

**டயான பிளாஸ்ரிக் ரீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை

**இல.6 கனகசபை லேன்**
**சிவலிங்கப் புளியடி**
**வண்ணார் பண்ணை**
**யாழ்ப்பாணம்.**
**0212228680, 0775925088**

(C/3376)


# தீயில் கருகிய பெண் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுடன் பெண்ணொருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மாலை அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஐயனார் கோயிலடி கொடிகாமத்தைச் சேர்ந்த சாந்தினி வயது (35) என்ற பெண்மணியே இவ்வாறு தீக்காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

மனநிலையில் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று தனக்குத் தானே மண்ணெண்ணை ஊற்றி தீமூட்டியதாக விசாரணையின் போது உறவினர்கள் தெரிவித்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)


## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 243 | திகதி 2014.03.28

வெற்றி இலக்கங்கள்: 07 19 34 53 U

பரிசுத் தொகை ரூபா. 15,799,080/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| [illegible] | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| [illegible] | 50,000/- | 07 | 350,000/- |
| [illegible] | 1,000/- | 217 | 217,000/- |
| [illegible] | 1,000/- | 428 | 428,000/- |
| [illegible] | 60/- | 9554 | 573,240/- |
| [illegible] | 40/- | 5052 | 202,080/- |
| [illegible] | 20/- | 126199 | 2,523,980/- |
| [illegible] | 20/- | 18193 | 363,860/- |
| [illegible] | 15,799,080/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,658,160/- |

ரூபா. 16,045,900/-

2014.04.01ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை


(C/3359)


# வெளிநாட்டில் வேலைசெய்பவர்களுக்கு வீடமைப்புக் கடன் திட்டம்

(வேலணை)

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் மற்றும் சமுர்த்தி அதிகார சபையும் இணைந்து வெளிநாட்டில் தொழில் வாய்ப்பினை பெற்றுச் சென்றுள்ளவர்களுக்கான இலங்கையில் வீடொன்றினை அமைத்துக் கொடுக்கும் எண்ணத்தின் அடிப்படையில் வெளிநாட்டு வீரர்கள் வீடமைப்புக் கடன் திட்டம் என்ற பெயரில் வேலணை பிரதேச செயலர் பிரிவில் இருந்து வெளிநாட்டிற்கு சென்றுள்ள 5 பேருக்கு மூன்று இலட்சம் ரூபாவினை வழங்கவுள்ளது. (05)

**வடமாகாண ஆணழகனாகத் தெரிவுசெய்யப்பட்ட பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ்.சிவானந்தராஜா பருத்தித்துறை நகர சபை உள்ளூராட்சி வார பரிசளிப்பு விழாவில் கட்டழகர் காட்சியை காண்பிப்பதைக் காணலாம். (01)**



# நாகர் கோயில் மேற்கு கிராமத்துக்கு

# விரைவில் மின்சார விநியோகம்


வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் மக்கள் மீள் குடியேற்றம் நடைபெற்ற நாகர் கோயில் மேற்கு கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கான மதிப்பீட்டுப் பணிகள் நிறைவுபெற்றுள்ளன.

இப்பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்கும் நடவடிக்கைகள் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 2 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வரும் நிலையில் இப்பிரதேசத்தில் இதுவரை மருதங்கேணி, தாளையடி, உடுத்துறை, ஆழியவளை, கட்டைக்காடு, செம்பியன்பற்று, மாமுனை, அம்பன், குடத்தனை, மணற்காடு, நாகர் கோயில் தெற்கு ஆகிய பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாகர் கோயில் மேற்கு கிராமத்துக்கு இதுவரை மின்சார விநியோகம் வழங்கப்படாமையால் இக்கிராமத்தில் வாழும் மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நிலையில் இக்கிராமத்துக் கானமின்சாரம் விநியோகம் தொடர்பாக வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலர் திருலிங்கநாதனிடம் பொது அமைப்புக்கள் பிரஸ்தாபித்த நிலையில் தற்போது இக் கிராமத்திற்கான மின் விநியோகம் தொடர்பான மதிப் பீடுகள் நிறைவுபெற்று மின்சாரம் வழங்குவதற்கான வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (109)

# சாரதிகளின் அசமந்த போக்கால் வீதிகளில் கொட்டப்படும் கிரவல்



(யாழ்ப்பாணம்)

புகையிரத பாதை அபிவிருத்திப் பணிகளுக்கென கனரக வாகனங்களில் கொண்டு செல்லப்படும் கிரவல் வாகன சாரதிகளின் அசமந்தப் போக்கால் வீதிகளில் கொட்டப்படுவதால் வீதியில் போக்குவரத்துச் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

தற்போது யாழ்.புகையிரத நிலைய புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வருகின்ற வேளையில் கிரவல் ஏ9 வீதி ஆஸ்பத்திரி வீதி சந்தியில் பெருமளவு கிரவல் கொட்டுண்டுள்ளது. இதில் சைக்கிளில் பயணிப்போர் சறுக்கி விபத்துக்குள்ளான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு கொட்டப்படும் கிரவலை அகற்ற உரியவர்கள் எவரும் கவனம் செலுத்தவில்லை என மக்கள் பலரும் கவலை வெளியிட்டுள்ளனர். (இ)

# தங்க நகைகள் திருட்டு; தொல்புரத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட தொல்புரம் மத்தி சுழிபுரம் பகுதியில் கடந்த 26 ஆம் திகதி பிற்பகல் 6.30 மணி முதல் 7 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் 3,80,000 ரூபா பெறுமதியான 9 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளதாக 27 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுழிபுரம் தொல்புரம் முத்து அம்மன் கோவில் அருகில் உள்ள வீட்டில் திறந்திருந்த கதவினூடாக நுழைந்து இத் திருட்டில் ஈடுபட்டுள்ளதாக 27 வயதுடைய பத்மகுமார் காயத்ரி என்பவர் முறைப்பாடு செய்துள்ளார்.

திருட்டில் ஈடுபட்டவர்கள் மற்றும் திருடப்பட்ட நகை என்பன இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை.

சம்பவ தினத்தன்று முறைப்பாட்டாளர் மாலை 5.00 மணியளவில் வெளியில் சென்று 6.15 மணியளவில் வீட்டுக்கு வந்துள்ளார். பின்னர் இவரது தாலி, நான்கு வளையல்கள் என்பவற்றை தனது அறை மேசை மீது வைத்து விட்டு வேறு பணிகளில் ஈடுபட்டுள்ளார்.

மறுநாள் காலை 7.00 மணியளவில், திருமண வைபவமொன்றில் கலந்து கொள்ளத் தயாராவதற்கு சென்று பார்த்த போது நகைகளைக் காணவில்லை என்றும் இதனை எவரேனும் திருடியிருக்கலாம் என தான் சந்தேகப்படுவதாகவும் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (25)



நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட மூத்தவிநாயகர் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் "படையெடுக்கும் பார்த்தீனியத்திற்கு விடை கொடுப்போம்" என்னும் தலைப்பிலான பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கைகள் கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்றன. இதன்போது இளைஞர், யுவதிகள் பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதைக் காணலாம். (48)

# "பழங்குடியின்" நாய்ப்பிழைப்பு...




அதெல்லாம் சரி, இந்தத் தடவை ஜெனிவாவில் மனோ கணேசனைக் காணவில்லையே!

மனித உரிமைவாதி. காணாமற்போன உறவுகளின் (நான் உங்கள்) தோழன். ஈழத்தமிழர்களின் இன்னல் துடைக்க வந்த கொழும்புத் தமிழன் என்றெல்லாம் முழங்கும் இந்தச் சிங்கம் கொழும்புக் குகைக்குள் சிக்குப்பட்டு விட்டதா? அல்லது தேர்தல் குகைக்குள் சிக்கி விட்டதா?

தேர்தற் குகைக்குள்தான் சிக்கிவிட்டார் மனோ.

தேர்தல் என்று வந்தவுடன், மனோவுக்கு தன்னுடைய வெற்றியே முக்கியமாகப் போய்விட்டது. அதனால், அவர் தேர்தலுக்காக கொழும்பில் நின்று விட்டார். 'தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்குப் படக்கு என்று அடிக்கும்' என்று தெரியாமலா சொன்னார்கள்.

தன்னுடைய வெற்றி, தன்னுடைய அரசியல் எதிர்காலம் என்று வந்தவுடன் காணாமற்போனோரைப் பற்றியோ, வடக்குக் கிழக்குத் தமிழரின் பிரச்சினைகளைப் பற்றியோ, மனித உரிமைகளைப் பற்றியோ கவலைப்பட முடியவில்லை மனோவுக்கு.

தேர்தல் இல்லையென்றால், மனோவும் அவருடைய அணியின் தளபதிகளான குமரகுருபரன், குகவரதன் போன்றோரும் ஜெனிவாவிற்குப் படையெடுத்திருப்பார்கள். அவர்களுடைய சொந்தக்காரர்களுக்கும் 'வெள்ளவத்தை வசந்தம்' கடையின் பணியாரங்களையும் பலகாரங்களையும் சாப்பிட்டிருப்பார்கள்.

மனோவின் அணியும் ஊருலா, உலக உலா என்று ஒரு சுற்றுச் சுற்றி வந்திருக்கும்.

எல்லாத்துக்கும் இடைஞ்சலாக இந்தத் தேர்தல் வந்து குறுக்கே நின்று விட்டதே.

'மனோ குறூப்' ஜெனிவாவைக் கைவிட்டதைப்போல, மனோவையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் கைவிட்டு விட்டது.

கூட்டமைப்பு எம்.பி மார் தொடக்கம் அவர்களுடைய வீட்டில் நின்ற நாய்க்குட்டி வரை ஜெனிவாவுக்குப் போய்விட்டதால் மனோ தனித்தே தன்னுடைய தவிலை வாசிக்க வேண்டியதாகி விட்டது.

பொறுத்த கட்டத்தில் தனக்குக் கை கொடுக்காமல் எல்லோரும் தனக்குக் கழுத்தறுத்து விட்டார்கள் என்று மனோ பலரிடமும் புலம்பியிருக்கிறார்.

மனோவின் கவலைக்கும் நியாயம் உண்டு. ஜெனிவாவுக்குப் போனவையைத் தவிர, உள்ளூரில் நின்ற ஆட்களாவது மனோவின் மேடைகளில் தோன்றியிருக்கலாம். ஒரு அறிக்கையாவது மனோவை ஆதரித்து அவருக்காக உருப்படியாக விட்டிருக்கலாம் என்று மனோவின் ஆதரவாளர்கள் உட்கொதிப்போடிருக்கிறார்கள்.

உண்மைதான். மனோவை வெற்றியடைய வைக்க வேண்டும் என்று கூட்டமைப்பின் ஆட்கள் மெய்யாகச் சிந்திக்கவில்லை.

தமிழ்க் கூட்டமைப்பின் பாராளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல், மாகாணசபைத் தேர்தல் என்று பல தேர்தல் வெற்றிகளுக்காக வடக்கிலும் கிழக்கிலும் வாரக்கணக்காக ஓடியோடி உழைத்தவர் மனோ.

இதையெல்லாம் மனோ செய்தது, தனக்கொரு சந்தர்ப்பம் வரும்போது, கொழும்பில் இருக்கும் யாழ்ப்பாணத்தமிழரின் வாக்குகளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அப்படியே தனக்கு வாங்கித்தரும். தன்னுடைய மேடைகளில் ஏறி தனக்கு ஆதரவைத் தேடித் தரும் என்றே.

ஆனால், மனோவின் காலைக் கூட்டமைப்பு ஜெனிவாவைக் காரணம் காட்டி வாரி விட்டது. மனோ சிலவேளை வெற்றி வாய்ப்புகளைப் பெறலாம். ஆனால் அந்த வெற்றியில் கூட்டமைப்பிற்குப் பங்கில்லை.

கூட்டமைப்புக்காரரிடம் இதைப் பற்றிக் கேட்டால் அவர்கள் வேறு மாதிரிக் கதை சொல்கிறார்கள். 'மனோவுக்கு எப்படித் தன்னுடைய காரியம் முக்கியமோ அப்படித்தான் எங்களுக்கும் எங்களுடைய காரியங்கள் முக்கியம்' என்று.

அவர்களைப் பொறுத்தவரை அவர்களுடைய 'சுளகு'தான் முக்கியம். அது அவர்களுக்காகவே புடைக்க வேணும்.

இப்படியே ஆளுக்கு ஆள் தமக்குத் தமக்கென தனித்தனியாகச் 'சுளகு'களை வைச்சுக் கொண்டு, சனங்களுக்கு மட்டும் சொல்கிறார்கள் 'ஒண்டாக நில்லுங்கோ, ஒற்றுமையாக வாக்களியுங்கோ' என்று. 'அதாவது எல்லோருக்கும் 'ஒரு பொதுச் சுளகு'க்கு ஆதரவளியுங்கோ என்று கேட்கிறார்கள். இப்பிடிக் கேட்கிறதுக்கு எப்பிடித்தான் மனச்சாட்சி இடங்கொடுக்குதோ!?

என்னமாதிரியான ஆட்களோட எல்லாம் வாழ்ந்து தொலைக்க வேண்டியிருக்கு?

இதற்குள் இவர்களையே தலைவர்கள், வழிகாட்டிகள், திசைகாட்டிகள் என்று நாங்கள் நம்பவும் வேணும். இவர்களுக்குப் பின்னால் ஒன்று திரண்டு உலகத்தை நம்ப வைக்கவும் வேணும்.

சீ... என்ன நாய்ப்பிழைப்பப்பா!

தமிழராய் இருப்பது, தமிழராய் வாழ்வது என்றால் அது மெத்தப் பெரிய சாதனைதான்.

தமிழ்க்குடி பழங்குடி என்று தெரியாத்தானமாக யாரோ சொல்லிவிட்டார்கள் என்றே பல காலமாக எண்ணிக் கொண்டிருந்தேன். இப்ப இப்பதான் விளங்குது, தமிழ்க்குடியே பழுதாகிப் போன ஒரு பழங்குடிதான் என்று.

நேரம் என்பது செலுத்தப்பட்ட அம்பைப் போன்றது; அது திரும்பி வராது.

- ஜேஷி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தமிழர்களின் மூன்றாவது வெற்றி?

இந்த வருடத்தின் ஜெனிவாத் திருவிழா முடிந்துவிட்டது. மேற்கு நாட்டுத் தெய்வங்களின் அருள்பாலிப்பினால்தான் நமது மக்களுக்குத் தீர்வும் அபிவிருத்தியும் வரப்போகிறது என்று நாலு வருடங்களாக நமது மக்களை மேற்குத் திசைபார்த்துக் கண்ணீர்மல்கக் கைகூப்பியபடி வைத்திருக்கும் தமிழ்த் தலைவர்களும், திருவிழாவிற்குப் படையெடுத்துச் சென்றிருந்த கதை அறிவோம்.

திருவிழா முடிந்த கையோடு, போகும்போதே அவர்கள் கொண்டு போயிருந்த பணியாரங்கள் பலசரக்கு சாமான்களை எடுத்துக்கொண்டு, வெளிநாடுகளிலுள்ள சொந்தபந்தங்களின் வீடுகளுக்கு "விசிற்" போயிருக்கிறார்கள். அதெல்லாம் முடித்து அவர்கள் "வீரவேல் வெற்றிவேல்" என்றபடி வந்திறங்கி கதை சொல்லிக் கேட்கும்வரை நமக்குப் பொறுமை இல்லை.

அமெரிக்காவுக்காக இலங்கைக்கு எதிரான இந்தப் பிரேரணையை வடிவமைத்தது இவர்கள்தான் என்று இவர்களே சொல்லி ஏற்கனவே அறிந்துவிட்டோம். இதைத் தோற்கடிக்க இலங்கை அரசும் ஜெனிவாவுக்குப் படை அனுப்பியிருந்தது. தளபதிகளை மட்டுமே கொண்ட தமிழ்ப் படையும் சென்றிருந்தது.

இந்தப் போரில் மூன்றாவது முறையாகவும் தமிழ்ப் படையினருக்கே வெற்றி! பிரபாகரனால் முடிந்திராத சாதனை இது. 2009 இல் இலங்கை அரசு பெற்ற ஒரேயொரு வெற்றிக்குப் பதிலடியாக தொடர்ந்து மூன்று சர்வதேச வெற்றிகளைப் பெற்றுத் தமிழ்மக்களுக்குப் புளகாங்கிதம் தந்திருக்கிறது தமிழ்க் கூட்டமைப்பு!

இத்துடன் முடிந்துவிடாது. இன்னுமின்னும் வருடாவருடம் அது பருத்துறை வடை, பயத்தம் பணியார வகையறாக்களுடன் படையெடுத்துப் போய், அமெரிக்கப் பிரேரணைகளின் வெற்றியை இன்னும் பல தடவைகளுக்கு அது சாதித்துக் காட்டும் என்பதில் ஆருக்கும் சந்தேகமில்லை.

ஐ.நா. வின் சபைகளில் எப்பவும் அமெரிக்கா சார்பு நாடுகளோ அல்லது அதன் மிரட்டலுக்குப் பணியக்கூடிய நாடுகளே அதிகமிருக்கும்படி அமெரிக்கா பார்த்துக்கொண்டு வருவதால், அமெரிக்க நலன்களுக்கு இலங்கை பணியாதிருக்கும்வரை தமிழ்க் கூட்டமைப்பினருக்குத் தொடர்வெற்றியும் ஜெனிவாவில் நிச்சயம்.

"இந்த வெற்றிகளால் இங்குள்ள தமிழ் மக்களின் வாழ்வில் என்ன முன்னேற்றங்கள் நிகழும் எப்போது நிகழும்" என்று இந்த வெற்றிக் கொண்டாட்ட சமயத்தில் கேள்வி எழுப்புகிறவர்கள் தமிழ்த் துரோகிகளாகத்தான் இருக்க முடியும். என்றாலும், போர்க்களமாடித் திரும்பிவரும் வீரத் தளபதிகளிடம் 'சருவலுக்கு'ப் போகாமல், நமக்குள்ளாகவே யோசித்துப் பார்ப்பதில் தப்பில்லை.

13ஆவது திருத்தம், அதிகாரங்களை பகிர்தல், விசாரணைகளை மேற்கொள்ளல், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தல் என்று தீர்மானத்தில் உள்ள பெருமள்வு விடயங்கள் இலங்கை அரசு செய்ய வேண்டியவையே. வெளியில் உள்ள எவராலுமே நடைமுறைப்படுத்த முடியாது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்திடம் ஒப்படைக்கப்படும், போர்க்கால மீறல்கள் குறித்த விசாரணைகளையும் கூட, இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்பின்றி முழுமையாக முன்னெடுக்க முடியாது. பாதுகாப்புச் சபையைப் போன்று, ஐ.நா. மனித உரிமைகள் பேரவை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு அமைப்பு அல்ல. விசாரணைக் குழுவின் இலங்கை வருகையை அரசு தடுக்க முடியும்.

அடுத்த கட்டமாக அமெரிக்கா சார்பு நாடுகள் பொருளாதாரத் தடைகளுக்குப் போகலாம். அது ஆட்சிமாற்றத்திற்கான நிகழ்ச்சிநிரல் சார்ந்ததுதான். இந்தியா, ரஷ்யா, சீனா போன்றவற்றின் துணையோடு இலங்கையும் சவாலுக்குத்தான் நிற்கும் வாய்ப்புகள் அதிகம். ஆட்சியைக் காக்கும் நாட்டுமக்களது தேசிய உணர்வும் மிகைப்படவே செய்யும்.

அருகிலுள்ள "பெரியண்ணனும்" நிலைமைகள் ஒன்றும் அத்துமீறிப்போக விடமாட்டார் என்பதையே வாக்களிப்பில் காட்டியிருக்கிறார். இந்த சிக்கல்களுக்கிடையில் தமிழ்மக்களுக்கான வெற்றி எங்கே தெரிகிறது என்று, தெரிந்தவர்கள்தான் விளக்க வேண்டும்.

- *ஆசிரியர்*

# இலங்கையின் உற்பத்திகளுக்கு ஸ்கன்டிநேவிய நாடுகளில் சந்தை வாய்ப்பு

## நோர்வேயின் சலுகையால் அனுகூலம்

உலகின் மூன்றாவது மிகப் பெரிய சந்தையான ஸ்கன்டிநேவிய சந்தையின் நுழைவாயினுள உட்பிரவேசிப்பதற்கான வாய்ப்பு இலங்கைக்கு கிட்டியுள்ளது. இதற்கான அழைப்பு கடந்த 18 ஆம் திகதி நோர்வே குழுவினரால் விடுக்கப்பட்டுள்ளது. 75 மில்லியனுக்கு குறைவான மக்கள் தொகை கொண்ட மற்றும் குறைந்த நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளுக்கான நோர்வேயின் ஜீ.எஸ்.பி. உதவித் திட்டத்திற்கான தகுதியினை இலங்கையும் பெற்றுள்ளது. இதன் விளைவாக, இலங்கை இப்போது நோர்வே நாட்டின் நல்ல சந்தை அனுகலைப் பெறவிருக்கிறது என இலங்கைக்கான நோர்வே உயர் ஸ்தானிகர் கிரைட் லொச்ம் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் கேட்போர் கூடத்தில் கடந்த 18ஆம் திகதி ஜீ.எஸ்.பி. திட்டம் மீதான வாதம் தொடர்பிலான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உற்பத்திகளுக்கு பல சந்தைகள் மற்றும் புதிய வாய்ப்புகள் நோர்வேயினுடாக கிடைக்கவுள்ளன. நோர்வேயின் இறக்குமதிச் சந்தை திறன் 100 பில்லியன் அமெரிக்க டொலராக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக உலக நாடுகளுக்கிடையில் தனிநபர் ஒருவருக்கான மூன்றாவது மிக உயர்ந்த தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 55 ஆயிரம் அமெரிக்க டொலரினை கொள்வனவு செய்வதற்கான உயர்ந்த வலுவினைக் கொண்ட சந்தையாக நோர்வே கருதப்படுகிறது.

நோர்வே, ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடு அல்ல. ஆனால் சுவிஸ்சர்லாந்து, ஐஸ்லாந்து மற்றும் லிச்சென்ஸ்டீன் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய சுதந்திர வர்த்தக கூட்டமைப்பின் ஸ்தாபக உறுப்பினர். சுதந்திர வர்த்தகக் கூட்டமைப்பின் மூலம் நோர்வே, 25க்கு மேற்பட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை அதன் பங்காளிகளுடன் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது எனவும் நோர்வே உயர் ஸ்தானிகர் தெரிவித்தார். நோர்வே சந்தை தொடர்பில் உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்கவே நோர்வே சுங்கத்துறை அதிகாரிகள் இங்கு விஷேடமாக வந்துள்ளனர். அத்துடன் நோர்வே நாட்டில் இருந்து இலங்கைக்கு அதிக ஏற்றுமதி இருக்கும் என்று நான் நம்புகிறேன் என்றார்.

# யாழ்.குடாக்கடலில் அத்துமீறிய 58 இந்திய மீனவர்கள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்டுக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 58 இந்திய மீனவர்களையும் ஊர்காவற்றுறை நீதவான் நேற்று முன்தினம் விடுதலை செய்தார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய இம் மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இவர்களின் 14 படகுகளும் இவர்களிடம் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கடற்படையினர் இவர்களை இந்தியக் கடற்படையினரிடம் நேற்று ஒப்படைத்தனர்.

இம் மீனவர்கள் காரைநகர் மற்றும் கச்சதீவுக்கு அண்மித்த பகுதிகளில் அண்மையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ, 25)

## கஞ்சா கடத்திய படை அதிகாரிகள் தெற்கில் வசமாக சிக்கினர்

(கொழும்பு)

சட்டவிரோதமாக கஞ்சா கடத்தலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இரு அதிகாரிகள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பெருந்தொகை கஞ்சாவுடன் இராணுவக் குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கோனகங்கார பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ள இவ்விருவரும் கதிர்காமம் இராணுவப் பாசறையில் கடமையாற்றிக் கொண்டிருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிளி.பிரதேச சபையில் குழப்பம் செய்தியாளர்கள் வெளியேற்றம்

கிளிநொச்சி, கரைச்சி பிரதேசசபை வளாகத்தினுள் முன் அனுமதி பெறாமல் அலுவலக நேரத்தில் உள்நுழைந்து நிர்வாகச் செயற்பாடுகளுக்கு குழப்பம் விளைவித்த இரு ஊடக நிறுவனங்களின் செய்தியாளர்களை கிளிநொச்சி பொலிஸார் அவ்விடத்திலிருந்து வெளியேற்றினர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி பொதுச்சந்தையில் கடந்த 26 ஆம் திகதி செய்தி சேகரிப்பதற்காகச் சென்ற பிராந்தியச் செய்தியாளர் ஒருவர் மீது கரைச்சி பிரதேசசபை பணியாளர் ஒருவர் தாக்குதல் நடத்தியதுடன் குறித்த செய்தியாளரின் புகைப்படக் கருவிகளையும் அடித்து நொருக்கியுள்ளார்.

இதுதொடர்பில் பாதிக்கப்பட்ட செய்தியாளரால் அன்றைய தினமே கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் குறித்த செய்தியாளரும் மேற்படி சம்பவத்தில் நின்றிருந்த மற்றொரு ஊடக நிறுவனச் செய்தியாளரும், கரைச்சி பிரதேசசபை வளாகத்தினுள் நுழைந்து குறித்த பிரதேச சபை பணியாளருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கரைச்சிப் பிரதேசசபை செயலாளர் ந.கிருஷ்ணகுமார் கிளிநொச்சி பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளார். இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் குறித்த செய்தியாளர்களை பிரதேசசபையிலிருந்து வெளியேற்றியுள்ளனர்.

# நேபாளக் குழுவினர் வடக்கிற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

சமாதானம் மற்றும் மீள்குடியேற்றம் சம்பந்தமாக ஆராயும் நோக்குடன் நேபாளக் குழுவினர் வடக்கிற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்.வரும் இக் குழுவினர் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

தொடர்ந்து கிளிநொச்சிக்கும் செல்லவுள்ளதுடன் மறுநாள் 4 ஆம் திகதி இக்குழுவினர் முல்லைத்தீவிற்கும் விஜயம் மேற்கொண்ட பின்னர் கிழக்கு மாகாணம் நோக்கி பயணமாவர் எனத தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## உபகரணங்கள் வழங்கல்

(வேலணை)

'திவிநெகும' வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 40 பயனாளிகளுக்கு வாழ்வாதாரத் தொழில்களை மேற்கொள்வதற்காக எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை வேலணை பிரதேச செயலகத்தில் வைத்து பொருட்கள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (05)

# இலங்கையில் அமைதி பிறக்குமா? அரசியற் தீர்வு எட்டப்படுமா?

கருணாகரன்

இலங்கையில் அமைதி பிறக்குமா? என்ற இந்த எளிய கேள்விக்கு எப்படித்தான் தீவிரமாக யோசித்தாலும் எவராலும் பதிலைக் கண்டு விட முடியாது. ஜெனிவாவில் அமெரிக்கப் பிரேரணை வந்தாலென்ன, நவிப்பிள்ளையின் அறிக்கை முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, இலங்கை அரசின் மீது போர்க்குற்ற விசாரணை செய்யப்பட்டால் என்ன, மகிந்த ராஜபக்ஷ அணியினர் ஆட்சியை விட்டு நீங்கினால் என்ன, இலங்கையில் அமைதி கிட்டிவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. அல்லது இதெல்லாமே நடக்காமல் மகிந்த ராஜபக்ஷவே ஆட்சியில் நீடித்தாலும் இலங்கையில் அமைதி ஏற்பட்டு விடாது.

ஏனென்றால், இலங்கையின் பூகோள அமைவும் அதன் அரசியல் பொருளாதார, சமூகச் சிக்கல்களும் அந்த அளவுக்குக் கடினமானவை. இலங்கையைத் தமது செல்வாக்குப்பிடிக்குள் அல்லது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்று இந்தியா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளுக்கிடையிலான ஒரு முக்கோணப் போட்டி நடந்து கொண்டிருக்கிறது. இலங்கையின் பூகோள அமைவின் காரணமானது இந்தப் போட்டி. தமது பொருளாதார நலன்களை அடைந்து கொள்வதற்காக இந்த நாடுகள் பகிரங்கமாகவே இந்தப் போட்டியில் ஈடுபடுகின்றன. இந்தப் போட்டியின் பகடைக்காய்களாகவே இன்றைய இலங்கையர்கள் உள்ளனர்.

இந்த மாதிரியான ஒரு இருபக்கப்போட்டி 1980 களில் இலங்கையை மையப்படுத்தி நடந்தது. அதில் அதிக செல்வாக்கைச் செலுத்தியது இந்தியா. இதற்காகவே அது அப்பொழுது தமிழர்களுக்கு உதவுவதாகக் காட்டிக் கொண்டது. ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அன்றைய இலங்கை அரசு இந்தியாவையும் விட அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத்தின் பக்கம் நின்றதால் தமிழர்களுக்குச் சார்பாகத் தான் நிற்கிறேன் என்று காட்டி, இலங்கையில் தலையீடுகளைச் செய்து, நெருக்கடியை ஏற்படுத்திப் பணிய வைத்தது இந்தியா.

அதைப்போன்றதொரு நிலையே இன்றும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், இது முக்கோணப்போட்டி. அண்மைய ஆண்டுகளில் தீவிரமடைந்து வரும் சீனாவின் விரிவாக்கம் இலங்கையிலும் செல்வாக்கைச் செலுத்துகின்றது. இதைத் தடுத்துத் தமது செல்வாக்கை மையப்படுத்த வேண்டிய கட்டாயம் இந்தியாவுக்கும் மேற்குலகத்திற்கும் உண்டு. எனவே இந்தப் போட்டியில் இந்தியாவும் மேற்குலகும் தமிழர்களுக்கு உதவுவதாகக் காட்டி உள் தலையீட்டைச் செய்ய முனைகின்றன. இதற்காகவே அவை ஜெனிவாப் பிரேரணை தொடக்கம் மனித உரிமைகள் விவகாரங்கள் வரையில் சில விடயங்களைக் கையில் எடுத்திருக்கின்றன. பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இதன் மூலம் நீதி கிடைக்கும் என்றொரு ஊகமும் தோற்றப்பாடும் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. அதேவேளை இந்த விடயங்கள் இலங்கை அரசுக்கு நெருக்கடியைக் கொடுக்கக் கூடியது என்று உணர்த்தவும் பட்டிருக்கிறது.

தமிழருக்கான இந்த ஆதரவு(?) என்பது இந்த நாடுகளின் அரசியல் ஆதாயத்துக்கானதே தவிர அது உண்மையில் தமிழருக்கானதல்ல. இது பகிரங்கமான உண்மை. 1980 களில் எப்படி இந்தியா தனது நலனைப் பேணுவதற்காக தமிழரின் பேரில் போலிக் கண்ணீர் வடித்ததோ அப்படியானதே இன்றைய மேற்குலக - இந்தியக் கூட்டின் நீலிக்கண்ணீரும்.

**இலங்கையின் இந்தப் பிளவுண்ட நிலைக்கு ஒவ்வொரு தரப்பும் மாறி மாறிக் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கின்றன. ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கும் வரையில் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வைக் காணவே முடியாது. இதுதான் இலங்கையின் துயரம், இலங்கையின் சமகால வரலாறும் இதுவே. உண்மை நிலையும் இதுதான்.**



இதைத் தவிர்த்து இவை தமிழர்களுக்காக - இலங்கையின் சிறுபான்மையினருக்காக - இலங்கையின் ஜனநாயக மறுசீரமைப்புக்காக உண்மையாகப் பாடுபடுவதாக இருந்தால் இவை அரசியற் தீர்வை வலியுறுத்தியிருக்கும். அதைச் செயற்படுத்தியிருக்கும். ஜனநாயக மறுசீரமைப்பை நோக்கி இலங்கையில் பிற அரசியற் சக்திகளைப் பலப்படுத்தியிருக்கும். ஆனால், அப்படியெல்லாம் நடக்கவில்லை. இந்த நாடுகள் அதைச் செய்யப்போவதும் இல்லை.

ஏனென்றால், இனமுரண்பாடு இருந்தால்தான் இலங்கையில் இலகுவாகத் தலையீடுகளைச் செய்யலாம். அழுத்தங்களைக் கொடுக்கலாம். இப்படியெல்லாம் செய்வதற்கு இன முரண்பாடு அவசியம் தேவை. இனமுரண்பாடு தீர்க்கப்பட்டு, அரசியற் தீர்வு எட்டப்பட்டு விட்டால் இலங்கை அரசைக்கட்டுப்படுத்தும் நாணயக் கயிற்றை இழந்து விட வேண்டும். சோழியன் குடுமி சும்மா ஆடாது அல்லவா!

ஏறக்குறைய இலங்கையை ஒத்த பூகோள அமைவையும் அரசியல் யதார்த்தத்தையும் உடையதே பலஸ்தீனத்தின் உடையதும். அங்கும் எத்தகைய தீர்வும் எட்டப்படாமலே பிரச்சினைகள் நீண்டு செல்கின்றன. எனவே தமது ஆதிக்க நலனுக்காக சில மையங்களில் பிரச்சினைகளைத் தீர்ப்பதும் வளர்ப்பதும், உருவாக்குவதும் அவற்றைக் கையாள்வதும் இந்த நாடுகளின் பகிரங்க நடவடிக்கை ஆகும்.

இத்தகைய ஒரு தெளிவான உண்மையின் மத்தியிலேயே நாம் இலங்கையின் அமைதி குறித்துச் சிந்திக்கவேண்டியுள்ளது. இலங்கையின் வரலாற்றுப் புலத்தில் காணப்படும் இனமுரண் கூறுகள் விருத்தியாக்கம் செய்யப்படுவது பிராந்திய மற்றும் சர்வதேச அரசியல் தேவைகளின்பாற்பட்டதாகும். இதனால் இலங்கையின் அரசியல் பொருளாதார பண்பாட்டு நிலைமைகள் மிகச்சிக்கல் அடைந்துள்ளன. அரசு மற்றும் ஆட்சி அமைப்பு மட்டத்தில் மட்டுமல்ல, சமூக நிலைகளிலும் ஒவ்வொரு தனி மனிதரிடத்திலும் பிரிநிலைகள் வலுத்துக் காணப்படுகின்றன. இது இலங்கையின் அமைதிக்கு எதிரான ஒரு நிலையாகும். ஏறக்குறைய இலங்கையில் பொதுவாக அமைதிக்கு எதிரான உளநிலையே பலமடைந்திருக்கிறது. இதனால் இனரீதியாகச் சிந்திக்கும்போக்கு வலுத்துக்கொண்டே செல்கிறது.

சுதந்திரமடைந்த 1948 இல் இருந்ததை விட இப்பொழுதுதான் இன அடையாளத்தைப் பேணும் கட்சிகள் பெருகியிருக்கின்றன. மக்களும் இனக்கட்சிகளையே ஆதரிக்கிறார்கள். இந்த மாதிரியான சிந்தனை வளரும்போதும் பலமாக இருக்கும்பொழுதும் எத்தகைய தேசியப் பிரச்சினைகளுக்கும் எவராலும் தீர்வு காண முடியாது. இது ஏட்டிக்குப் போட்டியாகச் சிந்திக்கும் நிலையை உண்டாக்கியுள்ளது. இப்படி ஏட்டிக்குப் போட்டியாகச் சிந்திக்கும்பொழுது ஒருமித்து நின்று எதைப் பற்றிப் பேச முடியும்? எப்படி ஒருமித்த தீர்மானங்களை எடுக்க முடியும்?

இலங்கையின் இந்தப் பிளவுண்ட நிலைக்கு ஒவ்வொரு தரப்பும் மாறி மாறிக் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கின்றன. ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கும் வரையில் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வைக் காணவே முடியாது. இதுதான் இலங்கையின் துயரம், இலங்கையின் சமகால வரலாறும் இதுவே. உண்மை நிலையும் இதுதான்.

இதற்குள் இந்த இனவாதத்தை ஒரு இலாபகரமான முதலீடாக்கியே தங்களுடைய அரசியல் ஆதாயங்களைத் தேடிக் கொள்கின்றனர் உள்நாட்டில் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடும் ஒவ்வொரு தரப்பினரும். சிங்கள மக்களின் மனதை வெல்வதற்காக - அவர்களுடைய ஆதரவைப் பெறுவதற்காக சிங்கள அரசியல் வாதிகளும், தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக தமிழ் அரசியல் வாதிகளும், முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக முஸ்லிம் அரசியல் வாதிகளும், மலையக மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக மலையக அரசியல் வாதிகளும் இன அடையாளங்களை பேணுகிறார்கள். இதனால் இனமுரண்கள் கூர்மைப்படுத்தப் படுகின்றன.

இவ்வாறு இனமுரண்கள் கூர்மைப்படுத்தப்படும்போது இலங்கைச் சமூகங்கள் மேலும், மேலும் பிளவுண்டு செல்கின்றன. இந்தப் பிளவு தான் இலங்கையின் அரசியல் பிரச்சினைகளையும், பொருளாதார நெருக்கடிகளையும் உண்டாக்குகின்றன. இதுமட்டுமல்ல அமைதியைச் சிதைப்பதும் இந்தப் பிளவுதான். இலங்கை மக்களின் மகிழ்ச்சியான - முன்னேற்றகரமான வாழ்க்கையை நெருக்கடிக்குள்ளாக்குவதும் இந்தப் பிளவுகளே. ஆகவே இதிலிருந்து நீங்கும் வரையில் இலங்கைத்தீவில் அமைதியும் கிட்டாது. பொருளாதார முன்னேற்றமும் ஏற்படாது. தூக்குமரத்தின் கீழே விதிக்கப்பட்ட வாழ்க்கையைப் போல இலங்கையரின் விதி தொடரத்தான் போகிறது.

---

தமிழர்களாகிய நாம் இந்த நாட்டுக்குள் இலங்கையர்களாக வாழ உண்மையில் விருப்பம் கொண்டிருக்கிறோமா? அப்படி விரும்புகிறோமானால், வெளிநாடுகள் தலையிட்டு தமிழர்களுக்கு நீதி கிடைக்கச் செய்யவேண்டும் என்று நாம் கேட்பதை, இலங்கையர்களாக உள்ள மற்ற சமூகத்தினர் எப்படிப் பார்ப்பர் என்பதைத் தெரிந்திருக்கிறோமா? வடமாகாணத்திற்கு சுயாட்சியும் அதிகாரங்களும் கேட்கும் நாம், இந்த நாட்டிலுள்ள முஸ்லிம்கள், மலையகத்திலுள்ள தமிழர்கள், வடக்கிற்கு வெளியே நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள தமிழர்கள் (இவர்களனைவரும்தான் இங்குள்ள தமிழ்பேசுவோரில் மிகப்பெரும்பான்மையானவர்கள்) இந்த நாட்டின் அரசாங்கத்தால் எப்படி நடத்தப்படவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்? இனப்பிரச்சினை தீர்வதற்குரிய நியாயமான அதிகாரப்பகிர்வு முறைமை இங்கு ஏற்படுத்தப்பட்டு, இனங்கள் சேர்ந்து வாழ்வதுதான் எமது விருப்பமாகுமென்றால், அதற்கு நாம் நடந்துகொள்ள வேண்டிய முறை என்ன? குறிப்பாக, தமிழர்களாகிய எமது நடவடிக்கைகள் அனைத்தும் இனநல்லிணக்கத்தை நோக்கியதாகத்தான் அமைந்திருக்கிறதா? இதுபற்றிய விவாதக் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

– ஆசிரியர்.

# நான் தைரியம் இழக்கவில்லை மேற்கிற்கு அடிபணியப்போவதுமில்லை

## உள்ளக பொறிமுறை மீதே நம்பிக்கை



ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் இலங்கையின் யுத்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை செய்ய வேண்டுமென்று கோரி நிறைவேற்றப்பட்ட பிரேரணையை தாம் முற்றாக நிராகரிப்பதாக எ.எவ்.பி. செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேவேளையில் தான் எங்கள் நாட்டுக்கே உரித்தான நல்லிணக்கப்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்றப் போவதாகவும் அறிவித்தார்.

நாம் இந்தப் பிரேரணையை நிராகரிக்கிறோம். இது எங்கள் நாட்டின் நல்லிணக்கப்பாட்டு முயற்சிகளுக்கு தீங்கிழைக்கின்றது. இப்பிரேரணை எவ்வகையிலும் எமக்கு உதவப் போவதில்லை என்று ஜனாதிபதி பிரான்ஸ் தேசத்து செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தீர்மானம் குறித்து நான் மனத்தைரியத்தை இழக்கவில்லை. நான் ஆரம்பித்த நல்லிணக்கப்பாட்டு செயற்பாடு தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படும் என்று இந்தச் செய்திச் சேவைக்கு ஜனாதிபதி தொலைபேசி மூலம் அளித்த பேட்டியில் குறிப்பிட்டு ள்ளார்.

மேற்கத்திய நாடுகளின் அனுசரணையுடன் கொண்டு வரப்பட்ட இந்தப் பிரேரணைக்கு 23 வாக்குகள் ஆதரவாகவும் 12 வாக்குகள் எதிராகவும் கிடைத்து நிறைவேறியது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் இலங்கையில் இரு தரப்பினரும் மேற்கொண்டதாகக் கூறப்படும் பாரதூரமான வன்முறைகள், மனித உரிமை மீறல்கள் போன்ற குறறச்சாட்டுகள் குறித்து முழுமையான விசாரணை ஒன்றை நடாத்துவதற்கான காலம் இப்போது தோன்றியுள்ளது என்றும் ஜனாதிபதி கூறினார்.

இந்த வாக்களிப்பின் போது இந்தியா நடுநிலை அளித்தது அந்நாடு அமெரிக்கப் பிரேரணையை ஆதரிக்கும் என்ற எதிர்பார்ப்புக்கு மாறாக இடம்பெற்றிருப்பது குறித்து தாம் மனநிறைவடைவதாகவும், இந்தியா எங்களுக்கு எதிராக வாக்களிகக மறுத்தமை எங்கள் நாட்டுக்கு ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளது என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

நாம் உள்ளூரில் திட்டமிட்டு ஏற்படுத்திய நல்லிணக்க ஆணைக்குழு பல முக்கிய பரிந்துரைகளை இனங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக முன்மொழிந்துள்ளது என்றும் இதனை தமது அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் என்றும் கூறினார்.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு எங்களுக்கு சிறிது கால அவகாசம் அவசியம் என்று தெரிவித்த ஜனாதிபதி, நான் இதனை நடைமுறைப்படுத்துவற்கு தீர்மானித்திருப்பதை வலியுறுத்த விரும்புகிறேன் என்றும் கூறினார்.

அமெரிக்கா இந்தப் பிரேரணையை ஆதரிக்க உதவிகோரி பாரிய பிரசாரங்களை செய்ததனால் ஆரம்பம் முதல் இலங்கை ஆதரவற்ற நிலையிலேயே இருந்தது என்றும் ஜனாதபதி கூறினார். இந்த இலங்கைக்கு எதிரான பிரேரணை கொண்டுவருவதற்கு முன்னரே அமெரிக்காவுக்கு 12 இற்கு மேற்பட்ட நாடுகள் ஆதரித்த போதிலும் அன்று இலங்கை சார்பில் ஒரு நாடுகூட இருக்கவில்லை என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

# மனித உரிமை என்ற போர்வையில் மூக்கை நுழைக்கிறது மேற்குலகம்

## போர்க்கொடி தூக்குகிறது ஜே.வி.பி.

அரசாங்கம் வடிக்கும் முதலைக் கண்ணீருக்கு ஏமாற வேண்டாம் என மக்கள் விடுதலை முன்னணி நாட்டு மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது. நன்கு சிந்தித்து ஜெனிவாவில் இலங்கையை தோற்கடித்த இந்த அரசாங்கம் அதனைக் காட்டி தேர்தலை வெற்றிகொள்ள முயற்சிப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை தொடர்பில் மேற்குலக நாடுகள் நடந்து கொள்ளும் விதம் குறித்து தமக்கு விமர்சனம் இருப்பதாகவும் அதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

# கடனட்டை மோசடி மாலைதீவு பிரஜை கைது



போலி கடனட்டையை பயன்படுத்தி மோசடியில் ஈடுப்பட்ட வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று முன்தினம் மாலைதீவிலிருந்து இலங்கைக்கு வந்த நிலையில் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

30 வயதான மாலைதீவு பிரஜை ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# வீதி விபத்தில் மூவர் பலி, பலர் காயம்

கொழும்பு - கண்டி வீதியில் வரக்காபொல, மாகேன சந்திக்கருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் உயிரிழந்துள்ள அதேவேளை 9 பேர் காயமடைந்துள்ளனர்.

கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற டிப்பர், எதிர் திசையில் வந்த பஸ் வண்டியுடன் நேருக்கு நேர் மோதுண்டதில் இவ் விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போது வாகன சாரதிகள் இருவர் உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்த நபர்கள் தோலங்கமுவ, கடுகஸ்தோட்டை மற்றும் தெல்தெணிய பிரதேசங்களைச் சேர்நதவர்கள் என தெரியவந்துள்ளது.

# தட்டிக்கழிக்க முடியாத சுயாதீன விசாரணைக்கு வாய்ப்பு

## அரசு எதைக்கூறினாலும் அது செல்லாக்காசு



இலங்கையில் நடந்ததாகக் குற்றஞ்சாட்டப்படுகின்ற போர்க் குற்றங்கள் மீது ஒரு சுயாதீனமான சர்வதேச விசாரணைக்கு இப்போது அங்கீகாரம் தரப்பட்டிருக்கின்றது என்று அமெரிக்க செனட் வெளி விவகாரக் குழுவின் தலைவர் றொபேட் மெனனடெஸ் தெரிவித்துள்ளார்.

அந்த அங்கீகாரத்தைத் தந்த, ஐக்கிய அமெரிக்காவினால் இணைந்து பிரேரிக்கப்பட்டு, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினால் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை நான் வாழ்த்துகிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க நியூஜேர்சி மாநிலத்திற்கான அமெரிக்க மேலவையின் இரண்டு செனட்டர்களில் ஒருவரான றொபேட் மெனன்டஸ் நேற்று முன்தினம் வியாழக்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் நடந்த விடயங்களுக்கான பொறுப்புக் கூறல் என்பது எப்போதோ நடந்திருக்க வேண்டியது.

இருதரப்பாலும் செய்யப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக் கூறல், நீதி மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை ஒரு சுயாதீனமான ஐ.நா. விசாரணை இப்போது சாத்தியமாகும் என்று நான் நம்புகின்றேன்.

இந்த மாதத்தின் தொடக்கத்தில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு நான் ஒரு மடல் வரைந்திருந்தேன்.

இந்தப் பிரேரணைக்கான எனது ஆதரவை நான் அவருக்கு உறுதிப்படுத்தியிருந்ததுடன், பொது மக்கள் சமூகம் செயற்படுவதற்கான சூழலின் இயல்புத்தனமை இலங்கையில் குறைந்து வருவதையிட்டு எனது கவலையையும் நான் அந்தக் கடிதத்தில் அவரது கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தேன்.

இலங்கையிலே - ஊடகத் துறையினர், மனித உரிமைக் காப்பாளர்கள் மற்றும் சிறுபான்மை மதத்தவர்களுக்கான சூழல் மோசமடைந்து வருவதையிட்டு நான் எப்போதும் மிகவும் கவலையுடனும் கரிசனையுடனும் உள்ளேன்.

அதனால் முக்கியத்துவம் மிக்க இந்த விவகாரங்களைக் கவனத்தில் எடுத்து, அவற்றைச் சீர்படுத்துவதற்கான நடவடிககைகளையும் எடுக்குமாறு இலஙகை அரசாங்கத்தையும் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

# வங்கிச்சேவையில் உச்சம் வர்த்தக வங்கிக்கு முதலிடம்

சர்வதேச வர்த்தக சமூகத்துக்கு சேவை புரியும் முன்னணி சஞ்சிகையான குளோபல் பினான்ஸ் இலங்கையின் சிறந்த வங்கியாக கொமர்ஷல் வங்கியை மீண்டும் தெரிவு செய்துள்ளது.

இந்த கீர்த்திமிக்க தெரிவு கடந்த 21 வருடங்களாக உலகப் புகழ்பெற்ற குளோபல் பினானஸ் சஞ்சிகையால் வெளியிடப்படுகின்றது. 2014 ஆம் ஆண்டில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் 30 நாடுகளில் சிறந்த சந்தை வளர்ச்சியைக் கொண்ட வங்கிகள் வரிசையில் கொமர்ஷல் வங்கியின் பெயரும் பதிவாகியுள்ளது.

உள்நாட்டில் வங்கியின் தொடர்ச்சியான தலைமைத்துவச் செயற்பாட்டை இது மேலும் ஊர்ஜிதம் செய்துள்ளது.

2014 இல் கொமர்ஷல் வங்கியோடு இந்த வரிசையில் இடம்பிடித்துள்ள ஏனைய பிராந்திய வங்கிகளாக சீனா மெர்சன்ட் வங்கி(சீனா), இந்தியாவின் HDFC, ஷிஹ்னான் நிதிக் குழுமம் (தென்கொரியா) பொது வங்கி (மலேஷியா) ஸ்டேன்டர்ட் சார்டட் பேங்க் (நேபால), ஷியாம் கொமர்ஷல் வங்கி (தாய்லாந்து), மத்திய ஆசிய வங்கி (இந்தோனேஷியா) என்பன காணப்படுகின்றன.

சொத்துக்களின் வளர்ச்சி, இலாபத்தன்மை, மூலோபாய உறவுமுறை, வாடிக்கையாளர் சேவை, போட்டிமிக்க ஆக்கபூர்வமான உற்பத்திகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்த மதிப்பீட்டுத் தெரிவு மேற்கொள்ளப்படுகின்றது.

இவற்றோடு இம்முறை இந்தத் தெரிவுகளின் மிகத் துல்லிய பண்பு மற்றும் நம்பகத் தன்மை என்பனவற்றை மேலும் உறுதி செய்யும் வகையில் குளோபல் பினான்ஸின் கூட்டாண்மை வாசகர்களிடம் இருந்து மதிப்பீட்டு வாக்குகளும் பெறப்பட்டன.

கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரவி டயஸ் இது பற்றிக் குறிப்பிடுகையில் "நிதிச் சேவையைப் பொறுத்தமட்டில் குறிப்பாக நீடித்த செயற்பாடு மிக முக்கியமான அம்சமாகத் திகழ்கின்றது என்று கூறினார். அந்த வகையில் குளோபல் பினான்ஸ் தரவரிசையானது கொமர்ஷல் வங்கி பல ஆண்டுகள்ாகக் கடைப்பிடித்து வரும் அதன் வர்த்தக நிலைப்பாட்டுக்கான சுதந்திரமான முக்கியதோர் சான்றிதழாகவே அமைந்துள்ளது. இந்த அங்கீகாரத்தை கொமர்ஷல் வங்கியின் ஒட்டு மொத்தக் குழுவினரும் ஒரு மகுடமாகச் சூட்டிக்கொள்ள முடியும் என்று அவர் மேலும் கூறினார்.

# ஜெனிவாவில் அதிர்ச்சி வைத்தியம் அந்த மூன்று நாடுகள் மனம் மாறியது ஏன்?

(கொழும்பு)

ஜெனிவாவில் அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்த அந்த மூன்று நாடுகளின் கடைசி நேர மனமாற்றத்துக்கு காரணம் என்ன என்று புரியாமல் அரசின் மூத்த இராஜதந்திரிகள் வியப்பில் ஆழ்ந்துள்ளனர் என்று சிங்கள நாளிதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா உட்பட சில நாடுகள் கொண்டு வந்த பிரேரணை தொடர்பான வாக்கெடுப்பில், இலங்கை தோல்வியடைந்தமை குறித்து மிகவும் கவலையடைவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

தானும்ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் ஜெனிவாவுக்கான இலஙகையின் நிரந்தரவதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரிய



சிங்க உள்ளிட்ட பிரதிநிதிகள் சகல நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் நாட்டின நிலைமைகள் பற்றி விளக்கமளித்திருந்தோம்.

கடந்த 26 ஆம் திகதி இரவு வரை மூன்று முக்கிய நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக வாக்களிப்பதாக உறுதியளித்திருந்தன.

இறுதி நேரத்தில் அந்நாடுகள் தமது முடிவை மாற்றிக்கொண்டமை எமக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்காது நடுநிலை வகித்தமை ஜனாதிபதியும் நாடு அடைந்த வெற்றி என்றும் சஜின் வாஸ் குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.





வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் மகிந்தோதய திட்டத்தின் கீழ் 10 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள மாடிக்கட்டடத்திற்கான அடிக்கல்லை வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் கல்லூரி அதிபர் திருமதி.பாலராணி ஸ்ரீதரன் ஆகியோர் நாட்டி வைப்பதைக் காணலாம். (01)

# யாழ், காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில்

# சிறுகுற்றங்கள் புரிந்த 154 பேர் கைது

## யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழில்.சிறு குற்றங்கள் புரிந்த 154 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக யாழ்.பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யு. பி.விமலசேன நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

யாழ்.தலைமை பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ் மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்ட பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்றச் செயல்களின் பிரகாரம் யாழ்.நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 45 பேரும், அடித்துக் காயம் ஏற்படுத்திய 15 பேரும், சந்தேகத்திற்கிடமாக நடமாடிய 20 பேரும், மதுபோதையில் வாகனம் செலுத்திய 8 பேரும், சட்டவிரோத மது விற்பனை செய்த 09 பேரும், திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 7 பேரும், மோசடி செய்த ஒருவரும், வீதி விபத்தில் ஒருவரும், பாலியல் குற்றத்தில் 'ஒருவரும், மதுபோதையில் கலகம் விளைவித்த 6 பேரும், கத்தியால் வெட்டிய சம்பவத்தில் ஒருவரும் மற்றும் பாரிய குற்றம் புரிந்த 5 பேரும், களவுப் பொருட்களைத் தம்வசம் வைத்திருந்த 2 பேரும், சூழல் மாசடைதல் தொடர்பில் ஒரு வரும் வீட்டில் அத்துமீறி நுழைந்த ஒருவரும், ஏனைய குற்றங்கள் புரிந்த 31 பேரும் உட்பட மொத்தம் 154 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார்.

விடுதலை இயக்கத்துக்கு கொடுப்பதாக கூறப்படும் கோபி என்ற நபரின் நண்பனிடம் இருந்து துப்பாக்கி ரவைகள் மற்றும் கோபி சம்பந்தப்பட்ட தகவல்களை பெற்றுக் கொண்டுள்ளதாக யாழ்.பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர். டபிள்யு.பி.விமலசேன மேலும் தெரிவித்தார்.

யாழ்.தலைமைப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கடந்த வாரம் வட்டுக் கோட்டை பொலிஸ் பிரிவில் இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து தேடுதல் நடாத்தியதுடன், ஒரு இளைஞரை கைதுசெய்துள்ளனர்.

ஆனால், அந்த இடத்திற்குச் சென்ற அமைச்சர் தேடுதல் மற்றும் கைது தொடர்பாக கேட்ட போது வட்டுக்கோட்டைப் பொலிஸார் மறுப்புத் தெரிவித்துள்ளமைக்கான காரணம் என்ன என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

இதற்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 23 ஆம் திகதி வட்டுக் கோட்டைப் பகுதியில் வைத்து பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் மன்னாரைச் சேர்ந்த மாணிக்கம் காந்தலயன் என்ற இளைஞர் கைதுசெய்யப்பட்டார்.

அதன்போது, அனேகமான மக்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்ட கைதுசெய்யப்பட்டுள்ள நபர் நல்லவர் என்று கூறினார்கள்.

அதன்பின்பு அவரிடம் மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணையின் போது அனேகமான துப்பாக்கி ரவைகள் மற்றும் கோபி சம்பந்தப்பட்ட தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

அதனடிப்படையில், தேசிய பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கும் வகையில் யாராவது நடந்து கொண்டால், அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (25)

# போக்குவரத்து விழிப்புணர்வு விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

போக்குவர்த்து விழிப்புணர்வு தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ்.போக்குவரத்து பொறுப்பதிகாரி சமிந்த டி சில்வா தலைமையில் நடைபெற்ற போக்குவரத்து விழிப்புணர்வு கலந்துரையாடலில் வாகன சாரதிகள் போக்கு வரத்து நடைமுறைகளை கடைப்பிடிக்கத் தவறுவதால், வீதி விபத்துக்கள் அதிகமாக இடம்பெறுவதாக கலந்துரையாடலில் கலந்து கொண்டோர் குற்றஞ்சாட்டினர்.

அத்துடன், யாழ்.மாநகர சபையினர் போக்குவரத்து விழிப்புணர்வு கலந்துரையாடலில் கலந்து கொள்வதில்லை என்றும் யாழ்.போக்குவரத்துப் பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அதேவேளை, வாகனங்கள் வலது பக்கம் போகின்றவர்களுக்கு இடம்கொடுத்தும், போக்குவரத்து விதிமுறைகளை கடைப்பிடிக்கவும் வலியுறுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில், யாழ். மாவட்ட போக்குவரத்து பரீட்சையாளர் மற்றும் போக்குவரத்து பயிற்சி நிலைய உரிமையாளர்கள் மற்றும் போக்குவரத்து பொலிஸார் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (இ,25)

# ஆனைக்கோட்டை - காக்கைதீவு வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை பள்ளத்தடி வீதி தொடக்கம் காக்கை தீவு வரையிலான பிரதான வீதி கவனிப்பார் அற்ற நிலையில் மிகவும் சேதமடைந்து காணப்படுவதாகவும் இதனால் இரவு வேளைகளில் கடற்றொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த வீதியினை காக்கைதீவு கடற்கரைக்குச் செல்லும் மீனவர்கள் வடிக்கையாளர்கள் என பலரும் பயன்படுத்தி வருகின்றனர். அதுமட்டுமன்றி இந்த வீதியூடாக வாகனத்தை செலுத்தமுடியாமல் இரவு வேளைகளில் 1.5 கிலோ மீற்றர் தூரம் வரை நடந்தே வீதியைக்கடக்க வேண்டி ஏற்பட்டுள்ளது எனவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான இந்த வீதியை சம்பந்தப்பட்டவர்கள் புனரமைத்து தர ஏற்பாடு செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# "ஆலாபனை 115" இராகங்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளம் கலைஞர் மன்றம் நடாத்தும் "ஆலாபனை 115" இராங்கள் வெளியீடும் கர்நாடக இசை விருந்தும் இன்று மாலை 4 மணிக்கு மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பேராசிரியர் என் சண்முகலிங்கன் கலந்து கொள்ளவுள்ளார்.

# முரசின் இன்றைய பலன்




(30.03.2014 ஞாயிற்றுக்கிழமை)

விஜய வருஷம் பங்குனி மாதம் 16 ஆம் திகதி.
அமாவாசை / அமிர்தயோகம் .
உத்தரட்டாதி நட்சத்திரம் பி.இ. 02.19 வரை. பின் ரேவதி.
இராகு காலம் 04.43 - 06.13 வரை. சுபநேரம் 09.13 - 10.43 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மனச் சாட்சியுடன் செயற்பட்டதால் பிரச்சினைகளில் இருந்து விலகல், விவாக முயற்சிக்காக சம்பந்தப்பட்டவர்களுடன் ஆலோசனை செய்தல். |
| ரிஷபம் | குடும்பத்தில் நிலவிய பிணக்குகள் நீங்குதல், கடனில் ஒரு பகுதியை அடைக்க நண்பர் உதவுதல். |
| மிதுனம் | கட்டாயத்திருமணத்திற்கு பெற்றோர் வற்புறுத்தல், நிலுவை கிடைக்க பொலிஸ் நிலையம் சென்று முறையிடும் எண்ணம். |
| கடகம் | நட்டத்தை எதிர்நோக்குவதினால் பங்குத் தொழிலில் சேரவிழைதல், காசோலை திரும்பியதால் வங்கித் தொடர்பு ஈடாடும் நிலை. |
| சிம்மம் | டெங்கு ஒழிப்பிற்கு சுற்றாடலை சுத்தம் பேணும் நடவழக்கை, காரியம் முடிந்ததும் கைகழுவி விடுபவரைப் பற்றிய கவலை வாட்டல். |
| கன்னி | விவாக நிறைவேற்றத்திற்கு அலைச்சலும் அகால போஜனமும் தக்கவைத்தல், ஞாபக மறதியினால் பொருளை இழந்து போகும் நிலைப்பாட்டிருத்தல். |
| துலாம் | நிகழ்வுகளில் விருந்தினராக் துணைவியுடன் பங்குகொள்ளல், கண்டிக்க வெளிக்கிட்டதால் கவி நிலை தொலைதல். |
| விருச்சிகம் | ஏழரைச் சனி நிகழ்வதினால் பயணத்தில் ஈடுபடதயக்கம் ஏற்படல், நிலுவைகள் வரச்சுணங்குவதையிட்டு கவலைமிகக் கொள்ளல். |
| தனுசு | காலாவதியான பொருளைப் பெற்று துயரடைதல், நீர்க்கண்டத்தினின்றும் அருந்தப்பு. |
| மகரம் | ஆவணங்கள் தவறிப்போகும் அபாயமுண்டு, மாமனின் உறவு கெட்டு பதகளிப்பு ஏற்படல். |
| கும்பம் | கௌரவப்பதவி கிட்ட பிரமுகர்சிபார்சு செய்தல், பதவி முன்னேற்றம் பற்றிய செய்தி வந்தடைதல். |
| மீனம் | குடும்பத்தை முன்னேற்றும் பொருட்டு வெளியூர் பயணத்திற்கான முஸ்தீபு, மின்சார ஒழுக்கின் கேட்டினால் அருந்தப்பு ஏற்படல். |

## நான் செய்த பாக்கியம்



(புதுடில்லி)

கிரிக்கெட்டுக்காக மேலும் சேவையாற்ற கிடைத்த வாய்ப்பை நான் செய்த பாக்கியமாகவே கருகின்றேன் என சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

உயர் நீதிமன்றின் உத்தரவின்படி இந்திய கிரிக்கெட் சபையின் இடைக்கால தலைவராக பொறுப்பேற்கும் இந்திய அணியின் முன்னாள் கப்டன் சுனில் கவாஸ்கர் நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, உயர் நீதிமன்றம் என் மீது வைத்துள்ள நம்பிக்கையை மரியாதையுடனும், பணிவுடனும் ஏற்றுக் கொள்கிறேன். 7ஆவது ஐ.பி.எல். போட்டி முடியும் வரை இந்திய கிரிக்கெட் சபையின் இடைக்கால தலைவராக எனது பணியைச் சிறப்பாகச் செய்வேன். நான் மிகவும் விரும்பும் கிரிக்கெட்டுக்கு கூடுதலாக சேவையாற்ற கிடைத்த வாய்ப்பாக இதனைக் கருதுகிறேன் என்றுள்ளது.

## சூடு பிடிக்கிறது கால்பந்து காய்ச்சல் நுழைவுச் சீட்டு விற்பனை அமோகம்

உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளைக் கண்டுகளிக்க இரசிகர்கள் இது வரை 2.56 மில்லியன் நுழைவுச் சீட்டை வாங்கியிருப்பதாக சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பிபா) தெரிவித்துள்ளது.

பிரேசில் நாட்டில் எதிர்வரும் யூன் 12ஆம் திகதி முதல் யூலை 13ஆம் திகதி வரை நடைபெறவுள்ள உலகக்கோப்பை கால்பந்து போட்டிகளைக் காண்பதற்கு பிரேசில் இரசிகர்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இதுவரை விற்பனையான 2.56 மில்லியன் நுழைவுச் சீட்டுக்களில் பிரேசில் இரசிகர்கள் மட்டும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான நுழைவுச் சிட்டுக்களை வாங்கியுள்ளனர்.

அடுத்தபடியாக அமெரிக்க இரசிகர்கள் ஒரு இலட்சத்து 54 ஆயிரம் நுழைவுச் சீட்டுக்களையும், அவுஸ்ரேலிய இரசிகர்கள் 40 ஆயிரம் நுழைவுச் சீட்டுக்களையும், இங்கிலாந்து இரசிகர்கள் 38 ஆயிரமும், கொலம்பியா இரசிகர்கள் 33 ஆயிரம் நுழைவுச் சீட்டுக்களையும் வாங்கியுள்ளதாக பிபா தெரிவித்துள்ளது.




தற்போது நடைபெற்று வரும் நுழைவுச் சீட்டு விற்பனை ஏப்ரல் 1ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இறுதிக்கட்ட நுழைவுச் சிட்டை விற்பனை ஏப்ரல் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. முதலில் வருபவர்களுக்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் நுழைவுச் சீட்டுக்கள் வழங்கப்படுகிறது.

ரியோ டி ஜெனிரோ மற்றும் சாவ் பாலோ மைதானங்களில் நடைபெற உள்ள 13 போட்டிகளுக்குமான நுழைவுச் சீட்டைகள் அனைத்தும் விற்றுத் தீர்ந்துவிட்டதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதேபோல் ஜேர்மனி-போர்த்துக்கல் (சால்வடார், யூன் 16), இத்தாலி-உருகுவே (நடால், யூன் 24), இங்கிலாந்து-இத்தாலி (மனாஸ், யூன் 14) அணிகள் மோதும் போட்டிகளுக்கான நுழைவு சீட்டைகள் விற்பனையாகிவிட்டன.

### விசேட அழைப்பு

பாகிஸ்தானில் கால்பந்தை பிரபலப்படுத்தும் வகையில் ஆர்ஜென்ரீனாவின் முன்னாள் கப்டன் மரடோனாவுக்கு பாகிஸ்தான் கால்பந்து சம்மேளனத்தினால் விசேட அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கிரிக்கெட்டைப் போன்று கால்பந்து விளையாட்டையும் மேம்படுத்த வேண்டும் என தாம் விரும்புவதாகவும், இதன் முதற்கட்ட நடவடிக்கையாகவே மரடோனா அழைக்கப்பட்டிருக்கிறார் எனவும் பாகிஸ்தான் கால்பந்து சம்மேளனம் தெரிவித்துள்ளது.

## ஐ.சி.சி.யின் புதிய அதிகாரம் வளையுமா? பாகிஸ்தான்

(லாகூர்)

சர்வதேச கிரிக்கெட் சபையின் புதிய அதிகாரம் குறித்த சட்டம் தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளும் பொருட்டு, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நாளை லாகூரில் ஒன்று கூடுகிறது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் புதிய அதிகார சட்டத்தின் கீழ், இந்தியா, இங்கிலாந்து மற்றும் அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபைகளின் அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்துக்கு ஏற்கனவே தென்னாபிரிக்கா ஆதரவளித்திருந்த நிலையில், பங்களாதேஸும், இலங்கையும் தற்போது ஆதரவை வெளிப்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையிலேயே பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இந்த சந்திப்பை நடாத்தவுள்ளது.

இதன்போது தொடர்ந்தும் இந்த அதிகார சட்டத்துக்கு எதிர்ப்பை தெரிவிப்பதா? அல்லது ஆதரவளிப்பதா? என்பது தொடர்பில் மேலும் இதில் திருத்தங்களை கோருவதா? என்றும் தீர்மானிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

## கூட்டு முயற்சியால் தொடர் வெற்றி



(சிட்டகொங்)

எங்களது தொடர் வெற்றிக்கு வீரர்களின் கூட்டு முயற்சியே காரணம். ஒவ்வொரு வீரரும் தங்களது பங்களிப்பைச் சிறப்பாக வெளிப்படுத்தி வருகின்றமை மகிழ்ச்சி அளிக்கின்றது என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்துள்ளார்.

ஆடுகளத்தின் தன்மையும் இந்திய அணிக்கு ஏற்ற வகையில் இருக்கிறது. நீண்ட இடைவேளைக்குப் பின்னர் உலகக் கிண்ண ருவென்ரி -20 தொடரின் அரையிறுதிப் போட்டிக்குள் நுழைந்திருக்கிறோம். இது மகிழ்ச்சி தான். இனி வரக்கூடிய ஆட்டங்கள் தான் சவாலாக இருக்கும்.

இத்தொடரில் இதுவரை நான் துடுப்பாடவில்லை. இதனால் தான் முன்னதாக களம் இறங்கினேன். அடுத்துவரும் ஆட்டங்கள் ஹோலிக்கு கூடுதல் பொறுப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடரின் தரவரிசையில் முதலிடம் கிடைத்தமை எங்கள் வீரர்களின் திறமைக்குக் கிடைத்த பரிசாகவே கருதுகின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நாளைய தலைவன் மலிங்க

(சிட்டகொங்)

ருவென்ரி-20 உலக கோப்பை தொடரில், தாமதமாக பந்துவீசிய இலங்கை அணி கப்டன் சண்டிமாலுக்கு ஒரு போட்டியில் விளையாட தடை விதிக்கப்பட்டது.

சிட்டகொங்கில் நடைபெற்ற ருவென்ரி-20 உலக கோப்பை லீக் போட்டியில், இங்கிலாந்து அணி, இலங்கையை வீழ்த்தியது. இப்போட்டியில் இலங்கை அணியினர் தாமதமாக பந்துவீசியதாக, ஐ.சி.சி.யின் போட்டி நடுவர் டேவிட் பூன் கூறினார். இதனையடுத்து இலங்கை அணி கப்டன் சண்டிமாலுக்கு போட்டி சம்பளத்தில் இருந்து 20 சதவீதமும், மற்ற வீரர்களுக்கு 10 சதவீதமும் அபராதம் விதிக்கப்பட்டது.

முன்னதாக, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பல்லேகலேயில் நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில், இலங்கை அணி ஒரு ஓவர் தாமதமாக பந்துவீசியது. ஐ.சி.சி., விதிமுறைப்படி, 12 மாதங்களுக்குள் ஒரு அணி, இரண்டு முறை தாமதமாக பந்துவீசுவது குற்றம். இதனையடுத்து இலங்கை அணி கப்டன் சண்டிமாலுக்கு ஒரு போட்டியில் விளையாட ஐ.சி.சி., தடைவிதித்தது. இதனால் நாளை சிட்டகொங்கில் நடைபெறவுள்ள நியூசிலாந்துக்கு எதிரான கடைசி லீக் போட்டியில் சண்டிமால் விளையாடமாட்டார். இவருக்குப் பதிலாக லசித் மலிங்க கப்டனாக செயற்படுவார் என இலங்கை அணியின் முகாமையாளர் மைக்கல் டி சோய்சா தெரிவித்தார்.

## இன்றைய ஆட்டங்கள்

ICC WORLD TWENTY20 Bangladesh 2014

**பாகிஸ்தான் எதிர் பங்களாதேஷ்**
**இடம்: மீர்பூர் நேரம் : 3.00 மணி**

**அவுஸ்ரேலியா எதிர் இந்தியா**
**இடம் : மீர்பூர் நேரம் : 7.30**

## 6 விக்கெட்டுக்களால் வென்றது நியூசிலாந்து

(சிட்டகொங்)

நெதர்லாந்து அணிக்கெதிரான போட்டியில் நியூசிலாந்து அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

ஐந்தாவது உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடரின் குழு 1இல் அங்கம் வகித்துள்ள நியூசிலாந்து, நெதர்லாந்து அணிகளுக்கிடையிலான லீக் போட்டி நேற்று பங்களாதேஷின் சிட்டகொங்கில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய நெதர்லாந்து அணி பேர்ன், ரெம் கூப்பர் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் நெதர்லாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பேர்ன் 35 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 49, ரெம் கூப்பர் 23 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மில்ஸ், நதன் மக்கலம் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.



பதிலுக்கு 152 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணி கப்டன் மக்கலமின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வெற்றியைப் பதிவாக்கியது. இறுதியில் நியூசிலாந்து அணி 19 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கப்டன் மக்கலம் 45 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 65 ஓட்டங்களைப் பெற்றார். இதேவேளை, நேற்றைய தினம் 21 ஓட்டங்களை மக்கலம் பெற்றவேளை ருவென்ரி-20 அரங்கில் 2ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த முதல் வீரர் என்ற மைல் கல்லை எட்டினார். மற்றும் வில்லியம்ஸன் 29, அண்டர்சன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கக்ரென் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் மக்கலம் தெரிவு செய்யப்பட்டார்.

# கனிஷ்ட மெய்வல்லுநர் பதிவுக்கு முந்துங்கள்

(கொழும்பு)

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினால் ஏற்பாடு செய்துள்ள மெய்வல்லுநர் போட்டி மே மாதம் 2, 3 மற்றும் 5ஆம் திகதிகளில் சுகததாச விளையாட்டரங்கத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

16, 18, 20 மற்றும் 23 வயதின் கீழ் இப்போட்டிகள் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளில் திறமைகளின் அடிப்படையில் எதிர்வரும் யூன் மாதம் 12-15 வரையில் இடம்பெறவுள்ள கனிஷ்ட பிரிவு மெய்வல்லுநர் போட்டிகளுக்காகவும் யூலை மாதம் 22-27 வரை அமெரிக்காவில் இடம்பெறவுள்ள உலக கனிஷ்ட பிரிவுக்கான மெய்வல்லுநர் போட்டிகளுக்கான போட்டியாளர்களைத் தெரிவு செய்யும் நிகழ்வு இடம்பெறும்.

இதற்கான விண்ணப்பப்படிவங்கள் ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுவதோடு விண்ணப்பப் படிவங்கள் இலங்கை மெய்வல்லுநர் விளையாட்டு சங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# யாழ்.நகரிலிருந்து கொழும்பை நோக்கி 708 கிலோ மீற்றர் சைக்கிள் பந்தயம்

## தேசிய இளைஞர் சேவை மன்றம் ஏற்பாடு

(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடாத்தப்படவுள்ள 708 கிலோ மீற்றர் கொண்ட சைக்கிள் ஓட்டப் போட்டி எதிர்வரும் இரண்டாம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பமாகி கொழும்பில் நிறைவடையவுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இலங்கை இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து இலங்கை சைக்கிள் ஓட்ட சம்மேளனத்தின் மேற்பார்வையுடன் ஒழுங்கு செய்துள்ள Tour De Srilanka Youth - 2014 சைக்கிள் ஓட்டப்போட்டி, ஏப்ரல் 02ஆம் திகதி முதல் 06ஆம் திகதி வரை, யாழ்ப்பாண நகரில் இருந்து பயணத்தை ஆரம்பித்து, மகரகம, இலங்கை யூத் நிலையத்துக்கு அருகாமையில் நிறைவுறும்.

ஐந்து கட்டங்களாக நடைபெறவுள்ள இவ் யூத் சைக்கிள் ஓட்டப்போட்டி 708.5 கிலோ மீற்றர் கொண்டதாக நடைபெறவுள்ளது. இதன் முதலாவது கட்டம் யாழ்ப்பாணம் முதல் வவுனியா வரையான 140.5 கி. மீ. தூரம் கொண்டதாகவும், இரண்டாவது கட்டம் மதவாச்சி முதல் வாரியப்பொல வரையான 119.8 கி. மீ. தூரம் கொண்டதாகவும், மூன்றாவது கட்டம் குருநாகல் முதல் அவிசாவளை வரையான் 143.7 கி. மீ. தூரம் கொண்டதாகவும், நான்காவது கட்டம் இரத்தினபுரி முதல் மாத்தறை வரையான 145 கி. மீ. தூரம் கொண்டதாகவும், ஐந்தாவது கட்டம் மாத்தறை முதல் மகரகம வரையான 160 கி. மீ. தூரம் கொண்டதாகவும் நடைபெறவுள்ளது.

ஏப்ரல் 02 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக ஆரம்பமாகும் இச்சைக்கிள் போட்டிகள் அவ்வவ் கட்டங்கள் அந்த அந்த இடங்களில் குறித்த நாட்களில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். தேசிய சைக்கிள் மற்றும் சர்வதேச சட்டதிட்டங்களுக்குவிதிமுறைகளுக்கு மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டல் விசேட சட்டதிட்டங்களுக்கு ஏற்ப நடைபெறும். இச்சைக்கிள் ஓட்டப்போட்டியில் பங்குகொள்வோர் இலங்கை சைக்கிள் சம்மேளனத்தின் நடப்பாண்டுக்கான அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்தே போட்டிகளில் பங்குபற்ற முடியும்.

முழு போட்டியிலும் குழுக்களில் முதல் இடத்துக்கு 75,000 ரூபாவும், இரண்டாவது இடத்துக்கு 50,000 ரூபாவும், போட்டியில் இளைய வீரர்களுக்காக. 50,000 ரூபாவும், முழு போட்டியில் வெற்றிபெறும் வீரர்களுக்கு 15,000 ரூபாவும் வழங்கப்படும். முழு போட்டியில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இடங்கள் படிமுறைப்படி 12,500,7500 மற்றும் 5000 ரூபாவும், சுற்றுகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதலாவது இரண்டாவது, மூன்றாவது இடங்களுக்கு 10,000, 7,500, 5,000 ரூபாவும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.





சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் வருடாந்த இளைஞர் விளையாட்டு விழா நேற்று முன்தினம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. கரப்பந்தாட்டம் நடைபெறுவதையும், வெற்றியீட்டிய ஒருவருக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் ஐ.தவேந்திரன் பரிசில் வழங்குவதையும் காணலாம். (48)

# புத்தாண்டை முன்னிட்டு

## கிரிக்கெட், கால்பந்து போட்டிகள்

புத்தாண்டை முன்னிட்டு அரியாலை சனசமூக நிலையம் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையில் மென்பந்து கிரிக்கெட் மற்றும் கால்பந்தாட்டப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

இப்போட்டிகள் எதிர்வரும் 13,14ஆம் திகதிகளில் அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மென்பந்து கிரிக்கெட் போட்டி 13ஆம் திகதியும், கால்பந்தாட்டப் போட்டி 14ஆம் திகதி நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கால்பந்தாட்டப் போட்டிகளில் அரியாலை சனசமூக அணி, யாழ். மத்திய கல்லூரி, ஊரெழு றோயல், பாசையூர் சென். அன்ரனீஸ் அணிகள் மோதவுள்ளன.

இப்போட்டித் தொடர்களின் இறுதிப் போட்டி 14ஆம் திகதி பிற்பகல் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# பிரதேச மட்ட வலைப்பந்தாட்டம் அல்வாய் நக்கீரன் சம்பியன்



(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச அணிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியில் அல்வாய் நக்கீரன் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த வாரம் நடைபெற்றது.

ஆறு அணிகள் பங்குகொண்ட இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் அல்வாய் நக்கீரன் அணியும், பருத்தித்துறை ஐக்கிய அணியும் மோதின.

ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய அல்வாய் நக்கீரன் அணி 19:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று பிரதேச மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டி நிகழ்வில் பலர் கலந்து கொண்டு போட்டியாளர்களை உற்சாகப் படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (48)

# தெல்லிப்பளை மகாஜனவில் இன்று இளைஞர் கழக விளையாட்டு விழா




(தெல்லிப்பளை)

வலி. வடக்கு தெல்லிப்பளை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் வருடாந்த இளைஞர் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.30 முதல் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கால்பந்து, கயிறுழுத்தல் தடகளப் போட்டிகள் நடைபெறவுள்ளன. கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி இளைஞர் கழக அணி யும், சேந்தாங்குளம் இளைஞர் கழக அணியும் மோதவுள்ள அதேவேளை, கயிறுழுத்தல் இறுதிப் போட்டியில் பன்னாலை கணேசன் இளைஞர் கழக அணி யும் வலி. வடக்கு தெல்லிப்பளை பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியும் மோதவுள்ளன.

வலி. வடக்கு இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வலி. வடக்கு தெல்லிப்பளைப் பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன், கௌரவ விருந்தினராக தெல்லிப்பளை பிரதேச செயலக நிர்வாக கிராம அலுவலர் கு.சாந்தசீலன், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி சி.சண்முகவடிவேல், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அதிபர் ம.மணிசேகரம், தெல்லிப்பளை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் சி.வல்லவக்குமரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்களைக் கலந்து கொண்டு பேர்ட்டியாளர்களை உற்சாகப்படுத்துமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (48, 93)

# மகுட பங்கம்

## ஏழுமலைப்பிள்ளையின் ஆறு நாடகங்கள்

- அழகேந்தி -



"தீ" படத்தில் ரஜனிகாந்துடன் நடித்தவர் ஏழுமலைப்பிள்ளை. அதற்கு முன், ஈழத்துத் திரைப்படம்



"சுமதி எங்கே" மற்றும் சிங்களத் திரைப்படங்களான "வனகெதகெல்ல", "பலிக நிம" போன்ற திரைப்படங் களிலும் நடித்தவர் ஏழுமலை. 15 வயதில் 1968 இல் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தபோது, இலங் கையின் முதல் தமிழ்த்திரைப் படத்தை இயக்கிய ஹென்றி சந்திரவன்ஸவினால் சினிமாத் துறைக்கு அறிமுகப்படுத் தப்பட்டு, சினிமாவில் பல காலம் பணியாற்றியிருந் தாலும் ஏழுமலைக்கு நாடகங்களே உயிர்மூச்சு.

அடிப்படையில் ஏழுமலை ஒரு நாடக நடிகரே. ஏறக் குறைய ஐம்பது ஆண்டு களாக அவர் நாடகத்தோடு வாழ்ந்து வருகிறார். நாடகம் நடிப்பதும் நெறிப்படுத்து வதும் நாடகத்தைப் பார்ப்ப தும் தமிழ்ச் சமூகத்தில் குறைந்து கொண்டு போனா லும் ஏழுமலைப்பிள்ளையின் நம்பிக்கையும் நாடக ஆர்வமும் குறையவில்லை. இரத்தத்தில் ஊறியது, சித்தத்தில் கலந்தது என்றெல்லாம் சொல்வார் களே அதைப்போல ஏழுமலைப்பிள்ளையின் ஆன்மா நாடகத்தில் பிணைந் தது. ஆன்மாவை உண்மை யாக ஈடுபடுத்தி உழைக்கும் கலைஞர்களின் நம்பிக்கை ஒருபோதும் குறையாது.

ஏழுமலைப்பிள்ளையின் தந்தை சின்னார் வல்லிபுரம் (மயிலிட்டி) அந்த நாட்களில் மிகப் பெரும் நாடகக் கலைஞ ராக இருந்தார். 1920 களில் தென்னிந்திய நாடகக் கலை ஞர்களான வேல்நாயக்கர், பி.எஸ். கோவிந்தன் போன்றோரின் வழிப்படுத்தலில் சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திரா, வள்ளிதிருமணம், பக்த நந்தனார், நல்லதங்காள், குலேபகாவலி, பூதத்தம்பி, கோவலன் கண்ணகி போன்ற நாடகங்களிலெல்லாம் நடித்தவர். முறையாகச் சங்கீதம் பயின்றவர். முறையாகச் சங்கீதம் பயிலவில்லை என்றால், அப்பொழுது நாடகங்களில் நடிக்க முடியாது. இசைநாடகங்களுக்கு சங்கீதமே உயிர் நாடி. பாடும் திறனுள்ளவரே நாடகத்தில் ஜொலிக்க முடியும். வதிரி அண்ணாசாமி தொடக்கம் நடிகமணி வி.வி. வைரமுத்து வரை பலரோடு அரங்காடிய வர் சின்னார் வல்லிபுரம்.

சின்னார் வல்லிபுரத்தின் இரண்டு பிள்ளைகளும் தந்தையைப்போல சிறிய வயதிலேயே நாடகக்களமேறிய வர்கள். ஏழுமலையின் அண்ணன் குணலிங்கம் கலையரசு சொர்ணலிங்கம், கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத் துரை ஆகியோருடன் எல்லாம் நாடகச் செயற்பாடுகளில் ஈடுபட்டார். இந்த வளமான பின்னணி ஏழுமலையை முழுமையான ஒரு நாடகக் கலைஞராக் கியது.

1976 இல் யாழ்ப்பாணம் திருநெல்வேலி யில் இயங்கி வந்த "நாடக அரங்கக் கல்லூ ரியில் தாஸீஸி யஸ், குழந்தை ம. சண்முகலிங்கம் ஆகியோரிடம் பயிற்சி பெற்றார். பிறகு, காங்கேசன் துறை கருணானந்த சிவம், பொன். கணேசமூர்த்தி, தையிட்டி மு. தேவராசா ஆகியோரின் நாடகங்களிலும் பலாலி, மாவிட்டபுரம், கட்டுவன் போன்ற இடங்களில் இயங்கிய நாடக மன்றங்களிலெல்லாம் அதிகமாக நடித்த ஏழுமலை யாழ்ப்பாண இடப்பெயர்வோடு வன்னிக்குச் சென்றார். அங்கும் அவர் ஓயவில்லை. அங்கே தானே சில நாடகங்களை எழுதவும் தொடங்கினார். பிறருடைய நெறிப்படுத்தலிலும் நடித்தார். இடையிடையே குறும்படங்களில் நடித்திருந்தா லும் நாடகங்களே ஏழுமலை யின் கனவும் வாழ்வும்.

ஏழுமலையின் இந்தக் கனவின் வெளிப்பாடாகவே இப்பொழுது "மகுட பங்கம்" என்ற நாடக நூல் வெளியாகி யிருக்கிறது. இதுவரையிலும் ஏழுமலை எழுதிய நாடகங் களில் ஆறு நாடகங்களைத் தேர்வு செய்து "மகுட பங்கம்" என்ற தலைப்பில் கரைச்சி கலாசாரப் பேரவையினர் இந்த நூலை வெளியிட்டிருக் கிறார்கள். இந்தப் பணியை கரைச்சிப் பிரதேச சபையின் செயலர் கோ. நாகேஸ்வரனும் கலாசார உத்தியோகத்தர் கவிஞர் கு.றஜீவனும் முன்னின்று செய்திருக்கின்றனர்.

மகுட பங்கத்தில் ஆறு நாடகங்கள் உள்ளன. யாரும் இந்த நாடகங்களை நடிக்க லாம். குறிப்பாகப் பாடசாலை மாணவர்களின் நாடகப் பயிற் சிக்கும் அரங்கேற்றத்துக்கும் இந்த நூல் நல்ல பயன்தரும். முதல் நாடகம் "முருகனின் முதற்போர்" என கந்தபுராணத் தை அடிப்படையாகக் கொண் டது. இரண்டாவது நாடகம், இராமாயணக் கதையைச் சாரமாக எடுத்துக் கொண்டு தன்னுடைய கற்பனையையும் இணைத்து புதிய மாதிரி "நடுகல் பேசும்" என எழுதியிருக்கிறார் ஏழுமலை.

மூன்றாவது நாடகம், பண்டி தமணி க. கணபதிப்பிள்ளையின் "சங்கிலியன்" என்ற நாடகத் தைத் தழுவி எழுதப்பட்டுள் ளது. நான்காவது நாடகம், புகழ்பெற்ற "ஜூலியஸ் சீஸர்" நாடகத்தின் தமிழாக்கம். ஐந்தாவது, அசோகச் சக்கர வர்த்தியின் கதை. சாம்ராட் அசோகன் என்ற கலைஞர் கருணாநிதியின் நாடகத்தின் பாதிப்பில் எழுதப்பட்டது என இதைப்பற்றி ஏழுமலை சொல்கிறார். இந்த நாடகத்தில் ஏழுமலை சாம்ராட் அசோகனா கவே நடித்துமிருக்கிறார். ஆறாவது நாடகம், அரிச்சந்திரன் கதை - வாய்மை காத்த மன்னன்.

"மகுட பங்கம்" நடிப்பதற்கு மட்டுமல்லாமல் வாசிப்பதற்கும் ஏற்றது. கதை, அதற்கான பாத்திரங்கள், காட்சிகள், அவற்றின் நிகழ் முறை என்பவற்றை இந்தப் பிரதியின் வழியே வாசிப்பவரின் மனதில் பதிக்கின்றன ஏழுமலையின் நாடகப் பிரதிகள். எளியமொழி, உணர்ச்சிகரமான வார்த்தை கள். வாசிப்புக் கவர்ச்சியான மொழிநடை. நமது சூழலில் நாடகப் பிரதிகளின் வருகை மிகக் குறைந்து விட்டது என்பதைக் கருத்திற் கொண்டு தான் ஏழுமலை இதை இப்படி எழுதியிருக்கிறாரா?

புராண இதிகாச சரித்திர நாடகங்களில் அதிக ஈடுபாட்டு டன் நடித்த ஏழுமலைப்பிள் ளைக்கு அந்த மாதிரியான நாடகங்களில் ஈடுபாடிருப்பது இயல்பே. ஆனால், அவர் சமூக நாடகங்களிலும் நவீன அரங்குகளிலும் பங்காற்றி யிருக்கிறார் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

"எதிர்த்து வந்தோரை வெட்டி வீழ்த்தி, இரத்த ஆற்றில் மிதக்கவிட்டு என் வீரத்திற்கு விளம்பரமாக நின்ற வீரவடுக் களே அழிந்து போங்கள் என் மார்பை விட்டு.....

நான் இன்றுடன் மாறி விட்டேன்... கலிங்க நாடே கருணை காட்டு... கர்வம் கலைந்த அசோகன் மண்டியிடுகிறேன்... பொன், பொருள், மண், அரசுரிமை, மணிமுடி, செங்கோல், சாமரம், சிங்காசனம், பணிப்பெண்கள் அத்தனை அதிகாரங்களும் எனக்கு வேண்டாம். இன்று முதல் உருவத்தில் உருவத் தில்தான் நான் சக்கரவர்த்தி... உள்ளத்தில் பிட்சு மூர்த்தி.... போதி மரத்துப் புத்தர் பெருமானே...!" என்று "மகுட பங்க"த்தில் அசோகச் சக்கரவர்த்தி சொல்வது ஏழு மலை சொல்வதா அல்லது ஏழுமலையின் மூலமாக நம் காலம் சொல்வதா!

# எதிர்பார்க்கும் நம்பகரமான விசாரணையின் பின்னால்...!

- சாலையூரான் -

பாதிப்புக்குள்ளான தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பது உறுதியாகி விட்டது என்பதை உரத்து கூறிக்கொண்டிருப்ப வர்கள் இந்த விவகாரத்தில் எத்தகைய பொறுப்பை எடுத்துக்கொண்டு செயற்பட தயாராக இருக்கிறார்கள் என்பது புரியாத புதிராகவே இருக்கிறது.

இந்த நிலைமைகளின் ஊடே உள்நாட்டில் தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் பரஸ்பரம் சக இனத்தவரை பற்றி எத்தகைய மன நிலை உருவாக்கப்படுகிறது என்பது ஒரு முக்கியமான விவகாரமாகும்.

தென்னபிரிக்காவின் அனுபவத்தில் இருந்து நோக்கும்போது சம்பவங்களின் உண்மைத் தன்மையை இனங்காணுதல் என்கிற முயற்சியின் மத்தியில், இருதரப்பினரிடையேயும் நல்லிணக்கமும் வலியுறுத்தப்படுவது மிக முக்கியமான முன்னுதாரணம்.

உண்மையை கண்டறிவதற்கும் அதனூடான நல்லிணக்கத்துக்குமான தென்னாபிரிக்காவின் அனுபவத்துடன் இலங்கையில் இடம்பெறும் சமகால முன்னெடுப்புகளை நோக்கும் போது இந்தச் சர்வதேச தலையீட்டினூடே உள்நாட்டில் உருவாகி இருக்கும் உணர்ச்சிக் கொந்தளிப்பை இருதரப்பிலும் அதிகாரத்திலிருப்பவர்கள் தமது அரசி யல் நோக்கங்களுக்கு பயன்படுத்த



முயற்சிப்பது வருந்தத்தக்க ஒரு நிலைமையாகும்.

இந்தப் போக்கு, உள்நாட்டில் ஒரு நெருக்கடியான நிலையை நோக்கி முழு மக்களையும் தள்ளிவிட நிர்ப்பந்திக்கும் பாங்காக இருக்கிறது..

ஏனெனில் விசாரணைகள் நடைபெறவுள்ளதாக கூறி பிரசாரம் செய்பவர்களால் உருவாக்கப்படும் மகிழ்ச்சி ஆரவாரம் என்பது, இந்த விசாரணையால் பாதிக்கப்படப்போகும் தரப்பு மீதான அனுதாப அலையை அந்த மக்களிடம் உருவாக்கும் வலிந்த ஒரு முயற்சியாக தென்படுகிறது.

உள்நாட்டில் அரசியல் அதிகாரத்தை தொடர்ந்தும் தக்கவைப்பதற்கான களநிலவரமென்பது இனத்துவ நிலைப்பட்டு பிரச்சினைகளை அணுகும் போக்கை கொண்டிருக்கும் போது இந்த வெளிச்சக்திகளின் தலையீட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடைக்கும் ஏதாவது நன்மை அல்லது நிவாரணம் என்பது எதிர்நிலையில் வைக்கப்பட்டிருக்கும் தென்னிலங்கை தரப்புக்களால் எவ்வாறு உணரப்படும் அல்லது ஆட்சியாளர்களால் எவ்வாறு உணர்த்தப்படும் என்பது ஒரு முக்கியமான விடயமாகும்.

தமிழ்த் தரப்பு மேற்கொள்ளும் பிரசார வழிமுறைகளிலிருந்து நோக்கும்போது இந்த விசாரணை களால் பாதிக்கப்படப்போகும் பாதுகாப்பு தரப்பையும் அதிகாரத்திலிருப்பவர்களையும் பற்றி பெரும்பான்மை இன மக்கள் மத்தியில் இனத்துவ உணர்வு எவ்வாறு தொழிற்படு மெண்பதை எம்மால் சரியாக அனுமானித்துக்கொள்ள முடியும்.

அவ்வாறு நிகழுமெனின், சர்வதேச விசாரணையை நாட்டின் முழு மக்களுக்கும் நன்மை பயக்கும் ஒரு செயன் முறையாக மாற்றியமைக்க வேண்டிய தார்மீக கடப்பாடு தமிழ் தரப்புக்கு முக்கியமாக உண்டு.

அவ்வாறு சிந்திப்போமாயின், பாதிப்புக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதைவிட பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பதோடு அரசுத்தரப்பின் ஒத்துழைப்புடன் அந்த மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான புதிய சூழலை தோற்றுவிப்பதே பொருத்தமான நடவடிக்கையாக இருக்க முடியும்.


இதுவே பாதிப்புக்குள்ளான மக்களின் வாழ்வை முழுமையாக மீள்கட்டியெழுப்புவதற்கான மன விருப்பத்தை அதிகாரத்தில் இருப்பவர்கள் மத்தியிலும் தென்னிலங்கையிலும் தோற்றுவிப்பதற்கான மிகச்சிறந்த முன்னோடி நடவடிக்கையாக இருக்க முடியும்.

ஆனால் இடம் பெற்ற உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களும் அவ்வாறே இந்த விசாரணையின் பேரால் அரசியல் பிழைப்பு நடாத்துபவர்களும் உள்நாட்டில் உருவாக்க முனையும் புதிய சூழல் எத்தகையது என்பதுதான் கவலையளிக்கும் விடயமாக இருக்கிறது.

# உடல்நிறை குறைப்பு ஒரு இலகுவான கலை

5

**சி. சிவன்சுதன்**
**மருத்துவ நிபுணர்.**
**[நன்றி: Jaffna Diabetic Centre]**



பசிவந்திட பத்தும் பறந்து போகும் என்று சொல்லுவார்கள். இது முற்றிலும் உண்மையானதே. காரணம் மூளையில் இருக்கும் பசியுடன் சம்பந்தமான பகுதி மிகவும் வல்லமை பொருந்தியது. நிறை குறைக்க முற்படும் காலத்திலே ஒருவருக்கு பசி ஏற்படுமாயின் அது அவரின் நிறை குறைப்பு சம்பந்தமான அறிவையும் நிறைகுறைக்க வேண்டும் என்ற ஆர்வத்தையும் அற்றுப்போகச் செய்துவிடும். எனவே இந்தக் காலப்பகுதியிலே பசி ஏற்ப்படாதவாறு நிறை அதிகரிப்பை அதிகம் ஏற்படுத்தாத உணவுகளை அடிக்கடி உண்பது அவசியமாகும்.

சிலவகையான உணவுவகைகளை அதிகளவு உண்டாலும் சிறிதளவு நிறை அதிகரிப்பையே ஏற்படுத்தும். ஆனால் வேறுசிலவகையான உணவு வகைகள் சிறிதளவு உட்கொண்டாலும் கூட பெருமளவு நிறை அதிகரிப்பை ஏற்படுத்த வல்லன. இதற்கு காரணம் அவற்றில் அடங்கியிருக்கும் சக்தி அல்லது கலோரிப்பெறுமானம் ஆகும்.

சுவையான மலிவான கலோரிப்பெறுமானம் குறைந்த ஊட்டச்சத்து நிறைந்த உணவுவகைகளை தெரிவுசெய்து உண்பதும் ஒரு கலையே. இதுவே நிறை குறைப்பின் அடிப்படைத்தத்துவமுமாகும். இத்துடன் உடற்பயிற்சியும் செய்துவருவோமாயின் எமது இலக்கை விரைவில் வெற்றிகரமாக அடைய முடியும்.

உதாரணத்திற்கு சிறிதளவு உட்கொண்டாலும் அதிகளவு நிறை அதிகரிப்பை ஏற்படுத்தவல்ல எண்ணெயின் நிறை அதிகரிப்பு வீதத்தை மற்றைய சில உடனவுப் பொருட்களுடன் ஒப்பிடுவோமாயின் வெறும் ஒரு மேசைக்கரண்டி எண்ணெயின் நிறை அதிகரிப்பு வீதமானது 400 இளநீருக்கு அல்லது 250 கிராம் பயற்றம் காய்க்கு அல்லது 250 கிராம் ஜம்பு பழத்திற்கு அல்லது 100 கிராம் இறைச்சிக்கு அல்லது 550 கிராம் வத்தகைப்பழத்திற்கு அல்லது 250 கிராம் வெண்டிக்காய்க்கு, அல்லது 150 கிராம் அப்பிளிற்கு அல்லது 100 கிராம் மீனுக்கு அல்லது 750 கிராம் காளானிற்கு அல்லது 350 கிரம் முருங்கைக்காய்க்கு அல்லது 100 கிராம் இறாலிற்கு சமமானதாகும்.

எனவே எண்ணெயை தவிர்த்து அதற்கு பதிலாக இவற்றை உண்போமாயின் இவை பசியை நல்ல முறையில் கட்டுப்படுத்த உதவுவதுடன் உடலுக்கு ஆரோக்கியத்தையும் ஊட்டச்சத்துகள் பலவற்றையும் வழங்கும்.


மேலே குறிப்பிடப்பட்டிருப்பது வெவ்வேறு வகை உணவுகளின் நிறை அதிகரிப்பு வீதங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான ஒரு உதாரணமே. அத்துடன் ஒரு சிறிதளவு எண்ணெய் எவ்வளவு பெரிய நிறை அதிகரிப்பை ஏற்படுத்தவல்லது என்பதை அறிந்துகொள்வதற்கும் உதவும். மிக்சர், வடை, ரோல்ஸ், ரொட்டி போன்றவற்றில் பொதிந்திருக்கும் எண்ணெய் நம்மில் பலருக்கு நிறை அதிகரிப்பை ஏற்ப்படுத்துவதற்கு ஒரு முக்கிய காரணமாக அமைகின்றது.

நிறை குறைப்பு முயற்சியில் ஈடுபடுபவர்கள் சுவைக்காகவும் பசியை போக்குவதற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் அடிக்கடி உண்ணக்கூடிய உணவுவகைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

பழவகை குறிப்பாக கொய்யா, தோடை, அப்பிள், ஜம்பு, விழாம்பழம், பப்பாசி, வாழைப்பழம், நாவல் போன்றன அத்துடன் எல்லாவிதமான மரக்கறிவகைகள் குறிப்பாக அகத்தி, முருங்கை, கோவா, கரட், பீற்றூட், தக்காளி, முள்ளங்கி, கீரைவகை, பயிற்றை, வெங்காயம், போஞ்சி, சிறகவரை, லீக்ஸ் போன்றவை. இத்துடன் பானங்களான மோர், இனிப்பூட்டிகள் சேர்த்த சீனி சேர்க்காத தேனீர், கோப்பி, பால், தேசிக்காய் தண்ணீர், குத்தரிசி கஞ்சி, தோடம்பழச்சாறு, இளநீர் போன்றவற்றை குறிப்பிடலாம்.

(தொடரும்)

# மண்ணில் நல்லவண்ணம் வாழ்க!



நாம் எதையும் மேம்போக்காகவே பார்க்கிறோம். ஆழமாக நோக்குவதில்லை. செவியில் விழுவது அனைத்தையும் கேட்கிறோம். அவற்றின் உட்பொருளைக் கவனிப்பதில்லை. உணவை வேகமாக உண்கிறோம். சுவைப்பதில்லை. விரல்களால் தொடுகிறோம். உள்ளத்தால் உணர்வதில்லை. வாயில் வந்ததைப் பேசுகிறோம். சிந்திப்பதில்லை. உண்மையில் நமக்கு வாழத் தெரியவில்லை.

இயற்கையின் ஒவ்வொரு துளியிலும் ஒரு இரகசியம் மறைந்திருப்பதை நாம் அறிய முயலுவதில்லை. உலகின் பார்வையைத் தன் பக்கம் திருப்பிய உன்னதக் கலைஞர் சத்யஜித்ரே தன் எட்டு வயதில் தாகூரின் சாந்திநிகேதனுக்குத் தாயாருடன் சென்றபோது நோட்டுப் புத்தகத்தில் தாகூருக்குப் பிடித்த கவிதையை எழுதித் தருமாறு வேண்டினார்.

"நான் உலகம் முழுவதும் சுற்றித் திரிந்தேன். நதிகளையும் மலைகளையும் கண்டு வந்தேன். இதற்காக மிகுந்த பணத்தைச் செலவழித்தேன். நெடுந்தூரம் கடந்து சென்று எல்லாவற்றையும் நேரில் கண்டேன். ஆனால், என் வீட்டு வாசலுக்கு அருகில் முளைத்திருக்கும் ஒரு புல்லின் நுனியில் படர்ந்திருக்கும் பனித்துளி ஒன்றில் உலகம் தெரிவதைக் காண மறந்தேன்" என்று தாகூர் எழுதிக் கொடுத்த கவிதைதான், சத்யஜித்ரேயை நுணுக்கமாக வாழ்க்கையைத் திரையில் வார்த்தெடுக்கும் மகா கலைஞனாக வடித்தெடுத்தது.

இயந்திரமாக வாழ்வதன்று வாழ்க்கை. இயற்கையுடன் இரண்டறக் கலப்பதுதான் வாழ்வின் உன்னதம். "வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்" என்றார் அப்பர். உலகை வெறுப்பதோ, ஒதுக்குவதோ, ஒதுங்கி நிற்பதோ அல்ல ஆன்மீக வாழ்க்கை. உலகைப் புரிந்தும், அறிந்தும் அதனுள் வாழ்ந்தபடி தன்னையும் உலகையும் ஒருசேர உயர்த்துவதுதான் உண்மையான ஆன்மீகம் என்று நாம் உணர்தல் நலம்.

ஒவ்வொருவருக்கும் துன்பம் பெரும்பாலும் காமத்தினாலும், பொருள்கள் மீதுள்ள அதீதப் பற்றினாலும்தான் வருகிறது. காமவிகாரமும் பொருளாசையுமே பொய்யின் பிறப்பிடங்கள்.

இவற்றின் அளவு மீறியவர்க்கு வாழ்க்கை ஒருபோதும் நல்ல வண்ணம் அமையாது. நாம் அனைவரும் முயன்று எளிமையைப் பின்பற்ற வேண்டும். பரிசுத்தம் பேண வேண்டும். குறைந்த ஆசைகளுடன் ஆன்மாவின் சுமைகளைக் குறைக்க வேண்டும். மண்ணில் நல்லவண்ணம் வாழ விரும்புவோர் பயமற்றிருங்கள், பற்றற்றிருங்கள். சினமற்றிருங்கள். நியாயமாக ஆசைப்படுங்கள். ஆசைப்பட்டதை முயன்று அடையுங்கள். அடைந்ததை நீங்கள் துய்ப்பதுடன் அடுத்தவருடன் பகிர்ந்து கொள்ளுங்கள். அதனால் சமூக வாழ்க்கை சிறக்கும்.

**('மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்' நூலிலிருந்து)**

# கோடைகாலக் குறிப்புகள்

◑ கோடையில் எத்தனை முறை தண்ணீர் குடித்தாலும் நா வறட்சி அடங்காது. இதற்கு கொத்தமல்லி விதை, கசகசா இரண்டையும் சிவக்க வறுத்து கஷாயம் வைத்து தேவைக்கேற்ப பனங்கட்டியும், ஏலக்காய்த் தூளும் சேர்த்து பானமாக்கிக் குடித்துப் பாருங்கள். தாகம் தணியும். பித்தமும் நீங்கும்.

◑ கோடை காலத்தில் ஈரமான படுக்கைவிரிப்பை ஜன்னலில் கிளிப் செய்து தொங்கவிட்டால் அதன்மேல் பட்டுவரும் காற்று சில்லென்று இதமாக இருக்கும். உஷ்ணக்காற்றும் உள்ளே வராது.

◑ கோடை காலத்தில் அஜீரணக் கோளாறா? கவலை வேண்டாம். சோறு வடித்த கஞ்சியில் சிறிது மஞ்சள்தூள் போட்டு தெளிந்ததும், உப்பு, சீரகத் தூள் கலந்து அருந்த அஜீரணக் கோளாறுகள் நீங்கிவிடும்.

◑ கோடை காலம் ஆரம்பித்துவிட்டால் உடம்பில் வரும் வியர்வை நாற்றத்தைச் சமாளிக்க இதோ ஓர் வழி. 50 கிராம் ரோஜா இதழ், 10 கிராம் சந்தனத்தூள், நிழலில் காயவைத்த கொத்துமல்லி இலை 25 கிராம் ஆகியவற்றை பன்னீருடன் சேர்த்து அரைத்து முகம் முதல் பாதம்வரை தடவி இருபது நிமிடம் ஊறவிட்டு, பிறகு குளியுங்கள். இச்செய்கையால் வியர்வை நாற்றம் அகன்றுவிடும்.

◑ கோடை காலத்தில் சரும நோய்கள் நம்மைத் தாக்காதிருக்க இலுப்பை இலையைத் தேய்த்துக் குளித்து வரலாம். கடுகு எண்ணெய், நல்லெண்ணெய், ஒலிவ் எண்ணெய் ஆகியவற்றை சரிவிகிதத்தில் கலந்து உடலில் பூசி ஒரு மணி நேரம் வரை ஊறிய பின் குளித்தால் சருமத்திலுள்ள சுருக்கங்கள் நீங்கும்.

◑ கோடை வெப்பத்தால் சிலருக்கு முகம் வறண்டு சுருக்கங்கள் ஏற்படும். இதைத் தவிர்க்க தோடம்பழத் தோலை வெயிலில் காயவைத்து தூளாக்கி, கடலை மா, பால் மற்றும் தண்ணீர் சேர்த்து முகத்தில் பூசி இருபது நிமிடங்கள் ஊறவைத்துக் கழுவ வேண்டும். இதனால் முகச்சுருக்கம் மறையும்.

◑ வெயிலில் அலைவதால் சிலருக்கு கழுத்துப் பகுதி மிகவும் வறண்டு காணப்படும். இதற்கு வர்த்தகப் பழச்சாற்றுடன் பயற்றம் மாவைக் கலந்து பிரிட்ஜில் வைத்திருந்து சிறிது நேரம் கழித்து அந்தக் களிம்பை கழுத்தில் தடவினால் புதுப்பொலிவு கிடைக்கும்.


◑ முகம் வறண்டு காணப்படுபவர்கள் வாழைப்பழத்துடன் பன்னீர் சேர்த்து மிக்ஸியில் அடித்து முகத்தில் தடவினால் வறண்ட தன்மை நீங்கும்.



◑ கோடை காலத்தில் தாகம் எடுத்தால் பச்சைத் தண்ணீரைக் குடிக்காமல் பொறுக்கும் அளவு சூடான வெந்நீரைக் குடித்து வந்தால் அடிக்கடி தாகம் எடுக்காது. உடம்பில் உள்ள வேண்டாத கழிவுகளும் வெளியேறிவிடும்.

◑ வியர்க்குரு, கண் நோய், வேனல் கட்டி போன்றவற்றைத் தவிர்க்க இளநீரில் வெந்தயம் போட்டுக் குடித்து வரவேண்டும்.

◑ கோடை காலத்தில் அதீத சூட்டினால் வரும் தலைவலி நீங்க சின்ன வெங்காயம் இரண்டு, கால் தேக்கரண்டி கடுகு, இரண்டையும் நன்கு அரைத்து நெற்றியில் பற்றுப்போட தலைவலி போய்விடும்.







யாழ். அத்தியடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மகளிர் தின நிகழ்வு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் கௌரவிக்கப்படுவதையும், வருகை தந்த பிரமுகர்களையும், பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுவதையும் காணலாம். (105)

# டெங்கு நோய் அபாயத்தை தடுக்க நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் அறிமுகம்

## வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் தெரிவிப்பு

மக்கள் மத்தியில் நுளம்புக்கட்டுப்பாடு தொடர்பான விழிப்புணர்வையும், சமூக மட்ட அக்கறையுடன் நுளம்புகள் பெருகும இடங்களை அழிப்பதற்காகவும் முன் கூட்டியே டெங்குநோய் மக்களுக்கு பரவாமல் இருப்பதை தடுப்பதற்காகவும் எதிர்வரும் 2ஆம் திகதி முதல் 8ஆம் திகதிவரை தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ் வரன் தெரிவித்தார்.

கடந்த வருடங்களில் அனைவரது ஒத் துழைப்புடன் ஒருங்கிணைந்த வகையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் 44,447 ஆக 2012ஆம் ஆண்டிலிருந்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 2013ஆம் ஆண்டில் 32,060 ஆக 30% வீழ்ச்சி கண்டுள்ளது. சுகாதார அமைச்சின் தேசிய டெங்குக் கட்டுப் பாட்டு பிரிவு இனிவரும் நாட்களிலும் டெங்கு நோய்ப்பரம்பலை அனைத்துத் துறையினரின் ஒத்துழைப்புடன் குறைப் பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வுள்ளது.

இவ்வாரத்தில் மற்றும் மாகாண மட்ட, மாவட்ட மட்ட, பிரதேச மட்ட மற்றும் கிராம மட்ட அமைப்புகள் முன்னெடுக்கவேண்டிய நடவடிக் கைகளாக பின்வரும் செயற்பாடுகள் முன்மொழியப்பட்டுள்ளன. அத்துடன் சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவினால் முன்னுரிமை, ஆபத்துப் பிரதேசங்கள், மத்திம ஆபத் துப் பிரதேசங்கள், மற்றும் குறைவான ஆபத்துப் பிரதேசங்கள் என சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் வகைப்படுத தப்பட்டுள்ளன.

எதிர்வரும் 2ஆம் திகதி அனைத்து அரச தனியார் கல்வி நிறுவனங்கள், உயர் கல்வி நிறுவனங்கள், விடுதிகள் மற்றும் முன்பள்ளிகள் ஆகிய இடங்க ளினை கல்வி நிறுவன அதிபர்கள்,ஆசிரி யர்கள், பெற்றோர், மாணவர்கள், நுளம் புக் கட்டுப்பாட்டுக்குழுக்கள் பொலிஸ், இராணுவம், பொதுசுகாதார உத்தியோகத தர்கள் ஆகியோர் கண்காணிக்கவுள்ள னர்.

எதிர்வரும் 3ஆம் திகதி வைத்திய சாலைகள், பொலிஸ்நிலையங்கள், இராணுவமுகாம்கள் உட்பட அனைத்து அரச தனியார் நிறுவனங்களையும் 4ஆம்திகதி பொது இடங்கள் பொது வடிகால்களையும், 5ஆம் திகதி தொழிற் சாலைகள் தொழிலிடங்கள், குடியிருப்புக் கள் ஆகியவற்றை நுளம்புக் கட்டுப்பாட்டுக குழுக்கள், உள்ளூராட்சி நிறுவனப்பணி யாளர்கள், பொலிஸ், இராணுவம் ஆகி யோர் கண்காணிக்கவுள்ளனர்.

எதிர்வரும் 6ஆம் திகதி வழிபாட்டுத் தலங்கள், வீடுகள்என்பவற்றை மதத் தலைவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், கிராமிய நுளம்புக் கட்டுப் பாட்டு குழுக்கள், சுகாதார உத்தியோகத்தர் கள், பொலிஸ், இராணுவம் ஆகியோர் கண்காணிக்கவுள்ளனர்.

எதிர்வரும் 7ஆம் திகதி கட்டட நிர் மாணப்பகுதிகள், கைவிடப்பட்ட காணி களையும் எதிர்வரும் 8ஆம் திகதி பேருந்து நிலையங்கள், பொது இடங்கள், மயா னங்கள், வீதியோரங்கள்,புகையிரத நிலை யங்கள் போன்றவற்றை உள்ளூராட்சி நிறு வனப்பணியாளர்கள், நுளம்புக் கட்டுப் பாட்டுக்குழுக்கள், சுகாதார உத்தியோகத் தர்கள், பொலிஸ், இராணுவம் ஆகியோர் கண்காணிக்கவுள்ளனர் என அறிவிக்கப் பட்டுள்ளது.

# பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட கால்நடை வளர்ப் போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு திருநெல் வேலி பலாலி வீதியில் அமைந்துள்ள சமா சப்பணி மனையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கால்நடை வளர்ப் போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமை யில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்துக்கு பிரதம விருந்தினராக யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன், யாழ். கால்நடை உற்பத் திச் சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி வ. அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக கூட்டுறவு அபி விருத்தி உத்தியோகத்தர் திருமதி சி.கணேஸ கலந்து கொள்ளவுள்ளார். (இ)

# மஹோற்சவம்

(வடமராட்சி)

பருத்தித்துறை ஸ்ரீ சண்டிகா பரமேஸ் வரி ஆலயத்தின் மஹோற்சவம் எதிர் வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக் கிழமை பூங்காவனத் திருவிழாவும், 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திரு விழாவும், 14ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் 15ஆம் திகதி செவ் வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (01)

# 'அஸ்திரம்' மக்கள் நற்பணி மன்றத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு



வவுனியா மாவட்டத்தில் நான்கு ஆண்டுகளாக பல்வேறு சமூக சேவை களை முன்னெடுத்து வந்த கூமாங்குளம் இளைஞர் கழகம் தனது சேவைகளை தேசிய ரீதியில் விரிவுபடுத்தும் நோக் கத்துடன் "அஸ்திரம்" என்ற பெயரில் மக்கள் நற்பணி மன்றமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு கடந்த 25ஆம் திகதி வவுனியா மாவட்ட சமூக சேவை கள் மண்டபத்தில் மன்றத் தலைவரும் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சுதர்சன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி மு.அகிலேந்திரன், வவுனியா மாவட்ட பொலிஸ் பரிசோதகர் ஆ.மு.சமர கோன், வவுனியா மாவட்ட வர்த்தகர் சங்க தலைவர் மு.இராஜ லிங்கம், வவுனியா மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஸ்ரீநிவாசன் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கடந்த ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திய டைந்த வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணமும் கௌரவிப்பு விருதும் வழங்கப்பட்டதுடன் கூமாங் குளம் கிராமத்திலிருந்து தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கும் கூமாங்குளம் கிராமத்தில் பல்வேறு சமூக அமைப்புக்களில் சேவை புரிந்த சமூக சேவையாளர் களுக்கும் விருதுகள் வழங்கிக்கௌரவிக்கப்பட்டது. (70)

# அமலனின் சாட்சியாளர்களிற்கு அச்சுறுத்தல் விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம்

## யாழ். பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

(யாழ்ப்பாணம்)

பொன் அணிகளின் ஒருநாள் துடுப்பாட்டப் போட்டியின் போது அடித்துக் கொலை செய்யப் பட்ட ஜெயரட்ணம் தர்ஷன் அமலனின் கொலை சாட்சியங்களான அவரது நண்பர்களுக்கு தொலை பேசி அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை தொடர் பில் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர் டபிள்யு.பி.விமலசேன தெரிவித்தார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற வாராந்த பத்திரிகையாளர் சந்திப்பின்போது, பொன் அணிகளின் ஒருநாள் துடுப்பாட்டப் போட்டியின் போது அடித்துக் கொலை செய்யப்பட்ட ஜெயரட்ணம் தர்ஷன் அமலனின் கொலை சாட்சியங்களான அவரது நண்பர்களுக்கு தொலை பேசி அச்சுறுத்தல் விடுக் கப்பட்டுள்ளமை குறித்து யாராவது கைதுசெய் யப்பட்டுள்ளனரா என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளிக்கையி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், யாழ். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவனின் கொலைக் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும என்பதே எமது நோக்கம். சம்பவம் நடைபெற்ற அன்றைய தினம் இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின் போது சம்பவத்தினை பார்த் துக்கொண்டுநின்ற 5 பேரிடம் விசாரணை மேற்கொண்டோம்.



அதனடிப்ப டையில், 3 பேர் சம்பவத்தினை பார்த்த சிலர் எமக்கு சொன் னார்கள். அத னால் தான் தமக்கு தெரிய வந்ததாகக் கூறி னார்கள். அதேவேளை, இரு இளைஞர்கள் மாத் திரமே வட்டுக் கோட்டை பொலிஸ் நிலையத்தி லும், மல்லாகம் நிதிமன்றத்திலும் சாட்சியமளித் ததுடன், தாக்குதல் சம்பவத்தினை மேற்கொண்ட வர்களை நீதிமன்றில் அடையாளம் காட்டியுள் ளனர்.

இந்த வகையில், அச்சுறுத்தல் விடுக்கப்பட் டுள்ள தொலைபேசி இலக்கத்தின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதுடன், அச்சுறுத்தல் தொடர் பில் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றதா கவும் யாழ். பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகர் மேலும் தெரிவித்தார்.

அமலனின் கொலைச் சம்பவத்தில் வேடிக்கை பார்த்த பொலிஸார் இருவரும் பதவி நீக்கம் செய்யப்படுவார்கள் எனவும் யாழ். பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யு.பி. விமலசேன தெரிவித்தார். (25)

# மக்கள் பங்கேற்பு திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபையில் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டத்தை தயாரித்து கிராம திட்டத்திற்கு முன்னுரிமை அளியுங்கள்.

கொத்தணி முறை மூலமான நெல்சிப் திட்டம் வலுவிழந்து விட்டது. எனவே இத்திட்டத்தை தயாரித்து சபையிடம் கையளிக்க உத வுங்கள் என மானிப்பாய் பிரதேசசபை உறுப்பினர் சின்னத்துரை மகேந்திரன் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வடக்கில் உள்ள பிரதேச சபைகள் யாவும் கிராமத்துக்கு ஓர் திட்டம் என்ற வகையில் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்து வருகின்றது.

கடந்த காலங்களில் தயாரிக்கப்பட்டு மூன்று, நான்கு ஆண்டுகள் வலுவில் இருந்த நெல்சிப் திட்டம் வலுவிழந்து விட்டது.

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகள் இந்திட்டத்தை முன்னகர்த்துகின்றன.

அதேபோல மானிப்பாய் பிரதேச சபையும் இத்திட்டத்தை முன்னெடுத்து 28 கிராம அலுவலர் பிரிவிற்கும் 28 பங்கேற்பு திட்டம் தயாரிக்க உதவுமாறு கேட்டுள்ளார். இதன்மூலம் எதிர்காலத்தில் கிடைக்கவுள்ள அவுஸ்ரேலிய நிதியை பயன்பாடு உடையதாக்கி இப்பிரதேச அபிவிருத்தியை முன்னெடுக்கலாம்

எனவே இத்திட்டத்தை உடன் செயற்படுத்த உள்ளூராட்சி அமைச்சும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரும் விரைந்து செயற்படவேண்டும் என அவர் கேட்டுள்ளார். (92)

# குடிசை கைத்தொழிலாளர்களுக்கான உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு

(கிளிநொச்சி)

வாழ்வின் எழுச்சி திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் பயிற்சியைப் பூர்த்திசெய்த குடிசைக்கைத் தொழில் முயற்சியாளர்களுக்கான அடிப்படை மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மற்றும் மறுநாள் புதன்கிழமை 5 மாவட்ட செயலகங்களிலும் நடைபெறவுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளதுடன் அன்றையதினம் காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலும், பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணத்திலும் மறுநாள் 2ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத் தீவிலும், பி.ப 1 மணிக்கு வவுனியாவிலும் பிற்பகல் 3.30 மணிக்கு மன்னாரிலும் இடம் பெறவுள்ளதாக அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் 256 பயனாளிகளுக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 145 பயனாளிகளுக்கும் மன்னார் மாவட்டத்தில் 148 பயனாளிகளும், வவுனியா மாவட்டத்தில் 82 பயனாளிகளும், முல்லைத் தீவு மாவட்டத்தில் 60பயனாளிகளுக்கும் உபகரணங்கள் வழங்கபபடவுள்ளது.

# "உதித்தனன் உலகம் உய்ய" நூல் வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

தும்பளை நெல்லண்டை அம்மன் ஆலய தர்ம பரிபாலன சபையின் ஏற்பாட்டில் உதித்தனன் உலகம் உய்ய நூல் வெளியீட்டு விழா நாளை மாலை 5 மணிக்கு நெல்லண்டை இந்து நூலக வாயிலில் நடைபெறவுள்ளது.

ஆலய பரிபாலனசபைத் தலைவரும் பருத்தித்துறை நகரசபை தவிசாளருமான சபா. ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வரவேற்புரையை சபைச்செயலாளர் கா.புஸ்பராசா, வெளியீட்டுரையை சபா.ரவீந்திரன், மதிப்பீட்டுரையை தும்பளை அறிநெறிப்பாடசாலை அதிபர் திருமதி சுப்பிரணியம், ஏற்புரையை நேர்த்தியாளர் சார்பில் வ.சி. ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் வழங்கவுள்ளனர். (109)

## விபரம் திரட்டு

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் பெண்களைத் தலைவராக கொண்ட குடும்பங்களின் விபரங்கள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக திரட்டப்பட்டு வருகின்றன. இதன்படி ஜே/205 ஏழாலை வடக்கு கிராம அலுவலர் பிரிவில் இன்று காலை 9 மணிக்கு பதிவுகள் இடம்பெறவுள்ளது.

# பல்கலை. மாணவன் கண்டுபிடிப்பில் சாதனை



யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வன்னியசிங்கம் ஆதவன் என்ற மாணவனால் கண்டுபிடிக்கப்பட்ட புல்வெளிகளிலுள்ள குப்பைகளை அகற்றும் இயந்திரம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் இலகுவில் பயன்படுத்தக் கூடிய குப்பைக் கூடை" ஆகிய இரண்டு கண்டுபிடிப்புக்கள் தேசிய ரீதியில் தெரிவு செயயப்பட்டுள்ளது.

அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கண்டுபிடிப்பாளர் மற்றும் முதலீட்டாளர்களுக்கு இடையில் நடைபெற்ற மாநாட்டிலும் கலந்து கொண்ட இவர் கற்சிலைமடு ஓட்டுசுட்டானைச் சேர்ந்த வன்னியசிங்கம் விஜயா தம்பதிகளின் புதல்வராவார்.

இவர் கடந்த 2011 ஆம் ஆண்டு பங்களாதேஷ் தலைநகரில் இடம்பெற்ற இளைஞர்களுக்கான செயலமர்வு ஒன்றிலும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் பகுதி வீதிகளுக்கு கிடைத்தது மின் ஒளி

(யாழ்ப்பாணம்)

யாழ். முஸ்லிம் பகுதியிலுள்ள வீதிகளுக்கு புதிதாக மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான கே.விகுகேந்திரனின் (வி.கே.ஜெகன்) ஆலோசனைக்கு அமைய யாழ்.மாநகரசபை முன்னாள் பிரதி மேயர் து.இளங்கோ (றீகன்), யாழ்.மாநகரசபை உறுப்பினரான வி.எஸ். என். சரவுல்அனமினாலும்அராலி வீதி, பொம்மைவெளி, ஹாதிஅவுபக்கர் வீதி, ஹாலிபாஅப்தும்ஹமித் வீதிகளில் அமைந்துள்ள இடங்களில் உள்ள மின்சாரக் கம்பங்களின் பழுதடைந்த மின்விளக்குகள் அகற்றப்பட்டு புதிதாக மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

யாழ். மாநகரசபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் கே.விஜயகுமாரினால் திருத்தப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.



# பதிவிருக்கப் பெட்டகம்

மனிதர்கள் உயர, மாட்சிமை பெற, மடமை அழிய, மகத்தான தன்னியல்பானது விளங்க ஒரே வழி எனக்குத் தெரிந்து புத்தகம் படித்தல் என்னும் வழிதான்.

எத்தனைக்கெத்தனை புத்தகத்தை ஆழ்ந்து கற்கிறோமோ அத்தனைக்கத்தனை மிக அதிக பலனைத் தரக்கூடிய சிறந்த யோகம் என்பது நூல்களைக் கற்றல் என்னும் வழிதான்.

அதை ஜபிச்சேன், இதை மந்திரித்தேன், தவம் பண்ணினேன், சமாதி நிலையில் இதைப் பார்த்தேன், அதைப் பார்த்தேன் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பவர்களோடு வாக்கு வாதத்திற்குப் போகாதீர்கள். அவர்களைத் திருத்த முடியாது. நம்மால் ஆனது நம்மைத்தான் நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். சொல்லிப் பாருங்கள். சிலிர்த்துக் கொண்டு வந்தார்கள் என்றால், 'சரி, சரி உங்கள் வழி உங்களுக்கு' என்று மணிச் சித்திரத் தாழ என்ற திரைப்படத்தில் கோபாவேசமாக சிலிர்த்து வரும் மனநலம் பாதிக்கப்பட்ட பெண்ணிடம் மோகன்லால் வெற்றிகரமாக வாபஸ் வாங்குவாரே அது போல், தவிர்த்துக் கொண்டு போய்விடுங்கள். ஏனெனில் வழிவழியாக உருவேற்றி வைத்திருக்கும் சித்திரங்களை நாம் ஒருவராக முனைந்து அகற்ற முடியாது, அவர்களே தாமாக அவ்வாறு சிந்திக்கத் துணியவில்லையேல்.

அதுவும் பெண்கள் தங்களுடைய விடுதலை, வாழ்க்கை உயர்வு, நன்மையை நோக்கிய மாற்றம் ஆகிய திசைகளில் பயணிக்க விரும்பினால் ஒரே வழி நன்மைக்கு என்று பார்த்தால் புத்தகப் படிப்புதான் என்று தோன்றுகிறது.

புத்தகப் படிப்பு என்று நான் சொல்லும் போது அதன் பொருள், நூல்களைக் கற்றல், அதனுடைய உட்பொருளை ஆழ்ந்து சிந்தித்தல், அந்தக் கருத்துகளோடு உடன்பட்டும், மாறுபட்டும் மனத்தளவிலோ, நண்பர்களுடனோ விவாதித்தல் அதுவரை மிகச் செல்லமாகக் கொண்டிருந்த கருத்துகள் ஆயினும், தவறு என்று கண்டால் கைவிட வேண்டும் அல்லது மாறுபட வேண்டும் என்று வரும் போது எந்தத் தயவு தாட்சணியமும் காட்டாமல் துணிந்து மாற்றிச் சிந்தித்தல், தன்னுடைய கருத்துகளிலோ, முன்னோர்களின் கருத்துகளிலோ, நிகழ் காலத்தில் பிறருடைய கருத்துகளிலோ முரண்பட்டால் துணிந்து மறுக்கவும், மாற்றிச் சிந்திக்கவும் தொடர்ந்து மனப் பயிற்சியைப் பழகுதல் ஆகிய எல்லாம் சேர்ந்துதான் புத்தகப் படிப்பு என்று கூறுகிறேன்.

நம் ஒவ்வொருவர் வாழ்க்கையையும் யோசித்துப் பார்த்தாலும் ஓர் உண்மை புலப்படும். நம் வாழ்க்கையை அமைதியாக மாற்றியது ஏதாவது ஒரு நூலாக இருக்கும். அதை எந்த ஆடம்பரமும் இன்றி, பெரிய தெய்வீகம், தலையில் சோதி சுற்றுதல் என்ற படாடோபம் எதுவுமின்றி அது நம் கையில் வந்து, கண்களால் படிக்கப்பட்டு, சிந்தனையைத் தூண்டி, நம் பார்வைகளிலேயே பெரிய மாற்றத்தையும் புரட்சியையும் அமைதியாகச் சாதித்திருக்கும். ஆனால் அந்தப் புத்தகப் படிப்பிற்கு உரிய நன்றியையோ. ஆமோதிப்பையோ, சிறப்பையோ நாம் அளிக்க மாட்டோம். அது சும்மா சாதாரணம், கடையில் போய் காசை விட்டெறிந்தால் புத்தகம் கிடைத்து விடுகிறது. அவ்வளவுதானே.

யதார்த்தமாக வாழ்வில் முக்திக்கான படிக்கட்டாக நம் கைகளில் வந்து நிற்பது புத்தகங்கள்தாம். உங்கள் வாழ்க்கை உங்களுக்கு நஷ்டப்படக் கூடாது என்று நீங்கள் அக்கறையாய் இருந்தால் உங்கள் கவனம் எல்லாம் புத்தகங்களின் மேல் இருக்கட்டும். அதாவது எந்த மேலதிகாரக் குரலுக்கும் கீழ்ப்படிந்து உங்கள் சிந்தனையை முடக்கிக் கொள்ளாதீர்கள்.

புத்தகங்கள் உங்களுக்கு மிக அதிக பட்சமான சுதந்திர வாய்ப்புகளைத் தருகின்றன. ஒரு பெரிய தெய்வீக ஆசிரியரின் வாழ்க்கையைப் பற்றி நீங்கள் ஒரு நூலைப் படிக்கின்றீர்கள் என்று வைத்துக் கொள்வோம்: பாருங்கள் நீங்கள் அதைப் பற்றி என்ன நினைக்கின்றீர்களோ, உடன்பட்டாலும், மறுத்தாலும் சரி அது உங்கள் இஷ்டம், உங்கள் சுதந்திரம். புத்தகம் எழுதியவர் அதில் எவ்வளவு மிரட்டி எழுதியிருந்தாலும் சரி நீங்கள் துளிக்கூட இலட்சியம் செய்யாமல் படித்துத் தூக்கிப் போடலாம். உங்களுக்குள் வாதிக்கலாம் மாற்றுக் கருத்து கொள்ளலாம்.

எனவே புத்தகப் படிப்பு என்னும் கதி மோட்சமான வழியை இளைய தலைமுறையினர், அதுவும் முக்கியமாகப் பெண்கள், நிலைத்த நன்மைக்கான, உலகம் தழுவிய உண்மையான மனிதம் ஓங்க ஒரே யோக வழி என்றபடியான புத்தகப் படிப்பை மேலும் மேலும் ஊன்றிச் சிறக்கச் செய்தலே நன்மைக்கான வழி என்று தோன்றுகிறது.

– ஸ்ரீரங்கம் மோகனரங்கன்

# ஜெனிவாவில் அரசியல் தர்மம் மீறப்பட்டுள்ளது

# இந்த அநீதிக்கு எதிராக உச்ச அளவில் போராடினோம்

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனிவாப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்த நாடுகள் மற்றும் நடுநிலை வகித்த நாடுகளுக்கு இலங்கை அரசாங்கம் நன்றி தெரிவிப்பதுடன், இந்த நாடுகளின் நட்புக் கரங்களை மேலும் வலுவாகப் பற்றிக் கொண்டு முன்செல்லவுள்ளதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரேரணைக்கு எதிராகவும், நடுநிலைவகித்த நாடுகளை நோக்கும் போது இந்தப் பிரேரணையை உலகின் பெரும்பாலான நாடுகள் நிராகரித்துள்ளமை தெளிவாகப் புலனாகிறது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார்.

ஜெனிவா மனித உரிமைப் பேரவையின் முடிவுகள் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நேற்றுமுன்தினம் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. இந்த அறிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், மூன்று தசாப்தங்கள் நாட்டில் நிலவிய யுத்தத்தை மூன்றே வருட குறுகிய காலத்துக்குள் முடிவுக்குக் கொண்டு வந்து யுத்தத்தினால் அழிவுற்ற நாட்டை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கையை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளது.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தி சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கையில் 1505 முதல் 1948 வரை நாட்டை ஆக்கிரமித்திருந்த வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகள், புலிகள் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் என்பன வழங்கிய தவறான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நாட்டை சீர்குலைக்கும் நோக்கில் சில பலமுள்ளவர்களின் குறுகிய அரசியல் நோக்கத்தை அடைந்துகொள்ளும் நோக்கில், மூன்றுவருட காலமாக இத்தகைய பிரேரணைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அந்த நாடுகள் நடவடிக்கை எடுத்திருந்தன.

சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் தர்மத்தை மீறி பலம்வாய்ந்த நாடுகள் இலங்கைக்கு எதிராக அழுத்தத்தைப் பிரயோகித்தமை ஒன்றும் இரகசியமல்ல. ஜெனிவா முடிவு நாங்கள் ஏற்கனவே அறிந்திருந்ததொன்று. எனினும் நாடு என்ற வகையில் இந்த அநீதிக்கு எதிராக உச்சளவில் போராடினோம்.

பெரும்பான்மை வாக்குகளால் இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டபோதும் பிரேரணைக்கு எதிராக வாக்காளித்த மற்றும் வாக்களிப்பில் நடுநிலைவகித்த நாடுகளைப் பார்க்கும்போது இந்தப் பிரேரணையை பெரும்பாலான உலக நாடுகள் அங்கீகரிக்கவில்லையென்பது தெளிவாகிறது.

இந்தப் பிரேரணை மூலம் மனித உரிமை மீறல் தொடர்பான விசாரணைக்கு அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டுள்ள மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவநீதம் பிள்ளை இலங்கையைப் பற்றிய தப்பான அபிப்பிராயத்தைக் கொண்ட பாரபட்சமாக செயற்படுகின்ற ஒரு அதிகாரியாகும் என்பது சில காலங்களுக்கு முன்பே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அநீதிக்கு எதிராக போராடும் போது சிறியநாடு, பெரியநாடு என்பது முக்கியமில்லை என்ற செய்தியை நாம் நாட்டுக்கும் உலகுக்கும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

எமது நாட் டுக்கு சிறந்த தலைமைத்து வத்தை வழங்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் எமது கட்சி உட்பட சகல முற்போக்கு அணிகளும் ஒன்றிணைந்து செயற்படுவது உறுதி எனவும் அவர் தெரிவித்தார்.

# மாடு மேய்க்கச் சென்றவர் மாயம்

# தேடுதல் முயற்சி பலிக்கவில்லை

(கொழும்பு)

திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருக்கோவில், கஞ்சிகுடியாறு காட்டுப்பகுதிக்கு கால்நடைகளை மேய்ப்பதற்காகச் சென்ற குடும்பஸ்த்தரை கடந்த மூன்று நாட்களாக காணவில்லை என திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தம்பிலுவில் 02, ஆலையடி வீதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான பரநிருபசிங்கம் பாக்கியராசா (வயது 52) என்பவரே இவ்வாறு காணாமற் போய்யுள்ளார்.

இவர் கடந்த செவ்வாய்க்கிழமை காலை கால்நடைகளை மேய்ப்பதற்காக கால்நடைகளை எடுத்துக்கொண்டு கஞ்சிகுடியாறு காட்டுப்பகுதிக்கு சென்றுள்ளதாகவும் பின்னர் மாலை வீடு திரும்பாத நிலையில் இவரின் உறவினர்கள் அப்பகுதிக்குச் தேடிச்சென்ற போது வேப்பையடிக் குளம் அருகில் அவருடைய பொருட்கள் என கருதப்படும் செருப்பு, வெற்றிலைப் பை மேலாடை (சேட்) என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதனை அடுத்து இவர் குளத்தில் முழ்கி இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் கடற்படையினரின் உதவியுடன் திருக்கோவில் பொலிஸார் மற்றும் பொதுமக்கள், உறவினர்கள் காணாமற் போனவரை தொடர்ச்சியாக தேடி வருகின்றனர்.

# திசைமாறிய சிறுவர்களுக்கு வழிகாட்டியது நீதிமன்றம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் முருங்கன் பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து உணவை திருடியதாக கூறப்படும் சிறுவர்கள் 03 பேருக்கு மன்னார் நீதிமன்றம் அறிவுரை கூறியதுடன், இச்சிறுவர்களின் பெற்றோரையும் எச்சரித்துள்ளது.

அத்துடன், இச்சிறுவர்களின் நடவடிக்கைகளை கண்காணித்து அடுத்த தவணையின்போது நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தருக்கு மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதன் பின்னர் பெற்றோரிடம் இச்சிறுவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

இச்சிறுவர்களை அவர்களின் பெற்றோருடன் மன்னார் நீதிமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை ஆஜர்படுத்தியபோதே அந்த நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டது.

முருங்கன் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் தனது வீட்டிலிருந்து வெளியே சென்றுவிட்டு, மீண்டும் வீட்டுக்கு திரும்பிய போது அவரது வீட்டிலிருந்து சுமார் 13 வயது மதிக்கத்தக்க 03 சிறுவர்கள் ஓடுவதைக் கண்டார்.

இவ்வாறு ஓடிய 03 சிறுவர்களும் அயலில் வசிப்பவர்கள் என்பதை அடையாளம் கண்ட அந்நபர், தனது வீட்டிலுள்ள பொருட்கள் சிதறிக் கிடப்பதையும் கண்டார்.

இது தொடர்பில் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் அந்நபர் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து, அம்மூன்று சிறுவர்களையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துவந்து பொலிஸார் விசாரணை செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

# பாதுகாப்பு பெட்டக சேவை வடமராட்சியில் முதன்முறையாக

## இலங்கை வங்கி ஆரம்பிக்கிறது

(யாழ்ப்பாணம்)



வடமராட்சியில் முதன் முறையாக பாதுகாப்பு பெட்டக சேவையை இலங்கை வங்கி வழங்கவுள்ளது.

நெல்லியடி நகரில் 60 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இலங்கை வங்கியின் கட்டடத்தொகுதி நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டடத்தொகுதியினை இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் டி.எஸ்.குணசேகர திறந்து வைக்கவுள்ளார். இந்த கட்டடத் தொகுதியிலேயே வடமராட்சியில் முதன்முதலாக பாதுகாப்புப் பெட்டக வசதிகள் இந்த வங்கிக்கிளையில் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் இலங்கை வங்கியின் சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளர் எம்.எஸ்.முதியான்சே, நெல்லியடி பிரதேசத்தின் வர்த்தக தலைவர் எஸ்.அகிர்ததாஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# 800 ஏக்கர் சிறுபோகம் கிளி.யில் துரித ஏற்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் தற்போதுள்ள நீரினைக் கொண்டு குளத்தின் கீழுள்ள 800 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கையும், 150 ஏக்கரில் உபஉணவுப் பயிர்ச் செய்கையும் மேற்கொள்ளப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்டச் செயளாலர் ரூபவதி கேதீஸ்வரன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இத்தீர்மானம் “இவ்வருடம் சிறுபோக நெற்செய்கையினை எவ்வாறு மேற்கொள்ளுதல்” என்ற தொனிப்பொருளின் கீழ் நேற்றுமுன்தினம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற இரணைமடு விவசாயிகளுடனான கூட்டத்திலே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்ததாவது,

வறட்சி காரணமாக இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 15 அடிக்கும் குறைவாகக் காணப்படுகின்றமையினால் இதனைக் கொண்டு சிறுபோக நெற்செய்கையினை செய்யமுடியாது.

ஆனாலும் குளத்தில் இருக்கும் நீரின் அளவினைக் கொண்டு நீர் முகாமைத்துவத்தின் மூலம் சிக்கனமாக நீரினைப் பயன்படுத்தி 800 ஏக்கர் அளவில் நெற்செய்கை செய்வதற்கு தீர்மானித்துள்ளோம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வருட இறுதியில் மேற்கொள்ளவுள்ள பெரும்போக நெற்செய்கைக்குத் தேவையான விதை நெல்லினைப் பெற வேண்டிய கட்டாயம் காணப்படுகின்றது என்பதினாலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நீரினைச் சிக்கனமாகப் பயனபடுத்தி சிறுபோக பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளவது தொடர்பான விளக்கங்களும் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# பதில் அமைச்சர் நியமனம்

(கொழும்பு)

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, கலாசார அலுவல்கள் பதில் அமைச்சராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளர்ர்.

கலாசார அலுவல்கள் அமைச்சர் டீ.பீ.ரத்நாயக்க ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளதால் அவர் நாடு திரும்பும் வரை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த பதில் கலாசார அலுவல்கள் அமைச்சராக கடமை புரிவார் என அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவிக்கிறது.

# முகப்புத்தகம் ஊடாக பிரசாரம் தேர்தல் சட்டத்தால் தடுக்கமுடியாது

## கைவிரிக்கிறது பொலிஸ் திணைக்களம்

(கொழும்பு)

முகப்புத்தகம் ஊடான தேர்தல் பிரசாரத்தை கட்டுப்படுத்துவதற்கு தேர்தல் சட்டத்தில் இடம் இல்லை என்று பொலிஸ் திணைக்களத்தின் ஊடகப்பேச்சாளர் அஜித்ரோஹண தெரிவித்துள்ளார்.

பேஸ்புக் சமூக வலைத்தளத்தின் மூலம் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமே இருக்கின்றன. அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு முடியாது என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

முழுமையான தேர்தல் பிரசாரங்களும், அதுசார்ந்த விடயங்களும் கடந்த நள்ளிரவு 12.00 மணியுடன் நிறுத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்ட போதும், சமூக வலைத்தளங்களின் மூலம் அது தொடர்ந்து நடைபெற்று வருவதாக அவர் குறிப்பிட்டார்.

“எங்களுக்கு சட்ட ரீதியாக இதற்கு எதிராகச் செயற்பட முடியாது. பேஸ்புக் தொடர்பில் எங்களுக்கு தேர்தல் சட்டதிட்டங்களின் அடிப்படையில் செயற்பட முடியாது. அந்த சமூக வலைத்தளங்களினூடான பிரசாரங்களை, அதுதொடர்பில் சட்டம் பிறப்பித்தால் மட்டுந்தான் நிறுத்த முடியும். குறுஞ்செய்திகள் விடயத்திலும் இப்படித்தான்” என்றும் அவர் மேலும் கருத்துரைத்தார்.

16) கீழே அடைப்பினுள் உள்ள ஆங்கில எழுத்தைப் பிரதிபலிக்கும் இலக்கக்கூட்டம் எது?

ABCDC

(i) 94535 (ii) 23345 (iii) 28367

17)

```
  4 [B] 7
  2  9 [A]
 -----------
 [C] 4  2
```

இக்கணிதச் செய்கையில் ABC ஆகிய ஆங்கில எழுத்துக்களுக்கு வரவேண்டிய இலக்கங்கள் எவை என அறிந்து கீறிடுக.

(i) 8 , 0 , 5 (ii) 7 , 3 , 5 (iii) 5 , 4 , 7

18) கீழே தரப்பட்ட தொடர்பை அவதானித்து அடுத்துவரும் தொடரைக் காண்க.

(+)(x)(−)(+) — (x)(−)(+)(+) — (−)(+)(+)(x) — ..........................

(i) (+)(x)(+)(−) (ii) (+)(+)(x)(−) (iii) (+)(−)(x)(+)

## கடந்த ஞாயிற்றுக்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமை வெளியான பயிற்சி வினாக்களின் விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 3 | 11) | 2 | 21) | 2 | 30) | 2 | 40) | 7 |
| 2) | 3 | 12) | 2 | 22) | 1 | 31) | 3 | | |
| 3) | 2 | 13) | 3 | 23) | 3 | 32) | 2 | | |
| 4) | 1 | 14) | 3 | 24) | 2 | 33) | 2 | | |
| 5) | 1 | 15) | 2 | 25) | அன்பு, காற்று | 34) | 3 | | |
| 6) | 3 | 16) | 1 | | அக்கா, புற்று | 35) | 3 | | |
| 7) | 3 | 17) | 2 | 26) | வித்து, தும்பி, பிறகு | 36) | 3 | | |
| 8) | 1 | 18) | 3 | 27) | 1 | 37) | 3 | | |
| 9) | 1 | 19) | 2 | 28) | 3 | 38) | பூ, ச | | |
| 10) | 2 | 20) | 3 | 29) | 1 | 39) | X | | |



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II | 1 மணி 15 நிமி


# கல்வி முரசு



## பகுதி I

• 1 ஆம் 2 ஆம் வினாக்களுக்கு வித்தியாசமான படத்தின்கீழ் கோடிடுக.

01)




(i) (ii) (iii)

02)



(i) (ii) (iii)

03) கீழே தரப்பட்டுள்ள உபகரணங்களை இவ்விரண்டு பிரிவுகளாக பிரித்தால் வரும் சரியான விடையின் கீழ் கோடிடுக.




B D F H

A C E G


(i) AB-DC-FE-HG (ii) HA-CB-ED-GF (iii) AD-BE-CF-HG


04) அடுத்து புள்ளிக்கோட்டில் வரும் சரியான படத்தின் கீழ் கோடிடுக.




(i) (ii) (iii)

- 05ஆம் 06ஆம் வினாக்குரிய படங்களை மேலிருந்து பார்க்கும் போது எவ்வாறு தோன்றும்

05) 


06) 


07) x என்ற இடத்தில் வரவேண்டிய எழுத்து எது?



(i) C (ii) E (iii) F

08) வெற்றிடத்தில் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க

10 → 9 → 100 → 99 → 1000 → [ ]


(i) 999 (ii) 9999 (iii) 99

09) புள்ளிக் கோடிட்ட இடத்தில் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.

| | | |
|---|---|---|
| 16 | ...... | 26 |
| 11 | 08 | 19 |
| 06 | 06 | 12 |

(i) 10 (ii) 15 (iii) 20


10) இந்த ▶ அடையாளம் விடப்பட்ட இடத்தில் வரவேண்டிய எண் எது?



(i) 8 (ii) 9 (iii) 5





11) வினாக்குறி உள்ள இடத்தில் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.





(i) 3 (ii) 14 (iii) 5

- 12, 13 ஆம் வினாக்களுக்கு வெற்றுக்கூட்டினுள் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்து கீறிடுக.

12) 


13) 



- கீழே தரப்பட்ட தகவலை நன்கு அவதானித்து14, 15 ஆம்வினாக்களுக்கு விடை தருக.




14)  ? ..............................

15)  ? ..............................

# யாழ். பொது நூலகத்திற்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் ஆளுகையிலுள்ள யாழ்ப்பாணம் பொதுநூலகத்தின் இளைஞர் பகுதியை அமைப்பதற்காக சிங்கப்பூர் அரசினால் வழங்கப்பட்டுள்ள புத்தகங்கள், கணனிகள் மற்றும் தளபாடத் தொகுதிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் சென்று பார்வையிட்டார்.

யாழ்ப்பாணம் பொதுநூலகத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் குறித்த விடயம் தொடர்பில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

நூலகத்தின் கணனிப் பகுதி, சிறுவர்கூடம், உசாத்துணைப் பகுதி உள்ளிட்ட தொகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் கற்றலில் ஈடுபட்ட மாணவர்களுடனும், பொறுப்பாசிரியர்களுடனும் கலந்துரையாடி அவர்களது தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது, 2002 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பொது நூலகத்தின் வெள்ளை பூச்சு இடம்பெற்று வரும் நிலையில் அதுதொடர்பிலும் அமைச்சர் பார்வையிட்டார்.

சிங்கப்பூர் அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வரும் இளைஞர் பகுதி எதிர்வரும் 4 ஆம் திகதி மாணவர்களின் பயனபாட்டுக்காக கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே வடபகுதிக்கு கல்விச்சுற்றுலா மேற்கொண்டு யாழ்ப்பாணம் பொதுநூலகத்திற்கு வருகைதந்த கேகாலை, தெரணியகல சிறி கதிரேசன் தமிழ் மகாவித்தியாலயம் மற்றும் பதுளை வெலிக்கேமுல்ல மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர்களுடனும், ஆசிரியர்களுடனும் கலந்துரையாடி அமைச்சர் கல்விச்சமூகத்தினருக்கு தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார். இதன்போது யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உடனிருந்தார்.

# அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

(கரணவாய்)

யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் சீட்டிழுப்பு கடந்த திபாவளியன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த நிலையில் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இக்கல்லூரி பழைய மாணவர்சங்கத்தில் அங்கத்தவர்களாக இணைய விரும்பும் பழைய மாணவர்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம்திகதிக்கு முன்னர் தலைவர் அல்லது செயலாளர், பொருளாளரிடமிருந்து அங்கத்துவப் படிவத்தைப் பெற்று அங்கத்துவத்தினை உறுதி செய்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (18)

# இயக்குநர்சபை தெரிவு

வடமராட்சி கிழக்கு பல. நோக்கு கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைத்தெரிவு நேற்றுக்காலை 10.00 மணிக்கு சங்க மண்டபத்தில் சங்க முன்னாள் தலைவரும், மருதங்கேணி பிரதேச செயலருமான திருலிங்கநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கூட்டுறவு உத்தியோகத்தர் எஸ்.மோகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டதுடன், இதில் பொதுச்சபை உறுப்பினர்கள் 83 பேர் கலந்து கொண்டனர். இதில் தலைவராக முத்தையா தங்கவேல் (உடுத்துறை), உபதலைவராக செல்வநாயகம் திரவியநாதன் (மருதங்கேணி), செயலாளராக தங்கராசா காண்டீபன் (அம்பன்) ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களாக ம.வசந்தகுமார், செ.தயாநந்தன், செ.ரததினசிங்கம், சி.ஸ்ரீகலாதன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (116)

# முதியோர் சங்கங்களுக்கு புதிய நிர்வாகத் தெரிவு ஆரம்பம்

வலி. தென்மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவு ரீதியாக முதியோர் சங்கங்களின் புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் முன்னிலையில் இடம்பெறும் இந்த நிர்வாக சபைக் கூட்டங்களில் கடந்த காலததில முதியோா சங்கங்களின செயறபாடுகள் ஆராயப்பட்டு முதியோர்களின தேவைகள் எவ்வாறு பூர்த்தி செய்தல் என்பன தொடர்பாகவும் எதிர்காலத்தில் அவர்கள் செயற்படும் விதம் தொடர்பாகவும் ஆராயப்பட்டு புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்படவுள்ளது.

எனவே, முதியவர்கள் தமது கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு இந்தக்கூட்டம் நடைபெறவுள்ள திகதியினைக் கேட்டறிந்து அன்றையதினம் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# வெப்பத்தின் தாக்கத்தால் கால்நடைகள் இறக்கும் அபாயம்

(சாவகச்சேரி)

வெப்பத்தின் தாக்கத்தால் மேய்ச்சல் இன்றி கால்நடைகள் இறக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கால்நடை வளர்ப்போர் கவலை வெளியிட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக வெப்பநிலை வெகுவாக அதிகரித்த நிலையில் சடுதியாக நீர் நிலைகள் வற்றியுள்ளன.

இதனால் சரசாலை, கப்புதூ உள்ளிட்ட வெளிப்பிரதேசங்களில் நீரின்றி கால்நடைகள் இறக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சரசாலைப் பகுதியைச் சேர்நத ஒருவரின் கால்நடை நேற்று முன்தினம் இவ்வாறு இறந்துள்ளது.

இதனால் கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடமுடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளதாக கால்நடை வளர்ப்போர் கவலை வெளியிட்டுள்ளனர். (இ)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் புனித அன்னம்மாள் தேவாலய நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் நடமாடும் இரத்த வங்கிப் பிரிவினர் இரத்ததான நிகழ்வை ஒழுங்கமைத்துள்ளதுடன் தேவாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் இரத்தம் வழங்கும் குருதிக் கொடையாளர்கள் கலந்துகொண்டு உயிர் காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# குருபூசைதினம்

நல்லூர் தேரடி சித்தர் செல்லப்பா சுவாமிகளின் குருபூசை தினம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது. இதில் திருமுறைகள் ஓதல், நற்சிந்தனை, பாராயணம் என்பன இடம்பெறும். தொடர்ந்து சுவாமிகளின் நினை வாலயத்திலும் தேரடியிலும் விசேட பூசையும் இடம்பெறவுள்ளன.








## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..........................................

முகவரி :- ..........................................


பிறந்த ஆண்டு :- ..........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..........................................

பெற்றோர் கையொப்பம்


# மெத்தா நிறுவனத்தால் நடாத்தப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான நடமாடும் சேவை



(கிளிநொச்சி)

மெத்தா செயற்கை அவயவங்கள் பொருத்தும் நிலையத்தால் 53 ஆவது மாற்றுவலுவுள்ளோருக்கான நடமாடும் சேவை கடந்த 23, 24 ஆம் திகதிகளில் கிளிநொச்சி கருணை நிலையத்தில் நடாத்தப்பட்டது.

இச்சேவையில் இப்பகுதியைச் சேர்ந்த 38 பயனாளிகள் பயனடைந்ததாக நிலையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 25, 26 ஆம் திகதிகளில் கள்ளப்பாடு, முல்லைத்தீவு மீனவர் கூட்டுறவு சமாசக் கட்டடத்தில் நடைபெற்ற நடமாடும் சேவையிலும் 32 பயனாளிகள் நன்மையடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஊனமுற்றவர்களுக்கு இரு செயற்கை அவயவங்கள் இருப்பது நலம். ஏனெனில் சில சமயம் ஒன்று உடைந்துவிட்டால் அடுத்ததைப் பாவித்து தமது பணியைத் தொடரலாம். ஆயினும் ஒரு சிலர் 3- 4 செயற்கை அவயவங்கள் வைத்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது என நிறுவனத்தின் அதிகாரி சின்கிளேயர் பீற்றர் தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த 5 வருடங்களில் மன்னார் வைத்தியசாலையை தலைமை நிலையமாகக் கொண்டு இயங்கும் மெத்தா நிறுவனம் வடகிழக்கில் உள்ள 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாற்றுவலுவுள்ளவர்களின் நலன்கருதி தமது சேவைகளை விரிவுபடுத்தியுள்ளது.

அமலமரித்தியாகிகள் சபையினரின் (OMI) நிதிப்பங்களிப்பின் கீழ் மாங்குளம் A-9 வீதியில் அமைதித்தென்றல் எனும் கட்டடத்தில் எதிர்வரும் மே மாதம் தொடக்கம் எமது கிளை அமைக்கப்படவுள்ளது.

இதில் திங்கள் தொடக்கம் சனி வரை ஊனமுற்றவர்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம். குறிப்பாக யாழ், முல்லை, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ளவர்களும், நெடுங்கேணி, முழங்காவில் போன்ற எல்லைக் கிராம மக்களும் பயனடைய முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க ஜனாதிபதியுடன் ரஷ்யா ஜனாதிபதி ஆலோசனை



ஒரு நாள் பயணமாக சவுதி அரேபியாவுக்கு சென்றிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் உக்ரேன் விவகாரம் தொடர்பாக அமெரிக்கா முன்வைத்துள்ள திட்டங்கள் குறித்து அவசர ஆலோசனை நடத்தினார்.

உக்ரேனின் நிலைத்த தன்மையை உறுதி செய்வது தொடர்பான சர்வதேச நாடுகள் வழங்க வேண்டிய பங்களிப்பு தொடர்பாக ஒபாமாவுடன் பேசிய அவர், இது தொடர்பாக மேற்கொண்டு பேச விரும்புவதாக ஒபாமாவிடம் உறுதி அளித்தார்.

உக்ரேன் விவகாரத்துக்கு இராஜதந்திர ரீதியாக தீர்வு காண்பது தொடர்பாக ரஷ்யா தனது செயற்றிட்டத்தை எழுத்து மூலமாக சமர்ப்பிக்க வேண்டும் என்று புட்டினிடம் ஒபாமா கேட்டுக் கொண்டார்.

'ஜி 8' நாடுகளின் கூட்டமைப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ள ரஷ்யா, அந்த சரிவை சமாளிக்க திணறிவரும் நிலையில், ஒபாமாவுடன் புட்டீன் ஆலோசனை நடாத்தியது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

# விமான இரகசியங்களை மறைக்கிறதா மலேசியா?

## "பேஸ்புக்" கருத்தால் பறிபோனது பதவி




மலேசிய விமானம் குறித்து மலேசியா எதையோ மறைக்கிறது என்று பேஸ்புக்கில் கருத்து தெரிவித்த மூத்த ஏயார் ஏசியா விமானி தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 8ஆம் திகதி மாயமான மலேசிய விமானம் தெற்கு இந்திய பெருங்கடல் பகுதியில் விழுந்துவிட்டதாக மலேசியா கடந்த திங்கட்கிழமை அறிவித்தது.

இங்கிலாந்தைச் சேர்ந்த இனமார்சாட் நிறுவனம் அளித்த தகவலின்படி மலேசியா நாடானது இந்த முடிவுக்கு வந்துள்ளது.

இந்நிலையில், கோலாலம்பூரைச் சேர்ந்த ஏயார் ஏசியா ஏயார் லைன்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த மூத்த விமானி ஒருவர் மலேசிய அரசு கடலுக்குள் விழுந்த விமானம் பற்றிய தகவலகளை மறைபபதாக பேஸ்புக்கில் தெரிவித்துள்ளார்.


இதுதொடர்பாக அந்த விமானி பேஸ்புக்கில் கூறியிருப்பதாவது, கண்டுபிடிக்கப்பட்டதாக கூறப்படும் பொருட்கள் விமானத்தின் பாகங்கள் என்று இதுவரை உறுதி செய்யப்படவில்லை. முதலில் ஆதாரங்களை காட்டிவிட்டு அதன் பிறகு எம்.ஹெச். 370 விமானம் விபத்துக்குள்ளானது என்று கூறுங்கள். அதுவரை உண்மைகளை மறைக்காதீர்கள்.

மேலும் அரசுக்கு இதன் விவரங்கள் தெரியும், ஆனால் அதை தெரிவிக்க மறுக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

பெயர் தெரிவிக்கப்படாத அந்த மூத்த விமானி மலேசிய அரசு விமானம் குறித்த தகவல்களை மறைப்பதாக தெரிவிததால் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

# ராகுல், சோனியாவுக்கு எதிராக வலுவான வேட்பாளர்கள் நிறுத்தப்படுவர்

## பா.ஜ.க.தலைவர் அறிவிப்பு



உத்தரப்பிரதேசத்தில் அமேதி, ரேபரேலி தொகுதிகளில் போட்டியிடும் ராகுல் சோனியாவை எதிர்த்து பா.ஜ.க. சார்பில் வலுவான வேட்பாளர்கள் நிறுத்தப்படுவர் என, பா.ஜ.க. தலைவர், ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் காங்கிரஸ் தலைவர் சோனியா மற்றும் அக்கட்சியின் துணைத் தலைவர் ராகுல் ஆகியோருக்கு எதிராக, லோக்சபா தேர்தலில், வலுவான வேட்பாளர்களை நிறுத்த உள்ளோம்.

சோனியா போட்டியிடும் ரேபரேலி ராகுல் போட்டியிடும் அமேதி தொகுதிகளில் போட்டியிட எங்கள் கட்சியில் வலுவான வேட்பாளர்கள் பலர் உள்ளனர். இது பற்றி நாங்கள் விரிவாக ஆலோசனை நடத்தி வருகிறோம்.வலுவான வேட்பாளர்களை பட்டியலிட்டு, அவர்களின் சாதக, பாதகங்களை ஆய்வு செய்து, விரைவில் வேட்பாளரை அறிவிப்போம் என்றார்.

## கட்சித்தொண்டரை ஓங்கி அறைந்தார் நக்மா



இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடும் நடிகை நக்மா, தன்னை சூழ்ந்த கொண்ட மக்களிடமிருந்து விடுபட திணறியதுடன் அத்துமீறிய இளைஞர் ஒருவரை அறைந்துள்ளார்.

நக்மா போட்டியிடும், உத்தரப்பிரதேச மாநிலத்திலுள்ள ஜாலி கோதி நகரில் நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

பிரசாரத்துக்குச் சென்ற நடிகை நக்மாவை காண்பதற்கு பெரும் எண்ணிக்கையானோர் திரண்டிருந்தனர். நக்மா அங்கு வந்தவுடன் பலர் அவரை நெருக்கமாக சூழ்ந்துகொண்டனர்.

இதன்போது தன்னை மிகவும் நெருங்க முற்பட்ட இளைஞர் ஒருவரின் கன்னத்தில் நக்மா அறைந்துள்ளார். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

அங்கிருந்து புறப்படுவதற்குமுன் கூட்டத்தினரை அமைதிப்படுத்த நக்மா முயன்றபோதிலும் அம்முயற்சி அதிக பலனளிக்கவில்லை.

உலகச் செய்திகள்

# உக்ரேன் மீது ரஷ்யா தாக்குதல் நடாத்தமாட்டாது

## பான் கி மூன் நம்பிக்கை



உக்ரேனில் இனி எவ்வித இராணுவ நடவடிக்கையிலும் ரஷ்யா ஈடுபடாது என்று ஐ.நா.சபையின் பொதுச் செயலாளர் பான். கி-மூன் தெரிவித்துள்ளார்.

உக்ரேன் விவகாரத்தால் உணர்ச்சி கொந்தளிப்பும், பதற்ற நிலையும் அதிகரித்து கொண்டே வருவதை தவிர்க்க இரு நாடுகளின் தலைவர்களையும் நேருக்கு நேர் சந்தித்துப் பேச வைப்பதில் நான் முன்னுரிமை அளிப்பேன்.

இரு நாடுகளுக்குமிடையிலான பிரச்சினையை அவர்களுக்குள்ளாகவே பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று உக்ரேனுக்கு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன். மேலைத்தேச நாடுகளுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான பிரச்சினையால் சர்வதேச நாடுகள் வேறுபட்டு நிற்பது, அவசரம் மற்றும் முக்கியமான இதர பிரச்சினைகளில் பின்னடைவை ஏற்படுத்தி விடக்கூடும்.


இதுபோன்ற அதிக பதற்றம் நிலவும் வேளைகளில் சிறு தீப்பொறி கூட மிகப்பெரிய தீப்பிழம்பாக உருமாறி, விரும்பத் தகாத விளைவுகளை ஏற்படுத்தி விடலாம் என்றார்.

# பெரியண்ணன் மனப்பான்மையில் காங்கிரஸ் தலைமையிலான அரசு

## நரேந்திரமோடி குற்றச்சாட்டு

(புதுடில்லி)

காங்கிரஸ் தலைமையிலான, மத்திய அரசு, பெரியண்ணன் மனப்பான்மையுடன் செயல்படுகிறது எதிர்க்கட்சி ஆட்சி நடக்கும் மாநிலங்களிடம் பாரபட்சம் காட்டுகிறது, என, பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர், நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.



மத்திய பிரதேச மாநிலத்தில் மண்டிலா என்ற இடத்தில், நேற்று முன்தினம் நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தில், அவர் மேலும் தெரிவிக்கையில் மத்திய பிரதேச முதல்வர் சிவ்ராஜ் சிங் சவுகான், காங்கிரஸ் தலைமையிலான, மத்திய அரசால் என்ன பாடுபடுகிறார் என்பது எனக்குத்தான் தெரியும். எதிர்க்கட்சி ஆட்சி நடக்கும், மாநிலங்கள் மீது, மத்திய அரசு, பாரபட்சமாக செயற்படுகிறது. நிதி வழங்குவதிலும் வளர்ச்சி திட்டங்களை செயற்படுத்துவதிலும் மத்திய அரசு பாரபட்சமாகவே செயற்படுகிறது.மாநில அரசுகளின் அதிகாரங்களிலும், உரிமைகளிலும் தலையிடும் வகையில், பெரியண்ணன் மனபபான்மையுடன், மத்திய அரசு செயற்படுகிறது.

பா.ஜ.க. மத்தியில் ஆட்சிக்கு வந்தால், மாநில விடயங்களில் பாரபட்சம் காட்டமாட்டோம் அனைத்து மாநிலங்களையும் ஒரே மாதிரியாக நடத்துவோம். மாநில உரிமைகளிலும், அதிகாரங்களிலும் தலையிடமாட்டோம். எதிர்க்கட்சி ஆட்சி நடக்கும் மாநிலம், ஆளும் கட்சி ஆட்சி நடக்கும் என்ற பாகுபாடு இல்லாமல், அனைத்து மாநிலங்களையும் சகோதர மாநிலங்களாக கருதுவோம்.காங்கிரஸ் தலைவர்கள், முதலில், உங்கள் ஆதரவை பெறுவதற்காக, கையை நீட்டுவர் பின், அந்த கையாலேயே, உங்களை அச்சுறுத்துவர் அதன் பின், அந்த கையால், எந்த அளவுக்கு, உங்களை துன்புறுத்த முடியுமோ, அந்த அளவுக்கு துன்புறுத்துவர் எனத் தெரிவித்துள்ளார்.

# பாரதீய ஜனதாக் கட்சியின் வாக்குறுதி "பலூன்" வெடிக்கும்

## ராகுல் காந்தி கிண்டல்

பாரதிய ஜனதாக் கட்சியின் பலூன் நிச்சயம் வெடிக்கும் என காங்கிரஸ்கட்சியின் துணைத் தலைவர் ராகுல்காந்தி தெரிவிததுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:


கடந்த 2004இல் நடந்த லோக்சபா தேர்தலின் போது இந்தியா ஒளிர்கிறது என, பா.ஜ.க.வினர் பிரசாரம் செய்தனர் அது எடுபடவில்லை. இப்போதும் குஜராத்தைப் போல் அனைத்து மாநிலங்களிலும் வளர்ச்சியை ஏற்படுத்துவோம் என பொய் வாக்குறுதிகளை, பலூனாக்கி பறக்க விடுகின்றனர் இந்த பலூன் கண்டிப்பாக வெடித்துச் சிதறும்.


தேர்தல் விதிமுறைகளை மீறியதாக உ.பி. பொலிசார் எனக்கு எதிராக வழக்கு பதிவு செய்துள்ளனர். நான் வெளிநாட்டில் இருந்த நேரத்தில் என் தொகுதியான, பருக்காபாத்தில் உள்ள மருத்துவமனையில் புகுந்த பொலிஸார் மூன்று சக்கர வண்டிகளை எடுத்துச் சென்றுள்ளனர். அந்த நேரத்தில் நான் அங்கு இருந்திருந்தால் அந்த பொலிசாரை சிறை வைத்திருப்பேன்.

பா.ஜ.க. சார்பில் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதிலிருந்தே பிரதமர் பதவி மீது நரேந்திர மோடிக்கு ஆசை வந்துவிட்டது. ஆட்சி அதிகாரத்தையும் பிரதமர் பதவியையும் கைபபற்றத் துடிக்கிறார். இதற்காக மிகவும் அவசரப்படுகிறார். ஜனநாயக நாட்டில் தேர்தலுக்கு முன்னதாகவே ஒருவரை, பிரதமர் வேட்பாளராக அறிவிப்பது முறையல்ல என்றார்.



# வேலணை, ஊர்காவற்றுறை அபிவிருத்தி; அமைச்சர் டக்ளஸ் தலைமையில் ஆராய்வு





யாழ்.தீவகத்தின் வேலணை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வரும் மின் விநியோக நடவடிக்கைகள் மற்றும் குடிநீர் விநியோகம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலான கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி கலந்துரையாடல் நேற்றைய தினம் இடம்பெற்றது.

இதன்போது, வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக வேலணை மற்றும் ஊர்காவற்றுறை பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் மின்சார விநியோகம் தொடர்பில் அமைச்சர், துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி கேட்டறிந்து கொண்டார்.

மின்சாரம் வழங்கப்படாத இடங்களுக்கு மின்னிணைப்பை வழங்குவது, வீதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்துவது உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இதனிடையே தற்போதுள்ள வறட்சியான காலநிலையை அடுத்து, குறித்த இரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் குடிநீர்ப் பிரச்சினைக்கு உரிய வகையில் தீர்வு காண்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இதன்பிரகாரம், எதிர் காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில், அமைச்சர் விசேட கவனம் செலுத்தினார்.

அத்துடன், தீவகத்தின் வேலணை, ஊர்காவற்துறை, நெடுந்தீவு ஆகிய பிரதேச சபைகளின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட விசேட நிதியொதுக்கீட்டின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டதுடன், அனுமதிக்கப்பட்ட வேலைகளில் நிறைவு செய்யப்பட்டவை மற்றும் செய்ய வேண்டிய வேலைகள் தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடினார்.

செய்யப்பட வேண்டிய வேலைகளைத் துரிதப்படுத்தும் அதேவேளை, முன்னுரிமை அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, வடக்கின் வசந்தம் திட்டப் பணிப்பாளர் குணசீலன், யாழ்ப்பாணப் பிராந்திய மின் பொறியியலாளர் ஞானகணேசன், யாழ்.மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வன், வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன், ஊர்காவற்துறைப் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம், வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் சிவராசா (போல்), ஊர்காவற்துறைப் பிரதேச சபைத் தவிசாளர் ஜெயகாந்தன் (காந்தன்), அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## விசாரணைக்கான...

செவ்வியொன்றில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது நாட்டின் பிரஜைகளை பாதுகாப்பதற்கு அரசாங்கம் தவறும் பட்சத்தில் அந்தப் பொறுப்பினை சர்வதேச சமூகம் நிறைவேற்ற வேண்டியுள்ளது. இதுவே சர்வதேச சட்டமாகும். அரசியல் ரீதியில் அழுத்தம் கொடுப்பதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு செயற்படுவதில்லை. இந்த விடயத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் செயலாளர் நாயகம் ஆகியோர் ஐந்தாண்டுகள் பொறுத்திருந்தனர். உள்ளக ரீதியில் நடவடிக்கை எடுக்குமாறு அனைவரும் வலியுறுத்தியிருந்தனர்.

விசாரணைகளை முன்னெடுத்து பாதிக்கப்பட்டவர் களுக்கு நீதி வழங்குமாறு கோரியிருந்தனர். இந்த விசாரணைகளை முன்னெடுப்பதற்கான பொறுப்பு தற்போது எனக்கு வழங்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்பு இந்த விடயத்தில் மிகவும் முக்கியமானது. எனது இலங்கை விஜயத்தின்போது, அவர்கள் மிகவும் நன்றாக செயற்பட்டனர். இந்த நிலைமையை கையாள்வதற்கான அரசியல் பலம் அங்குள்ளது. ஆயினும், அவர்கள் எவ்வளவு செய்துள்ளனர், எவ்வளவு செய்ய வேண்டும் என்பதை தெரிந்து கொள்வதற்கு அவர்கள் சர்வதேச சமூகம் என்ற ரீதியில் நாம் தேவைப்படுகின்றோம். புனரமைப்பு, ஆயுதக் குறைப்பு மற்றும் உள்ளக இடம்பெயர்வுக்குள்ளான மக்களின் விடயங்கள் இதில் முக்கியத்துவம் வகிக்கின்றன. இரண்டு தரப்பினரதும் பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை வழங்கும் நடவடிக்கைளில் அவர்களின் ஒத்துழைப்பை நான் பெற்றுக் கொள்ளவுள்ளேன். விடுதலைப் புலிகள் அமைப்பினால் பாதிக்கப்பட்ட மக்களும் நீதி கிடைக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

## நல்லிணக்கத்தை...

கையின் மனித உரிமைகள் நிலை குறித்து கண்காணிக்கவும், கோரும், இந்தத் தீர்மானத்துடன் நாம் இணங்குகிறோம்.

இந்தத் தீர்மானம், இலங்கையின் தற்போதைய மனிதஉரிமைகள் நிலை குறித்த மற்றும் உலகளாவிய உரிமை மறுப்பு பற்றிய கவலையையும், மற்றும் இலங்கை மக்கள் அனைவரும் தமது விருப்பங்களை அடையக் கூடிய, ஒரு எதிர்காலத்தை உருவாக்க, முக்கியமான அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்பதையும் எடுத்துக் கூறியுள்ளது.

இலங்கையில் உள்ள எல்லா மக்களுக்கும் அமைதி, உறுதிப்பாடு, சுபீட்சம் என்பன கிடைப்பதற்கு, இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற அனைத்துலக சமூகம் கடமைப்பட்டுள்ளது என்ற தெளிவான செய்தி இந்த வாக்கெடுப்பின் மூலம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

## இலங்கைத்....

நோக்கமாகும். இதுவரை இலங்கை தொடர்பாக இந்தியா எடுத்த நிலைப்பாடுகள் அனைத்தும், இதன் அடிப்படையில் ஆனதே.

ஜெனிவாவில் கடந்த வியாழக்கிழமை இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாததும் இந்த நோக்கத்தை வலுப்படுத்துவதாக அமையும் என்று நம்புகிறோம்.

இலங்கையில் உள்ள தமிழர்கள் நியாயம் பெறவும் முன்னேற்றம் காணவும் பன்னாட்டு சமூகம், இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட வேண்டும். ஜெனிவாவில் இந்திய அரசு எடுத்த நிலைப்பாடு என்பது இதற்கான சுயவிளக்கமாக அமைகிறது.

இலங்கையில் இதுவரை நடந்துள்ள முன்னேற்றப் பணிகளை நாம் அங்கீகரிக்கிறோம்.

இத்துடன், அதிதீவிர பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ள பகுதிகளை குறைப்பது, காணாமற் போனவர்கள் விவகாரம், இராணுவம் கையகப்படுத்திய நிலங்களை படிப்படியாக உரிமையாளர்களிடம் திருப்பி அளிப்பது, குடியிருப்புப் பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தை குறைப்பது உட்பட தமிழர்களின் பல்வகை நலன்களில் இந்தியா மிகுந்த கவனம் கொண்டுள்ளது.

இதைச் செயற்படுத்த, ஐ.நா. வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாதது உதவியாக இருக்கும் என எண்ணுகிறோம். இது இலங்கைத் தமிழர்களின் முன்னேற்றத்திற்கும், இந்திய அரசின் செயல்பாடுகளுக்கும் உதவியாக இருக்கும். இதனுடன், தமிழ்நாடு, புதுச்சேரி மீனவர்களுக்கும் பயன் தருவதாகவும் இருக்கும் எனத் தெரிவித்தார்

## முதல்வர்...

அமைச்சின் செயலாளர் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் யாழ்.சுகாதாரப் பணிப்பாளர், மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மற்றும் மருத்துவ சங்கத்தின் உறுப்பினர்கள் இணைந்த கூட்டத்தில் பொதுப் பரிசோதகர்களது கடமை தொடர்பாக அவர்கள் தங்களுடைய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் இணைக்கப்படும்போது முறையான சுகாதார சேவையை சமூகத்திற்கு உள்ளூராட்சி மன்ற எல்லைக்கப்பால் வழங்கக்கூடியதாக இருக்கும் என்ற கோரிக்கையை ஆராய்ந்த ஆளுநர் அதன் நியாயத்தன்மையினை ஆராய்ந்து அது தொடர்பாகவும், அவர்களது கோரிக்கையின் நியாயத் தன்மையையும் மீளமைக்கப்பட்டுள்ள ஆளணி அடிப்படையில் நேரடியாக சுகாதார நிலையங்களுடைய ஆளணிக்கு உட்பட்டதாகவும் இவர்களை உடனடியாக அந்தந்த சுகாதார வைத்திய அதிகாரி பணிகளுக்கு இணைப்பதற்கான பணிப்புரையை தந்திருந்தார்.

தற்போது இவர்களது கோரிக்கைக்கு அமையவும் பொது நோக்கத்தின் அடிப்படையிலும் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு தனது ஒத்திசைவு இருப்பதாக ஆளுநர் தெரிவித்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## மாகாண...

61 வீத வாக்குகளும், மாத்தறையில் 58 வீத வாக்குகளும், காலியில் 55 சதவீத வாக்குகளும், கொழும்பில் 49 சதவீத வாக்குகளும், கம்பஹாவில் 57 சதவீத வாக்குகளும் களுத்துறையில் 58 சதவீத வாக்குகளும் அளிக்கப்பட்டதாக தேர்தல் கண்காணிப்பகமான பவ்ரல் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே தேர்தல் முறைகேடுகள் குறித்து சில முறைப்பாடுகள் தமக்கு கிடைத்துள்ள போதிலும் கடந்த கால தேர்தல்களைவிட இது சுமூகமாகவே இருந்ததாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களில் ஒன்றான சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் தேசிய அமைப்பாளர் அஹ்மட் மனாஸ் மக்கீன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய வாக்களிப்பு தின சம்பவங்கள் குறித்து 66 முறைப்பாடுகள் தமக்கு வந்ததாகவும் அவற்றில் பேருவளை பகுதியில்நடந்த ஒரு சம்பவமே தீவிரமானதாக இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

பேருவளை சம்பவத்தில் ஆளும் கட்சியின் ஆதரவாளர்களுடனான மோதலில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் மூவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மனாஸ் தெரிவித்துள்ளார்.

## விசாரணைக்கான வசதியை...

ஒருபோதும் ஒத்துழைக்க முடியாது. உள்நாட்டில் விசாரணைகளுக்கான எந்த வசதியையும் நாம் செய்து கொடுக்கப்போவதில்லை

2012 மற்றும் 2013 ஜெனிவா முடிவுகளைப் பார்க்கும்போது தீர்மானத்தை முன்வைத்த தரப்பினருக்கு பெரும்பான்மை வாக்கு கிட்டவில்லை. இம முறை முடிவுகளை நோக்குகையில் அவ்வாறே தீர்மானத்தை கொண்டு வந்தவர்களுக்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்கவில்லை. 47 வாக்குகளில் 23 வாக்குகளே கிடைத் துள்ளன.

இதில் பெரும்பான்மை பலத்தைக் காட்டுவதற்கு 24 வாக்குகள் அளிக்கப்பட்டிருக்க வேண்டும் அதே போன்ற பெரும் பாலானவர்களின் ஆதரவு இந்த தீர்மானத்துக்கு வழங்கப்படவில்லை என்பதைக் குறிப்பிடவேண்டும்.

ஒரு பிரிவினர் தீர்மானத்து க்கு எதிராகவும் மற்றும் ஒரு தரப்பினர் வாக்களிப்பிலிருந்து விலகியும் செயற்பட்டுள்ளனர். இந்த வகையில் இந்த தீர் மானத்தை நடைமுறைப்படுத் துவதற் கான எந்தவித தார்மிக உரிமையும் கிடையாது.

அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் இது தொடர்பில் பாரிய அரசியல் அழுத்தங்களை இத் தீர்மானத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் பிரயோகித்தன. வாக்களிப்பு தொடர்பான சந்தர்ப்பங்களில் இது எமக்குத் தெளிவாகப் புலப பட்டது. அவ்வாறிருந்தும் அவர்களால் பெரும்பான்மை ஆதரவைக் காட்டமுடியாமல் போனது.

இந்தத் தீர்மானம் கொண்டு வரப்படும் முன்பே நாம் ஐ.நா. மனித உரிமைப் பேரவைக்கு எமது தெளிவான ஸ்திரமான நிலைப்பாட்டை எடுத்துக் கூறியிருந்தோம். இந்தத் தீர்மானத்தை எந்த வகையிலும் நாம் ஏற்கப்போவதில்லை என்பதையும் அதில் குறிப்பிட்டிருந்தோம். அந்த நிலைப்பாட்டிலேயே நாம் தொடர்ந்தும் இருந் தோம். மேற்படி தீர்மானத்தில் எவ்வாறு திருத்தம் கொண்டு வருவது அதனை எவ்வாறு பல மிழக் கச் செய்வது போன்ற எந்தவொரு பேச்சுவார்த் தைக்கும் நாம் சமுகமளிக்கவுமில்லை. ஏனெனில் இதனை நாங்கள் ஒரு அரசியல் செயற்பாடாகவே கருதி னோம்.

இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்க ளைப் பார்க்கும்போது அவர்கள் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தோடும் நவநீதம்பிள்ளையோடும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டவர்களே. இந்த வகையில் இதுபோன்ற நூற்றுக் கணக்கில் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு அவை நிறைவேற்றப்பட்டாலும் சர்வ தேச சக்திகள் இலங்கையின் உள்ளக விவகாரங் களில் தலையிட நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் மேற்படி தீர்மானத்தினை நடைமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும். சந்தர்ப்பத்தில் அதற்கான வசதிகளை ஏற்படுத் தித் தருமாறு எமமிடம் கேட்கும். அவர்கள் இங்கு வந்து தேவையான தகவல்களைப் பெறுதல் மற்றும் விசாரணைகளுக்கு எமது ஒத்துழைப் பையும் கோருவர். நாம் அந்த வசதிகளை ஏற்படுத் திக் கொடுக்கப்போவதில்லை. இதனை நாம் ஆரம்பம் முதலே தெளிவாகக் கூறி வந்துள் ளோம் எனத் தெரிவித்தார்.

## புத்திசாதுரியமான...

தேர்தல் தொடர்பில் பாரிய தெளிவு அவர்களுக்குள்ளது. எமது நாட்டு மக்கள் கல்வி அறிவு உடையர்வர்கள். அவர்கள் புத்திசாதுரியமானவர்கள். அதனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தாய் நாட்டை காட்டிக் கொடுக்கமாட்டார்கள்.

ஆகவே கூட்டமைப்பு வெற்றி பெறும் என்பது உறுதி. ஐரோப்பிய குழுக்கள் சில ஒன்றிணைந்து ஜெனிவாவில் தீர்மானமொன்றை நிறைவேற்றி கொண்டன.

அந்த தீர்மானம் எமது நாடு தொடர்பிலா னது. ஆகவே நாட்டு மக்கள் சிறந்த வகையில் பதில் வழங்குவார்கள் என நம்புகின்றேன் எனத் தெரிவித்தார்.

# ஜெனிவாவில் பிரேரணை நிறைவேற அரசாங்கமே முழுமுதற் காரணம்

## குற்றம் சுமத்துகிறது ஐ.தே.க



(கொழும்பு)

ஜெனிவாவில் இலங்கை அரசிற்கு எதிராக பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்வாறான சர்வதேசத்தின் கெடுபிடிகளுக்கு அரசாங்கமே மூல காரணமாகும். நாங்கள் பலதடவைகள் புத்தி சொல்லியும் அவற்றை கண்டு கொள்ளாததன் பயனாக இத்தகையதொரு நிலைமை ஏற்பட்டுள்ளது இனிமேலாவது சர்வதேசத்துடன் முரண்படாமல் புத்திசாலித்தனமாக அரசு நடந்து கொள்ள வேண்டும் என்று ஐ.தே.க.வின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

ஜெனிவாவில் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் இதன் பிற்பாடு ஏழு பேரை கொண்ட குழு இலங்கைக்கு வருகை தந்து விசாரணையொன்றை மேற்கொள்ளும் இச்செயற்பாடானது மிகவும் பயங்கரமானது.

அரசாங்கமானது உள்ளக விசாரணைகளை உரியவாறு மேற்கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்தியிருந்தால் இந்நிலைமை ஏற்பட்டிருக்காது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐ.தே.க.வின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டு குறித்த தீர்மானம் சர்வதேச விசாரணையொன்றை வேண்டி நிற்கிறது. இலங்கை மீது சர்வதேசம் இவ்வாறு முரட்டுத்தனமாக நடந்து கொள்வதற்கு அரசாங்கமே மூல காரணமாகும் எனத் தெரிவித்தார்.

# அரையிறுதிக்குள் தென்னாபிரிக்கா



(சிட்டங்கொங்)

இங்கிலாந்து அணியுடனான நேற்றைய இறுதி வரையான பரபரப்பான போட்டியில் 3 ஓட்டங்களால் வெற்றியீட்டியது தென்னாபிரிக்க அணி அரையிறுதிக்குள் பிரவேசித்துள்ளது.

பிரிவு 1 இற்கான இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி அம்லா (56), டி.வில்லியர்ஸ் ஆட்டமிழக்காது (69) ஆகியோரின் துணையுடன் 5 விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் பிரெஸ்னன் ஜோர்டான், ரெட்வெல், புரோட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

197 ஓட்டங்களை எடுத்தால் வெற்றியெனக் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு, ஹேல்ஸ் 38, பட்லர் 34 போபரா 31 ஓட்டங்களை எடுக்க இறுதி ஓவரில் வெற்றிக்கு 21 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

இதில் பிரெஸ்னன் 4 பந்துகளில் 2 சிக்ஸர் 1 பவுண்டரி அடங்கலாக 17 ஓட்டங்களைப் பெற்ற போதிலும் 3 ஓட்டங்களலால் வெற்றி கைநழுவிப் போனது.

பந்து வீச்சில் பர்னல் 3, இம்ரான் தாஹிர் 2, ஸ்ரெய்ன், ஹென்ட்றிக்ஸ் இருவரும் ஒரு விக்கெட்டை கைப்பற்றினர். ஆட்டநாய்கனாக வில்லியர்ஸ் தெரிவானார்.

# நிரந்தர இடமில்லாத கிராம சேவையாளர்

(அச்சுவேலி)

அச்சுவேலி வளலாய் கிராம சேவைகள் அலுவலகத்திற்கு நிரந்தர அலுவலகம் இல்லாமையால் அலுவலகம் ஒவ்வொரு இடங்களிலும மாறி மாறி இயங்கி வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பல்வேறு தேவைகளுக்கு கிராம சேவையாளரிடம் செல்லும போது அவரது அலுவலகம் நிரந்தர இடத்தில் இல்லாது வெவ்வேறு இடங்களுக்கு மாற்றப்படுவதால் தமது அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதற்கு அலைந்து திரிவதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே ஒரு நிரந்தரக் கட்டத்தை வழங்கி அதில் கிராம சேவையாளருக்கான அலுவலகத்தை அமைத்து உதவுமாறு பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. எனவே இது தொடர்பில் உரிய தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

# இலங்கை–இந்திய மீனவர் பேச்சு விரைவில் ஆரம்பமாகும் சாத்தியம்

இலங்கை மற்றும் இந்திய மீனவர்களுக்கிடையிலான பேச்சு வார்த்தை விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தின் வாக்கெடுப்பின் பின்னர் இலங்கை, இந்தியாவுக்கிடையிலான உறவை வலுப்படுத்திக் கொண்டுள்ளதாக மீன்பிடி அமைச்சு தெரிவித்துள்ளது.

மீன்பிடி அமைச்சின் பேச்சாளர் நரேந்திர ராஜபக்ஷ இது குறித்து கருத்து வெளியிடுகையில்,

மீனவர் தொடர்பான பிரச்சினைகளை இரு நாடுகளும் அரசு மட்டத்தில் பேச்சு நடத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவின் தீர்மானத்திற்கு வாக்களிக்காமல் இந்தியா விலகியிருப்பதாக முடிவெடுத்த சில மணி நேரங்களில், இலங்கையில் தடுத்து வைக்கப்பட்ட இந்திய மீனவர்கள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உத்தரவிட்டார்.

ஜனாதிபதி விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டமை நல்லிணக்க சமிக்ஞையாகவே காணப்படுகிறது.

ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் அனைத்து இந்திய மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டதுடன், அவர்களின் படகுகளும் விடுவிக்கப்பட்டன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நபரொருவரை மோதிய அதிர்ச்சியில் உயிரை விட்டார் பிரிட்டன் பிரஜை

பிரித்தானிய பிரஜை ஒருவர் நேற்றுக்காலை தான் செலுத்திச் சென்ற கெப்ரக வாகனத்தில் நபரொருவரை மோதியதையடுத்து, ஏற்பட்ட அதிர்ச்சியால் உயிரிழந்துள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கருவலகஸ்வெவ பிரதேசத்தில் தங்கியிருந்து மிருக வளர்ப்பில் ஈடுபட்டு வந்த நிகலஸ் எலன் டோன் (வயது 65) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

புத்தளத்திற்கு சென்ற இவர் கருவலகஸ்வெவ நோக்கி திரும்பிக்கொண்டிருந்தபோது அநுராதபுரம் வீதியில் வைத்து நபரொருவரை தனது கெப் ரக வாகனத்தால் மோதியுள்ளார்.

இதனைப் பார்த்த அதிர்ச்சியில் மேற்படி நபருக்கு நெஞ்சுவலி ஏற்பட, அருகிலிருந்தவர்களின் உதவியுடன் அவர் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் புத்தளம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

அவரது வாகனத்தில் மோதுண்ட நபர் சிறு காயங்களுக்குள்ளான நிலையில் புத்தளம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாதுகாப்பு அமைச்சிற்கு ஊடக மையம் ஆரம்பம்

(கொழும்பு)

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் நிர்வாகத்திலுள்ள சகல திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் செய்திகளைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக அமைச்சின் ஊடக மையம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இப் பணிகளை முப்படைகளின் ஊடகப் பிரிவே மேற்கொண்டு வந்தது. எனினும் தற்போது அது பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடகமையமாக மீளமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதற்கிணங்க மேற்படி அமைச்சின் ஊடகமையம் அமைசசின் சகல விடயங்கள் தொடர்பான ஊடக இணைப்பு மையமாக செயற்படவுள்ளது என அமைச்சின் பணிப்பாளர் பிரிகேடியர் பீ. ஆர். வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

# தரம்–2 மாணவனைத் தாக்கிய ஆசிரியை குறித்து முறைப்பாடு

(வவுனியா0

வவுனியா, நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்தில் தரம் 2 இல் கல்வி கற்கும் 7வயது மாணவன் ஒருவருக்கு ஆசிரியை பிரம்பால் அடித்து காயம் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்து வவுனியா சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரி ஜோ.ஜெயக் கெனடியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாது,

குறித்த பாடசாலையில் தரம் 2இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வகுப்பறையை சுத்தம் செய்வதற்காக நேரஅட்டவணை ஒதுக்கப்பட்டுள்ளது. சிறிய மாணவர்கள் என்பதால் குறித்த நேரஅட்டவணைக்கு மாணவர்களின் பெற்றோர் வந்து துப்பரவு செய்து வகுப்பை கூட்ட வேண்டும் என பாடசாலை நிர்வாகத்தால் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

இந் நிலையில் பெற்றோர் சிலர் வேலை காரணமாக பாடசாலைக்கு குறித்த கூட்டு முறைக்கு செல்ல முடியாது என பாடசாலை நிர்வாகத்திடம் தெரியப்படுத்தியுள்ளனர். கடந்த புதன்கிழமை கூட்டு முறைக்கு தரம் 2 இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவரின் பெற்றோர் செல்லவில்லை என்பதால் குறித்த மாணவனின் வகுப்பாசிரியர் மாணவனுக்கு பிரம்பினால் அடித்துள்ளார்.

இதனால் மாணவனின் காலில் நான்கு இடங்களில் தழும்புக் காயங்கள் ஏற்பட்டுள்ளது. மாணவன் அழுது கொண்டு இதனை தனது ஆசிரியருக்கு தெரிவித்த போது இதைக் கொண்டு போய் உன் வீட்டை காட்டு அப்ப தான் கூட்ட வருவார்கள் எனக் கூறியுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மாணவன் பெற்றோருக்கு தெரியப்படுத்தியதும் பெற்றோர் வவுனியா சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரியிடம் முறையிட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த பாடசாலையில் மாணவர்களை இணைப்பதற்கு 3000 ரூபாய் பணம் அறவிடப்பட்டுள்ளதுடன் 100 ரூபாய் பணத்திற்குரிய பற்றுச் சீட்டே வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய 2900 ரூபாய் பணம் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டுக்கள் எவையும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (70)

# சர்வதேச விசாரணைகளுக்கு இடமளிக்க வேண்டாம்

## அரசிடம் கோருகிறது ஹெலஉறுமய

சர்வதேச விசாரணைகளுக்கு இடமளிக்க வேண்டாம் என ஜாதிக ஹெல உறுமய கட்சி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில், ஜாதிக ஹெல உறுமய கட்சி இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

ரஷயா, சீனா உள்ளிட்ட இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த 12 நாடுகளுக்கும் நன்றி பாராட்டுவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார். அமெரிக்காவுடன் நேசம் பாராடடாத பிரேஸில், ஆர்ஜன் டீனா மற்றும் சிசிலி போன்ற நாடுகள் இலங்கைக்கு எதிராக வாக்களித்தமை வருத்தமளிக் கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் ராஜதந்திர உறவுகளில் நிலவி வரும் குறைபாடுகளே இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட பிரதான காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.ராஜதந்திர விவகாரங்களில் அரசாங்கத்தின் அணுகுமுறை கள் திருப்தி அளிக்கும் வகையில் இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாக்களிப்பில் இந்தியா பங்கேற்காத போதிலும், எதிர்காலத்தில் இந்தியாவிற்கு பொருளாதார நலன்களை வழங்கக் கூடாது என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மார்ச் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.